23 Years
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
விளம்பரம்™
VLAMBARAM™
416-282-8059
E-mail: vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www.tamilvanakkam.com
416-282-4978

RBC Insurance
இளமையோ முதுமையோ காப்புறுதி ஒரு வழமை
உங்கள் அனைத்து காப்புறுதி தேவைகளிற்கும் கலந்து ஆலோசிக்க அழையுங்கள்
Jey Ahamparam P.F.P
Insurance Advisor
RBC காப்புறுதியில் விஷேடத்துவம் பெற்றவர்
(Specialized in RBC Insurance)

அத்துடன் உங்கள் வீட்டு வாகன காப்புறுதிகளிற்கும் (Home & Auto) உதவி வழங்கப்படும்.
Call: 416.301.1733

Join Our Brokerage - Real Estate Needs

Raja Mahendran, P.Eng.
Email: raja@mahendran.ca
Tel.:416.315.9397 / www.mahendran.ca

நதி 23 | பாலம் 06 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MARCH 15, 2013

# புதிய பாப்பரசர் ஆர்ஜன்டீனாவிலிருந்து தெரிவானார்



உலகில் உள்ள 120 கோடி கத்தோலிக்க மக்களின் மதத் தலைவராக மார்ச் 13, 2013 இல் Jorge Mario Bergoglio தெரிவுசெய்யப்பட்டார். இத்தாலியில் இருந்து வந்து ஆஜன்ரீனாவில் குடியேறிய பெற்றோருக்கு ஐந்து பிள்ளைகளில் ஒருவராக 1936 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 17 ஆம் திகதி இவர் பிறந்தார். 266 ஆவது பாப்பரசராக தெரிவு செய்யப்பட்ட ஆஜன்ரீனாவை சேர்ந்த Jorge Mario Bergoglio அமெரிக்க கண்டத்தை சேர்ந்த முதலாவது பாப்பரசர் ஆவார். இவர் பாப்பரசர் Francis என அழைக்கப்படுவார். கடந்த ஆயிரம் ஆண்டுகளில் முதலாவதாக தெரிவுசெய்யப்பட்ட ஐரோப்பாக்கண்டத்தை சேராத பாப்ரசர் இவரே ஆவார்.

பாப்பரசர் Francis தனது தாய்மொழியான ஸ்பானிஸ் மற்றும் இத்தாலி, ஜேர்மன் போன்ற மொழிகளில் சிறப்பாக எழுத பேசக்கூடியவர். இவருக்கு சிறுவயதில் ஏற்பட்ட சுவாசம் சம்பந்தப்பட்ட நோயால் அப்போது அவருக்கு ஒரு சுவாசப்பை அகற்றப்பட்டது. இவரது வாழ்க்கை மிகவும் எளிமையானது. ஆடம்பரங்களை விரும்பாதவர். மிகவும் சாதாரண உடைகளை அணியும் இவர் தினமும் வேலைக்கு பேரூந்தில் பிரயாணம் செய்வார். ஒரு சாதாரண தொடர்மாடி ஒன்றில் வாழ்ந்து வருகிறார். தனது உணவை தானே தினமும் சமைத்து உண்பவர். செல்வத்தைத் துறந்து ஏழ்மையை விரும்பியேற்ற இத்தாலியைச் சேர்ந்த Saint Francis of Assisi இன் பெயரை தனது பெயராக பாப்பரசர் தெரிவு செய்ததே இந்த பாப்பரசரின் வருங்காலத் திட்டங்கள் எவ்வழியில் செல்லப் போகின்றன என்பதை கட்டியங்கூறி நிற்பதாக CBC தெரிவித்துள்ளது.

பாப்பரசர் Francis கடந்த முறை 2005 இல் பாப்பரசர் Benedict XVI தெரிவு செய்யப்படும்போது இரண்டாவது அதிகப்படியான வாக்குகளை பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. இம்முறை வாக்களிக்க தகுதி வாய்ந்த 115 கர்தினால்களால் இரண்டாவது நாள் நடை-பெற்ற ஐந்தாவது வாக்களிப்பில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகள் பெற்று பாப்பரசராக தெரிவுசெய்யப்பட்டார். ஏழை எளிய மக்களுக்கு உதவுவதையே தனது வாழ்க்கை முழுவதும் குறிக்கோளாக கொண்டு மிகவும் எளிமையாக வாழ்ந்த பாப்பரசர் Francis கத்தோலிக்க மதத்தலைவராக தெரிவு செய்யப்பட்டதை உலகத் தலைவர்கள் பலரும் வரவேற்று அறிக்கைகள் விட்டுள்ளனர்.

## ஐ.நா.வின் 22 ஆவது மனித உரிமை சபை மாநாடு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை சபை மாநாடு தற்போது ஜெனீவாவில் நடைபெற்று வருகிறது. கடந்த மார்ச் 08, 2013 ஆம் திகதி அமெரிக்காவால் "Promoting Reconciliation and Accountability in Srilanka" என்ற தலைப்பில் ஒரு பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

193 நாடுகளை உறுப்பினர்களாக கொண்ட ஐக்கிய நாடுகள் சபையில் இருந்து 47 நாடுகள் மனித உரிமை சபைக்கு தெரிவு செய்யப்படுகின்றன. இச்சபை வருடத்திற்கு மூன்றுமுறை மார்ச், யூன் மற்றும் செப்ரெம்பர் மாதங்களில் கூடுகின்றது. இந்தக் கூட்டத் தொடர்கள் மூன்று அல்லது நான்கு கிழமை தொடர்ந்து நடைபெறும். இதில் உறுப்பு நாடுகளால் மனித உரிமைகள் தொடர்பான பிரேரணைகள் சமர்ப்பிக்கப்பட்டு, அதன்மேல் திருத்தம் கொண்டு வரப்பட்டு, விவாதிக்கப்பட்டு

தொடர்ச்சி 02ஆம் பக்கம்




MORTGAGE
Best Rates wih Major Banks/Companies
Pasky Kanagasabapathy
Cell: 416 569 3099

Mortgage Agent #M12001098
Fax: 416-291 3601
pkanagasabapathy@orianafinancial.com
• Residential/Commercial needs
• Purchase/Refinancing/Renewal/Switch
• Bankruptcy/Challenged/Bad/New/no credit Business/Private loans
• Debt consolidation/Line of credit Self employed/ New Immigrants/Non Resident
Oriana Financial Group of Canada Ltd. Company#10214

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker

Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

Brand new - Leasing - Used
வாகனம் வாங்குமுன் 10 வருடம் அனுபவம் வாய்ந்த என்னை முதலில் அழையுங்கள்
416.451.0565
குமார் ஜெகசோதி

TOYOTA MARKVILLE
905.294.8100

துரித பணமாற்றுச் சேவை
• 55 ஆண்டுகள் வர்த்தகத்துறையில் முன்னோடிகள்
• கனடாவில் தொடர்ந்து 22 ஆண்டு சேவை
• தந்தையுடன் மைந்தர்களும் இணைந்த சேவை


மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. #3
416.267.8221
3351 Markham Rd. #109
416.321.8221

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துக்கள்
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS RCPS (Glasg)
DENTAL SURGEON
☞ அவசரகால பல் வைத்திய சேவைகள்
☞ பல் அடைத்தல் (White Filling / Silver Filling)
☞ பல் பிடுங்குதல், ஞானப்பல் பிடுங்குதல்
☞ பல்வேர் அடைத்தல் (Root Canal) மூலம் பல் பிடுங்காமல் பாதுகாத்தல்
☞ முரசு கரைதல், முரசிலிருந்து இரத்தம் வடிதல், வாய்துர்நாற்றம் ஆகிய முரசு வியாதிகளுக்குச் சிகிச்சை
☞ சிறுவர்களுக்கான பற்சிகிச்சைகள்
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

# புதிய...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

நிறைவேற்றப்படும்.

அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையில் பலவிடயங்கள் இருந்தாலும் அவை எல்லாம் பரிந்துரைகளாகவும், கேட்டுக் கொள்ளப்படு பவைகளாகவும் மட்டுமே இருக்கின்றன. எந்த ஒரு விடயமும் இலங்கை அரசுக்கு உறுதியாக கட்டளை இடுவதாக இல்லை.

“ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளரின் அலுவலகத்தின் (OHCHR) அறிக்கையில் குறிப்பிட்டுள்ள மனித உரிமை ஆணையாளரின் சுதந்திரமான அனைத்துலக விசாரணைகள் இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள் மீது நடைபெறவேண்டும் என்ற கோரிக்கையை வரவேற்பதுடன் இலங்கை அரசாங்கம் அதை ஏற்று நடைமுறைப்படுத்த வேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.”

“OHCHR இலங்கை அரசாங்கத்தின் அனுமதியுடன் (concurrence) மேற்கூறிய பரிந்துரைகளை இலங்கையில் அமல்படுத்த தொழில்நுட்ப உதவிகள் வழங்கவேண்டும் என ஊக்குவிக்கிறோம் (encourage)”.

“OHCHR, 24 ஆவது மனித உரிமை சபை கூட்டத்தொடரில் (செப்ரெம்பர் 2013) மேற்கூறிய நடவடிக்கைகள் எவ்வாறு செயல்படுத்தப்படுகின்றன என ஒரு இடைக் கால அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.”

மேலே கூறப்பட்டவை அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணையில் உள்ள சில விடயங்கள். இவற்றுக்கு மற்றைய உறுப்பு நாடுகளால் திருத்தம் கொண்டுவருவதற்கு இன்னும் போதிய நாட்கள் உண்டு.

இப்பிரேரணை மீதான வாக்கெடுப்பு மார்ச் 21, 2013 இல் நடைபெறும்.

இலங்கை அரசு இந்த பிரேரணையை நான்றாக ஆராய்ந்து வருவதாகவும் அது தொடர்பாக இலங்கை அரசின் உத்தியோகபூர்வமான பதில் விரைவில் வெளியிடப்படும் எனவும் அமைச்சர் மகிந்தா சமரசிங்க தெரிவித்துள்ளார். இந்தியா தனது நிலைப்பாட்டை அமெரிக்கா சமர்ப்பித்த பிரேரணைக்கு திருத்தங்கள் மேற்கொண்ட பின்னர் இறுதியாகவே தெரிவிக்கும் எனவும், இந்தியா இலங்கை அரசிற்கு சார்பான முடிவையே எடுக்கும் எனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சின் செயலாளர் கருணாதிலக அமுனுகம தெரிவித்தார்.

இந்திய அரசியல்வாதி சுப்பிரமணியன் சுவாமி தெரிவிக்கையில் அமெரிக்கா இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறல் தொடர்பாக சர்வதேச விசாரணையை கேட்டு தீர்மானம் சமர்ப்பித்திருப்பது இலங்கைக்கு எதிரான மிகவும் தீவிர நிலையாகும். பிரேரணை வாக்கெடுப்பிற்கு விடப்பட முன்னர் இப்பிரேரணையின் “சர்வதேச விசாரணை” என்னும் விடயம்






“இலங்கை அரசு தனது சுயாதீனமான விசாரணை” நடத்த வேண்டும் என மாற்றப்பட்டு விடும் என தான் நம்புவதாக கூறியுள்ளார். அவர் மேலும் தெரிவிக்கை யில் இந்திய அரசு இலங்கையில் சர்வதேச விசாரணை நடத்த வேண்டும் என்னும் தீர்மானத்திற்கு ஆதரவு தெரிவிக்கமாட்டாது. ஏன் என்றால் இது காஷ்மீர் விவகாரத்தில் சர்வதேச விசாரணையை கோருவது போலாகும் என குறிப்பிட்டுள்ளார்.

மனித உரிமை சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டால் அதற்கு எதுவித பலனும் இல்லை. அதை உறுப்பு நாடுகள் ஏற்று நடக்க வேண்டும் என ஒரு நிபந்தனையும் இல்லை. அவ்வாறான தீர்மானத்தை உறுப்பு நாடுகள் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவர்கள் மீது எந்த நடவடிக்கையும் ஐக்கிய நாடுகள் சபையால் எடுக்கமுடியாது.

இவ்வாறு ஒரு தீர்மானம் ஐக்கியநாடுகள் பாதுகாப்பு சபையில் எடுக்கப்பட்டாலே அதை உறுப்புநாடுகள் ஏற்று நடக்க வேண்டும். அவ்வாறு அமலாக்கப்பட்ட தீர்மானத்தை உறுப்புநாடுகள் ஏற்று நடக்கா விட்டால் அந்த நாட்டின் மீது பொருளாதார தடையை விதிக்கும் உரிமை ஐக்கிய நாடுகள் சபைக்கு உண்டு. ஆனால் பாதுகாப்புச் சபையில் இலங்கைக்கு எதிராக ஒரு தீர்மானம் சமர்ப்பிக்கப்பட்டால் அதை ரஷ்யா அல்லது சீனா தனது வீற்ரோ (Veto) உரிமையை பாவித்து தனி ஒரு நாடாகவே அத்தீர்மானத்தை செல்லுபடியானதாக்கி விடும் என்ற நம்பிக்கை இலங்கை அரசிற்கு உண்டு.

## இறுதியுத்தத்தில் இந்தியாவின் பங்கு

இறுதியுத்தத்தில் இந்தியாவின் பங்கு இருந்தது தமிழ் மக்களால் சந்தேகிக்கப் பட்டு வந்தது. அதை தற்போது இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஏ.கே. அந்தோனி உறுதி செய்துள்ளார். இலங்கை அரசுக்கும் இந்தியாவிற்கும் இடையே ஒரு உடன்படிக்கை ஒக்ரோபர் 2008 இல் கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் படி விடுதலைப்புலிகளுக்கும் தமிழ் நாட்டுக்கும் இடையேயான போக்குவரத்து இந்திய அரசாங்கத்தால் கண்காணிக்கப்பட்டு வந்தது. இந்த அறிக்கையில் இந்திய மீனவர்களின் நடமாட்டம் இலங்கை எல்லைக்குள் செல்வது தடுக்கப்படும் என உறுதி செய்யப்பட்டிருந்தது. இதுவே இலங்கைக் கடற்படைக்கு கடல் புலிகளையும் அவர்களுக்கு வரும் விநியோகங்களையும் அழிப்பதற்கு உதவியாக இருந்தது. இந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட சில நாட்களின் பின்னரே பூநகரியை இலங்கை இராணுவத்தின் 58ஆவது பிரிவு கைப்பற்றியது.



விளம்பரம்
VLAMBARAM

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
ஊடகப்பொறுப்பாளர்: விஜய்பாலன்
தட்டச்சு: கலா
அலுவலக முகாமையாளர்: நிலானி
பதிப்பு: Can Media Publishing Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com/www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# வாசகர் எண்ணங்கள்

விளம்பரம்™ ஐ வாசிப்பவர்கள் தங்கள் எண்ணக்கருவை தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். ஆக்கபூர்வமான உங்கள் கருத்தை இப்பகுதியில் வெளியிடுவோம். உங்கள் அபிப்பிராயங்களைக் கடிதம் மூலம், தொலைநகல் மூலம் அல்லது மின்னஞ்சல் மூலம் அனுப்புமாறு கேட்டுக்கொள்கிறோம்.

1. Vlambaram Publications Inc. , 5215 Finch Ave. E. #201, Toronto, ON M1S 0C2
2. Tel.: 416.282.8059
3. Fax: 416.282.4978
4. email: vlambaram@sympatico.ca
5. web: www.vlambaram.com www.tamilvanakkam.com

## வாசகர் எண்ணம்

**ஆசிரியர் விளம்பரம்**

உங்கள் பத்திரிகையை தவறாமல் படிப்பேன் நான். நல்ல ஆக்கங்களை தவறாமல் உள்ளடக்கிய ஒரு பத்திரிகை வாசகர்களுக்கு நல்ல அறிவையும் தருகிறது. கூடுதலாக முதியோருக்கு மன அழுத்தத்தைக் குறைக்கிறது. உங்கள் பத்திரிகையில் வரும் ஆக்கங்கள் பொக்கிசமாக எங்களை வந்தடைகிறது. குறிப்பாக சிறியோர், முதியோர் இருபாலாரையும் பரவசப்படுத்தும் பத்திரிகை விளம்பரம். 'அகணியின்' காலத்தோடு வளரும் கணினிகள் என்ற ஆக்கம் இருபாலாரையும் பரவசப்படுத்துகிறது. உங்கள் பத்திரிகை மூலம் அகணிக்கு எங்கள் வாழ்த்துக்கள். மற்றும் கனடிய தகவல்கள், ஆன்மீகம், மருத்துவம், யோகா, தொடர்கதை, விஞ்ஞானம், அரசியல், இலக்கியம், கல்வி, திரைவிமர்சனம் எல்லாம் உள்ளடக்கிய ஒரு பஞ்சாமிர்தம்.

இன்னும் வர வேண்டிய விடயங்கள் பல தவறாமல் வரும் என்ற ஆவலுடன் இருக்கிறோம். தொடர்ந்து விமர்சனங்கள் உங்களை தவறாமல் வந்தடையும்.

நன்றி
இ. ஆனந்தராஜா

# கனடா ஒரு கண்ணோட்டம்

## கடந்த இதழ் தொடர்ச்சி

### கடந்தகால, தற்கால, எதிர்காலப் பொருத்தனைகள்

1701 முதல் 1923 வரை பிரித்தானிய, கனடிய அரசாங்கங்கள் பழங்குடி மக்களுடன் உடன்படிக்கைகள் அல்லது பொருத்தனைகள் பலவற்றைச் செய்து கொண்டன. தமது காணி உரித்தைக் கைவிடுவதற்குக் கைமாறாகச் சில உரிமைகளையும் நன்மைகளையும் பழங்குடி மக்களுக்கு அப்பொருத்தனைகள் வழங்கின. ஒவ்வொரு பொருத்தனையும் தனித்துவமானது. ஒவ்வொன்றும் பற்றுறுதியுடன் கூடிய வாக்குறுதியாகவே நோக்கப்படுகிறது.

காணி உரிமைகள், மற்றும் பிற உரிமைகள் குறித்துப் புதிய உடன்படிக்கைகள் செய்வதற்காகப் பழங்குடிக் குழுமங்களும் கனடிய அரசாங்கமும் தற்பொழுதும் பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றன. தற்கால உடன்படிக்கைகள், காணி உரித்து இணக்கங்கள் எனப்படும். ஒரு காணி உரித்து இணக்கத்தின் பயனாகவே கனடாவின் ஆகப்புதிய ஆள்புலமாகிய நுனவுற் தோற்றுவிக்கப்பட்டது.

பழங்குடி மக்கள் தத்தம் அலுவல்களைத் தாமே தீர்மானித்து நிர்வகிக்கும் வல்லமையை மீட்டுக்கொள்வதற்கு ஏதுவாக அவர்களுடன் கனடிய அரசாங்கம் தொடர்ந்து பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதுவே தன்னாட்சி எனப்படும். அவர்களுடைய பொருள்வளத்தையும், வாழ்க்கைத்தரத்தை யும் மேம்படுத்துவதற்கு அவர்களுடன் கனடா ஒத்துழைத்து வருகிறது.

பழங்குடி மக்கள் தனித்துவமான வரலாறுகள், பண்பாடுகள், மொழிகள் படைத்தவர்கள். கனடிய சமூகத்தில் அவர்கள் தொடர்ந்தும் முன்னின்று பங்கு வகித்து வருகிறார்கள்.

மூன்று சமுத்திரங்கள் கனடாவின் எல்லைகளாய் அமைந்துள்ளன: அதன் மேற்கில் பசிபிக் சமுத்திரமும், கிழக்கில் அத்திலாந்திக் சமுத்திரமும், வடக்கில் ஆட்டிக் சமுத்திரமும் அமைந்துள்ளன.



## கனடாவின் புலங்கள்

கனடா 1 கோடி சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட நாடு. அது பல்வேறு புவியியற் பகுதிகளையும், பின்வரும் தனித்துவமான புலங்கள் ஐந்தையும் கொண்டது:

- அத்திலாந்திக் புலம்
- மத்திய கனடா
- புல்வெளிப்புல மாகாணங்கள்
- மேற்குக் கரையோரம்
- வடபுலம்

## நாட்டின் தலைநகரம்

கனடா நாட்டின் தலைநகரமாகிய ஒட்டாவா, ஒன்ராறியோ மாகாணத்தில் அமைந்துள்ளது. கூட்டாட்சி அரசாங்கமும் நாடாளுமன்றக் கட்டடங்களும் அங்குதான் அமைந்துள்ளன.

## மாகாணங்களும் ஆள்புலங்களும்

கனடாவில் 10 மாகாணங்களும் 3 ஆள்புலங்களும் உள்ளன. ஒவ்வொரு மாகாணத்துக்கும் ஆள்புலத்துக்கும் சொந்தமாக ஒவ்வொரு தலைநகரம் உண்டு. கனடாவின் தலைநகரத்தையும் உங்கள் மாகாணத்தின் அல்லது ஆள்புலத்தின் தலைநகரத்தையும் நீங்கள் அறிந்திருக்க வேண்டும்.

## மக்கள்தொகை

கனடாவின் மக்கள்தொகை மிகவும் குறைவு. ஏறத்தாழ 3 கோடியே 10 இலட்சம் மக்களே இங்கு வாழ்கிறார்கள். கனடிய மக்களுள் பெரும்பாலானோர் நாட்டின் தென் புலங்களிலேயே வாழ்ந்து வருகிறார்கள்.

தொடரும்... *- மணி வேலுப்பிள்ளை*

| பிரதேசம் | மாகாணம்/ஆள்புலம் | தலைநகரம் |
|---|---|---|
| அத்திலாந்திக்புலம் | நியூபவுண்லாந்து-லாபிரடோர்<br>பிறின்ஸ் எட்வேட்தீவு<br>நோவா ஸ்கோஷியா<br>நியூ பிறவுண்ஸ்விக் | செ.ஜோன்ஸ்<br>சாளொற்டவுண்,<br>ஹலிபாக்ஸ்<br>பிறெட்றிக்டன் |
| மத்திய கனடா | குவிபெக்<br>ஒன்றியோ | குவிபெக் மாநகரம்<br>ரொறன்ரோ |
| புல்வெளிப்புலமாகாணங்கள் | மனிற்றோபா<br>சஸ்கச்சுவான்<br>அல்பேட்டா | வின்னிபெக்<br>றிஜைனா<br>எட்மன்டன் |
| மேற்குக் கரையோரம் | பிரிட்டிஷ் கொலம்பியா | விக்டோரியா |
| வடபுலம் | நுனவுற்<br>வடமேல் ஆள்புலங்கள்<br>யூக்கன் ஆள்புலம் | இக்காலிற்<br>யெலோனைவ்<br>வைட்ஹோர்ஸ் |

APPLEMORE AUTOMOTIVE
உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்
ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility
- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing
416-285-4998
435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6
SPECIAL

# "ஒவ்வொரு மனிதரும் ஆரோக்கியம் மற்றும் வளமான வாழ்வையே விரும்புகிறனர். உள்நிலையிலும் வெளிப்புறத்திலும் இயற்கையோடு இயைந்திருப்பதே உண்மையான ஆரோக்கியத்தின் அடிப்படையான விளக்கம்" - சத்குரு

'அற்புதமான அனுபவம்! இங்கிருக்கும் ஒருங்கிணைப்பாளர்களும் தன்னார்வ தொண்டர்களும் மசாஜ் செய்வோரும் இப்படியொரு மகத்தான அனுபவத்தை எனக்கு வழங்கியுள்ளனர். இங்கு எனக்கு அடிப்படையான யோக ஆசனங்கள் கற்றுக் கொடுக்கப்பட்டன. மேலும் என் வாழ்க்கை முறையால் மிகுந்த மன அழுத்தத்திற்கு உள்ளாகும் எனக்கு அமைதியான தியானமும் தரப்பட்டது. இந்த அனுபவம் மிக, மிக அற்புதமாக இருந்தது. எழில் கொஞ்சும் பசுமையான சூழ்நிலை, தியான மண்டபங்கள், மேலும் அங்கு நடத்தப்பட்ட வகுப்பு என அனைத்துமே மிக அற்புதம்," என்பவர் இளம் வயதுக்காரர் ஆன திரு. சுனில் முரளிதரன், பெங்களூருவைச் சேர்ந்த இன்ஜினியர்.

அப்படி எங்குதான் சென்றார் திரு. சுனில்? யோகா செய்ய வேண்டுமென்றால் குருவை தேடிச் செல்ல வேண்டும். மசாஜ் செய்ய வேண்டுமென்றால் கேரளத்திற்கு டிக்கெட் போட வேண்டும். இரண்டும் ஒரு சேர அதுவும் தன்னார்வ தொண்டர்களுடன் என்று பார்க்கையில் "ஈஷா யோகா மையம்" என திட்டவட்டமாக புரிகிறது. கண்களில் உற்சா கத்துடன் புத்துணர்வோடு பேசும் சுனிலிடம் தென்படுவதோ ஆரோக்கியப் புன்னகை.

Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org

"எனக்கு இருதய பிரச்சினை இருந்தது, அச்சமயத்தில் தான் நான் ஈஷா யோகா மையம் சென்றேன். அப்போது என்னால் சிறிது தொலைவு கூட நடக்க இயலவில்லை. நான் மையத்தில் தொடர்ந்து நான்கு வாரங்கள் தங்கி சில யோகப் பயிற்சிகள் மற்றும் சில வைத்திய முறைகளை கடைப் பிடித்தேன். அதன் மூலம் பை-பாஸ் அறுவை சிகிச்சையை தவிர்த்துவிட்டேன். 6 கி.மீ மலையேற்றம் செல்லும் அளவிற்கு உடல் நலம் தேறியது. எனக்கு அளிக்கப்பட்ட மருத்துவத்தினால் மட்டும் இது சாத்தியமில்லை. மையத்தின் சூழ்நிலை, உணவு, மக்களின் அன்பு, அரவணைப்பு இவையே நான் முழுவதுமாக நிவாரணம் பெற துணையாயிருந்தது" என தான் மறுவாழ்வு பெற்ற அனுபவத்தை நம்முடன் பகிர்ந்துக் கொள்பவர் ஈரோட்டை சேர்ந்த தொழிலதிபர், திரு. சதாசிவம் அவர்கள்.

திரு. சதாசிவம் அவர்களுக்கு சத்குருவின் வழிகாட்டுதலோடு சித்தா, ஆயுர்வேதா, சிறிதளவு நேச்சுரோபதி, யோகா இவற்றின் சீரான கலவையாய் கோவை ஈஷா யோகா மையத்தில் அமைந்துள்ள ரெஜீவினேஷன் சென்டரில் (Rejuvenation Center) சிகிச்சை வழங்கப்பட்டது.

இவர்களுக்கு மட்டுமல்ல நாள்தோறும் ரெஜீவினேஷன் சென்டருக்கு வந்து செல்வோர் பலரின் அனுபவங்களும் இவ்வாறே அமைந்துள்ளது. 20 வருடங்களாய் இன்சுலின் ஊசி போட்டுக் கொண்டவர்களும் இன்சுலின் தேவையின்றி போன கதையும் இங்குண்டு. ஒரு சிலருக்கு மறுவாழ்வு கொடுப்பதாயும் மற்றும் சிலருக்கு புத்துணர்வூட்டுவதாயும் விளங்கும் ரெஜீவினேஷன் சென்டரை பற்றி சத்குருவின் வார்த்தைகளில், "இங்கு உடலின் முழு அமைப்புமே முற்றிலும் புதிய விதத்தில் கையாளப்படுகிறது. உங்களுடைய உடல் அணுக்களையும் வளர்சிதை மாற்றத்தையும் தூண்டிவிடுவதன் மூலம் உங்கள் உடலே அதனை திருத்தி அமைத்துக் கொள்ளச் செய்யப் படுகிறது. நீங்கள் எம்மாதிரியான மருந்து உட்கொண்டாலும் உங்கள் உடல் தான் தன்னை தானே திருத்திக் கொள்கிறது. மருந்தல்ல. அதனால் இங்கு சரிவிகிதமான உணவின் மூலமும், சரியான உடற்பயிற்சி யுடன் உடலிற்கு தேவையான காலமும் கொடுத்து குறிப்பிட்ட சிலவகையான மூலிகைகள் மற்றும் சில பொருட்களின் உதவியுடன் உங்கள் உடல் இயக்கத்தை பெரிய அளவில் புத்துணர்வூட்ட முடியும். இன்றைக்கு வயோதிகம் என்றால் மருந்து, மாத்திரை, ஆஸ்பத்திரி என்றாகிவிட்டது. உங்கள் உடலில் செயல்படும் புத்துணர்ச்சி முறை சரியாக தூண்டப்படுமானால் வயோதிகம் என்பது இம்சையாக இருக்காது" என்னும் சத்குரு அவர்கள், "இந்த ரெஜீவினேஷன் சென்டர் ஒரு அழகியல் கூடத்தை (SPA) காட்டிலும் பல விதங்களில் வித்தியாசமானது" என்றும் சொல்கிறார்.

ஈஷா யோகா மையம் தொடங்கிய புதிதில் இங்கு வந்து செல்வோருக்கு உதவும் விதமாய் தொடங்கப்பட்ட யோக மருத்துவமனையின் தேவை பெருகவே 6 ஆண்டுகளுக்கு முன்னர் ரெஜீவினேஷன் சென்டராய் புது வடிவம் பெற்றது. இங்கு சித்த மருத்துவ முறை, ஆயுர்வேத மற்றும் ஸ்விடிஷ் மஸாஜ் முறைகள், குறிப்பிட்ட வகையான நேச்சுரோபதி சிகிச்சைகள், பழங்கால யோக முறைகளோடு சில அரிய மூலிகைகளை பயன்படுத்தியும் தேவைக் கேற்ப சிகிச்சை வழங்கப்படுகிறது. இங்கு வழங்கப்படும் ஒவ்வொரு சிகிச்சை முறைக் கும் அத்துறையை சேர்ந்த கை தேர்ந்த நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு உள்ளனர்.

பாரம்பரியமாக ஆயுர்வேத சிகிச்சை முறையில் சிகிச்சை அளித்து வருபவர் களால் இங்கு மசாஜ் செய்யப்படுகிறது. இவர்கள் பிரத்யேகமாக கேரளத்திலிருந்து வரவழைக்கப்பட்டுள்ளனர். நேச்சுரோபதிக்கும் ஸ்விடிஷ் மசாஜிற்கும் அம்முறைகளில் கை தேர்ந்தவர்கள் உள்ளனர். சித்த மருத்துவத்திலும் ஆங்கில மருத்துவத்திலும் தேர்ச்சி பெற்ற மருத்துவர்களும் மையத்திலேயே உள்ளனர். அனைத்திற்கும் முத்தாய்பாக சத்குரு அவர்களால் இவ்வுடல் குறித்து பயிற்சியளிக்கப்பட்ட பிரமச்சாரிகள் இச்சிகிச்சைகளில் முக்கிய பங்கு வகிக்கின்றனர்.

புத்துணர்வு என்றால்! பெரும்பாலான அழகியல் கூடங்கள் ஒருவருக்கு இனிமையான இளைப்பாறலையே வழங்குகின்றன. ஆனால் அவர்களுக்கு உண்மையில் புத்துணர்வு என்பதை பற்றி தெரிந்திருக்கவில்லை. இந்த அழகியல் கூடங்கள் நமக்கு ஒரு நிலையில் வேலை செய்யத்தான் செய்கின்றன. ஆனால் நாம் இங்கு புத்துணர்வு என்பதை முற்றிலும் மாறுபட்ட ஒரு பரிமாணத்தில் அணுகுகி றோம். ஆரோக்கியம் என்பது தனியொருவர் தன் உடலை எவ்வாறு பயன்படுத்தி அல்லது துஷ்பிரயோகப்படுத்தி இருக்கிறார். எவ்வாறான வாழ்க்கை முறையை கடை-பிடிக்கிறார் என்பவற்றைப் பொறுத்து தனியொருவருடைய உடல் மாறுபடுகிறது. நீங்கள் யோகப் பயிற்சிகளை தொடர்ந்து செய்து வருகையில் எல்லா விதத்திலும் ஐந்து வயதாவது நீங்கள் குறைந்துள்ளதை கவனிக்க முடியும். இப்பயிற்சிகள் உங்கள் சக்தி நிலையிலும் உங்கள் உடலின் உயிரோட்டத்திலும் பெரிய அளவில் தாக்கம் ஏற்படுத்துவதால் உங்கள் வயதை நீங்களே மறந்து போகும் அளவிற்கு இப்பயிற்சிகள் உங்களை மாற்றி அமைக்கிறது. இதுவே ரெஜீவினேஷன் சென்டரின் மையநோக்கமும் கூட.

ரெஜீவினேஷன் சென்டரில் இருவகையாய் ஒருவரின் உடலில் ஏற்படும் இடர் அணுகப்படுகிறது. திரு. சதாசிவம் அவர்கள் மேற்கொண்டது "யோக மார்கா" என்னும் 21 நாள் சிகிச்சை நிகழ்ச்சி. இந்நிகழ்ச்சியில் கிட்டதட்ட எல்லா வகையான நாட்பட்ட நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. அதில் சர்கரை நோய், பைல்ஸ், தலைவலி, உடற் பருமன், சைனஸ், மூட்டு வலி, ஹைப்பர் டென்ஷன், இருதயம் சம்பந்தமான



## சத்குரு வாசுதேவ்

பிரச்சினைகளும் உள்ளடக்கம். இவ்வகை யான நோய்களுக்கு முன்னர் குறிப்பிட்டபடி சித்த மருத்துவம், ஆயுர்வேத தெரபிகள் போன்ற மாற்று மருந்துகளின் தனித்துவமான கலவை வழங்கப்படுகிறது. இவ்வகுப்பு செல்வதற்கு ஈஷா யோகா அடிப்படை வகுப்பை செய்திருக்க வேண்டும். ஏனெனில் யோக மார்கா நிகழ்ச்சியை பிணைக்கும் நூலிழையாய் யோகா விளங்குகிறது.

சத்குரு அவர்களால் இம்முறைகளில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ள ஈஷா பிரம்மச்சாரிகளான மா உஜ்ஜீவலாவும் மா சமபுத்தியும் இது பற்றி பேசும் போது "நாம் இங்கு அவர்களுக்கு சரியான சூழ்நிலையை உருவாக்கி, அவர்களுடைய ஆரோக்கியத் திற்கு தேவையான ஸ்திரமான அடித்தளம் அமைத்துக் கொடுக்கிறோம். அவர்கள் வீட்டிற்கு சென்றாலும் தன் வாழ்க்கை சூழ்நிலையை எவ்வாறு உருவாக்கி உன்னதமான ஆரோக்கியம் உணரலாம் என்பதற்கும் இங்கு முன்மாதிரி அமைத்துக் கொடுக்கிறோம். அதோடு அல்லாமல் இங்கு வருவோருக்கு அடிப்படையான, ஆனால் மிக சக்தி வாய்ந்த யோகப் பயிற்சிகளும் கற்றுத் தருகிறோம்" என்கின்றனர்.

ரெஜீவினேஷன் சென்டரில் 6 வருட அனுபவம் கொண்ட இருவரும் இங்கு வகுப்புகள் நடக்கும் பொழுது நிகழ்ச்சியில் பங்குபெறும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி சிகிச்சை அளித்து வருகின்றனர்.

சிகிச்சை அளித்து நல்வாழ்வு வழங்கும் சிகிச்சை வகுப்புகள் ஒருபுறமிருக்க புத்துணர்வூட்டும் புத்துணர்வு நிகழ்ச்சிகளும் மறுபுறம் நடந்துக் கொண்டிருக்கிறது. திரு. சுனில் அவர்கள் மேற்கொண்டது ஆயுர் ரசாயனா எனப்படும் ஒரு புத்துணர்வு நிகழ்ச்சியைத் தான். சரி, வயோதிகத்தில் தான் சிகிச்சை என்றால் இளமையில் என்ன என்று இவரை பார்த்து நீங்கள் கேட்கலாம். இன்றைய பரபரப்பான வாழ்க்கை சூழலில் வயது வேறுபாடின்றி நோய் என்பது எல்லா தரப்பினருக்கும் பொதுவாகி போய்விட்டது. மன அழுத்தம், அதனால் ஏற்படும் உளைச்சல், உடல் சோர்வு, விளைவு... உடல் மற்றும் மன சூழலில் சிக்குண்டு, துவண்டுப் போய்விட்டனர் இன்றைய இளைஞர்கள். இன்றைய கம்ப்யூட்டர் யுவதிகளுக்காக திரு, சுனில் அவர்கள் மேற்கொண்டதை போன்ற ஆயுர் நிகழ்ச்சி களும் ரெஜீவினேஷன் சென்டரில் உள்ளது.

இந்த புத்துணர்வு நிகழ்ச்சிகளை பற்றி மா

தொடர்ச்சி 14ஆம் பக்கம்





விற்பனைக்கு



Mccowan/Steeles
2+1பெட்ரூம் & 2 வோஷ்ரூம் யூனிட் பாடசாலை, ஷாப்பிங் மோல், லைப்ரரி , TTC மற்றும் பல வசதிகளுக்கருகில்,

Meadowale/EllesmereRd
4பெட்ரூம் & 4 வோஷ்ரூம் & டபிள் கராஜ்
(3 வருட புதிய வீடு)

இத வாங்க விருப்பம் தான் ஆனா .... டவுன் போதாதே???
கிரெடிட் கூடாதே? மோட்கேஜ் எப்பிடி செய்வது?

அட அவ்வளவு தானா ?? அழையுங்கள்; **JEY 416-624-4843**



வாடகைக்கு



Victoriapark/Eglinton
2+1பெட்ரூம் & 2 வோஷ்ரூம் யூனிட்

Morningside/Passmore
4பெட்ரூம் & 3 வோஷ்ரூம்

rapid realty inc. 416-259-2002 **"Rapid Response; Rapid Results"**

211-80 Nashdene Road, Scarborough ON M1V 5E4

# மோட்கேஜ் கிளினிக்

- ⇒ லைன் ஒப் கிரெடிட்(equity) எடுக்க வேண்டுமா?
- ⇒ கடன்களை ஒன்றுபடுத்தி எல்லா பேமன்டையும் ஒரே பேமண்டாக மாற்ற வேண்டுமா?
- ⇒ ரீபைனான்ஸ் செய்ய வேண்டுமா?
- ⇒ 2வது மற்றும் 3வது மோட்கேஜ் தேவையா?
- ⇒ பாங்க்ரப்சி, கொன்சுயுமர் புறப்போசல் செய்தோருக்கு மோட்கேஜ் தேவையா?
- ⇒ உரிய நேரத்தில் மோட்கேஜ் தவணைப் பணத்தினை செலுத்தமுடியாது பவர் ஒப் சேலினை எதிர்நோக்குகிறீர்களா? உடனடித்தீர்வுக்கான ஆலோசனைகள் தேவையா?
- ⇒ 2வது 3வது தடவை வீடு வாங்குவதற்கான மோட்கேஜ் தேவையா?
- ⇒ உங்கள் வீட்டு உரிமத்தினை உறவினரின் பெயருக்கு மாற்ற வேண்டுமா?
- ⇒ உங்கள் வீட்டினை அல்லது பேஸ்மண்ட்டை வாடகைக்கு விட வேண்டுமா?
- ⇒ அனைத்து ரியல் எஸ்டேட் சம்பந்தமான சேவைகளையும் குறைந்த செலவில் செய்ய வேண்டுமா?

## வோக் இன் சனிக்கிழமை தோறும் 9.00 am - 5.00 pm

**416-644-3555**

**தயா PK கந்தையா** BAS, ABR, AMP
**Principal Broker / President**
FSCO License # M 08001083
**T.P : 416-716-8707**

**ஜெ.இராசதுரை (Jey)** MBA, BBA (Hons), AMP
**Mortgage Development Manager & Agent**
FSCO License # M 09001428
**T.P : 416-624-4843**

FSCO LIC # 10156

**CENTUM Rapid Mortgages Inc.**
211-80 Nashdene Road, Scarborough ON M1V

# விளையாட்டுத் தகவல்கள் 347

## அவுஸ்திரேலியா அணியிலிருந்து ஷேன் வாட்சன் உட்பட முக்கிய வீரர்கள் நீக்கம்

இந்தியாவுடனான மூன்றாவது டெஸ்ட்டுக்கான அவுஸ்திரேலிய அணியிலிருந்து ஷேன் வாட்சன், பாட்டின்சன் உள்ளிட்ட மிக முக்கிய வீரர்கள் அதிரடியாக நீக்கப்பட்டுள்ளனர். அவுஸ்திரேலிய பயிற்சியாளர் மிகேய் ஆர்தூர் மற்றும் அணியின் நிர்வாக இயக்குனர் கவின் டோவேய் ஆகியோர் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளனர். இந்தியாவுடன் கடந்த இரு டெஸ்ட் போட்டிகளிலும் அவுஸ்திரேலிய அணி படுதோல்வி அடைந்ததையடுத்து எப்படி அணியை மேம்படுத்தலாம் என அணி வீரர்கள் ஒவ்வொருவரிடம் பயிற்சி நிர்வாகம் ஒரு கேள்வி எழுப்பியுள்ளது. அணிக்கு என்ன மாதிரியான புதிய உத்திகளை கொண்டுவர வேண்டும் என ஒவ்வொரு வீரர்களிடம் தனித்தனியாக மூன்று யோசனைகளை மின்னஞ்சல் மூலமாக முன்வைக்குமாறு ஐந்து நாள் கால அவகாசமும் கொடுத்துள்ளது. ஆனால் ஷேன் வட்சன், உஸ்மான் க்வாஜா, ஜேம்ஸ் பட்டின்சன் மற்றும் மிச்செல் ஜோன்சன் ஆகியோர் இக்கோரிக்கைக்கு மதிப்பளிக்கவில்லை எனவும் இது அணியின் பண்புக்கு உகந்தது அல்ல என்பதனால், அவர்கள் அடுத்த டெஸ்ட் போட்டிக்கான தெரிவு செய்யப்பட்ட அணியில் இடம்பெறவில்லை எனவும் தற்போது அறிவிக்கப்பட்டுள்ளது. அவுஸ்திரேலியாவின் அனுபவம் வாய்ந்த கிரிக்கெட் வீரரும் இதுநாள் வரை துணை அணித்தலைவராக செயற்பட்டு வந்தவர் ஷேன் வாட்சன். அதேபோன்று ஜேம்ஸ் பாட்டின்சன் அந்த அணியில் உள்ள ஒரு தலைசிறந்த பந்துவீச்சாளர் ஆவார். இருவரும் அணியில் இல்லாதது அணிக்கு பெரும் ஏமாற்றத்தை அளித்துள்ளது. இதனையடுத்து, மொகாலி டெஸ்ட் போட்டிக்கான அணியில் இருந்து நீக்கப்பட்டனர். கிரிக்கெட் வரலாற்றில் இதுபோன்ற சம்பவம் முதன்முறையாக அரங்கேறி உள்ளது.

ஏற்கனவே கணுக்கால் காயம் காரணமாக விக்கெட் காப்பாளர் மாத்யூ வேட் விளையாடுவது சந்தேகமாக உள்ளது. மாற்று விக்கெட் காப்பாளர் இல்லாததால், டெஸ்ட் தொடருக்கு தெரிவு செய்யப்படாத பிராட் ஹாடின் வரவழைக்கப்பட்டுள்ளார். ஒருவேளை மாத்யூ வேட் விளையாடாத பட்சத்தில் ஹாடின் விக்கெட் காப்பாளராக களமிறங்குவார். இதன்மூலம் அவுஸ்திரேலிய அணி 13 வீரர்களுடன் மொகாலி டெஸ்டில் களமிறங்க உள்ளது. இதிலிருந்து விளையாடும் லெவன் அணி வீரர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர். அணியில் இருந்து நீக்கப்பட்டதால் நொந்து போன வாட்சன், டெஸ்ட் போட்டிகளில் இருந்து ஓய்வு பெறுவார் எனத் தெரிகிறது. இந்திய தொடரில் இருந்து விலகிய இவர், உடனடியாக தாயகம் திரும்பினார். இது குறித்து அவுஸ்திரேலிய கிரிக்கெட் வாரியம் வெளியிட்ட அறிக்கையில், அணியிலிருந்து நீக்கப்பட்டதால், வாட்சன் நாடு திரும்பவில்லை. தனது சொந்த காரணத்திற்காக மட்டுமே செல்கிறார். இந்த இரண்டு சம்பவங்களும் ஒரே நேரத்தில் நடந்ததால் ஊடகத்தில் இணைத்து பேசப்பட்டது. இந்திய பயணத்திற்கு முன், அவரது மனைவி பிரசவம் குறித்து தெரிவித்திருந்தார். தேவைப்படும் பட்சத்தில், பாதியில் தொடரிலிருந்து விலக அனுமதி கேட்டிருந்தார். இவர், டெல்லியில் நடைபெறவுள்ள கடைசி டெஸ்டில் (மார்ச் 22-26) பங்கேற்பது குறித்து இன்னும் முடிவு செய்யப்படவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

நீக்கம் குறித்து ஷேன் வாட்சன் கூறுகையில், என் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நினைக்கிறேன். நான்காவது டெஸ்டில் பங்கேற்க முடியாத நிலையில் இருப்பதை பயிற்சியாளர் மிக்கி ஆர்தர், அணித்தலைவர் கிளார்க்கிடம் தெரிவிக்க இருந்தேன். அதற்கு முன் அணியில் இருந்து என்னை நீக்கி அவர்கள் முந்திக் கொண்டனர் என்றார்.

### ஒரே டெஸ்டில் 5 சதம் அடித்து இலங்கை வீரர்கள் புதிய சாதனை

வங்கதேசத்துக்கெதிரான முதல் டெஸ்ட் போட்டியில் இலங்கை அணி போட்டியை டிரா செய்தது. இலங்கை, வங்கதேச அணிகள் மோதிய இப்போட்டியில் டெஸ்ட் அரங்கில் இரண்டாவது முறையாக எட்டு வீரர்கள் (சங்கக்காரா 142, திரிமன்னே 155, சண்டிமால் 116, அஷ்ரபுல் 190, முஷ்பிகுர் ரஹீம் 200, நாசின் ஹீசைன் 100, டில்ஷன் 126, சங்கக்காரா 105) சதம் அடித்து அசத்தினர். இதற்கு முன் கடந்த 2005ல் நடந்த மேற்கிந்திய தீவுகள், தென் ஆப்ரிக்கா அணிகள் மோதிய டெஸ்டில் முதன் முறையாக எட்டு வீரர்கள் சதம் அடித்தனர். முதல் முறை இலங்கை, வங்கதேச அணிகள் மோதிய காலே டெஸ்ட் டிராவில் முடிந்ததை அடுத்து, வங்கதேச அணி டெஸ்ட் அரங்கில் இலங்கை அணிக்கெதிராக தனது முதல் 'டிரா'வை பதிவு செய்தது. இதுவரை இரு அணிகள் மோதிய 13 டெஸ்டில் 12ல் இலங்கை வென்றுள்ளது. வங்கதேச அணிக்கெதிரான முதல் டெஸ்டில், டெஸ்ட் வரலாற்றில் இலங்கையின் ஐந்து வீரர்கள் முதன் முறையாக ஒரே போட்டியில் சதம் அடித்து புதிய சாதனை படைத்தனர். இதற்கு முன்



மூன்று முறை (2001 எதிர்-இந்தியா, 2007 எதிர்-வங்கதேசம், 2008 எதிர்-இந்தியா) நான்கு இலங்கை வீரர்கள் ஒரே போட்டியில் சதம் அடித்ததே சாதனையாக இருந்தது. இந்த போட்டியில் சதம் அடித்த, இலங்கையின் சங்கக்காரா (142, 105) ஒரே டெஸ்டின் இரண்டு இன்னிங்சிலும் சதம் அடித்த ஐந்தாவது இலங்கை வீரர் என்ற பெருமை பெற்றார். தவிர, டெஸ்ட் அரங்கில் அதிக சதம் அடித்த இலங்கை வீரர்கள் வரிசையில் முன்னாள் அணித்தலைவர் ஜெயவர்த்தனவை (31 சதம்) பின்னுக்கு தள்ளி சங்கக்காரா முதலிடம் பிடித்தார்.

இதுவரை சங்கரா, 116 டெஸ்டில் பங்கேற்று 32 சதம், 41 அரைசதம் உட்பட 10@292 ஓட்டங்கள் எடுத்துள்ளார். அட்டப்பட்டுவை தொடர்ந்து டெஸ்ட் அரங்கில் தனது 16வது சதத்தை பதிவு செய்த இலங்கையின் டில்ஷன், டெஸ்ட் அரங்கில் அதிக சதம் அடித்த இலங்கை வீரர்கள் வரிசையில், முன்னாள் வீரர் அட்டப்பட்டுவின் (16 சதம்) சாதனையை சமன் செய்து, ஐந்தாவது இடம் பிடித்தார். இப்பட்டியலில் சங்கக்காரா (32 சதம்), ஜெயவர்த்தன (31 சதம்), அரவிந்த டி சில்வா (20 சதம்) ஆகியோர் முதல் மூன்று இடத்தில் உள்ளனர்.

### ரொனால்டோவின் அதிரடியில் காலிறுதிக்கு முன்னேறியது ரியல்மாட்ரிட்

மான்செஸ்டர் யுனைடெட் அணிக்கெதிரான சாம்பியன்ஸ் லீக் கால்பந்து போட்டியில் வெற்றி பெற்ற ரியல் மாட்ரிட் அணி காலிறுதிக்கு தகுதி பெற்றது. சாம்பியன்ஸ் லீக் கால்பந்து தொடரின் லீக் போட்டியில் ரியல் மாட்ரிட், மான்செஸ்டர் யுனைடெட் அணிகள் மோதின. போட்டியின் முதல் பாதியில் இரு அணி வீரர்களும் கோல் ஏதும் அடிக்கவில்லை. பின்னர் இரண்டாவது பாதியில் ரியல் மாட்ரிட் அணியின் ராமோஸ் (48வது நிமிடம்) 'சேம் சைடு' கோல் அடித்தார். போட்டியின் 66வது நிமிடத்தில் கிடைத்த வாய்ப்பில் ரியல் மாட்ரிட் அணிக்கு லூகா மோட்ரிக் ஒரு கோல் அடிக்க போட்டி சமநிலை வகித்தது. சில நிமிடத்தில் ரியல் மாட்ரிட் நட்சத்திர வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ (69) ஒரு கோல் அடித்து அணியின் வெற்றியை உறுதி செய்தார். இதற்கு மான்செஸ்டர் யுனைடெட் அணி வீரர்களால் பதிலடி கொடுக்கமுடியவில்லை. முடிவில், ரியல் மாட்ரிட் அணி 2-1 வெற்றி பெற்று காலிறுதிக்கு தகுதி பெற்றது.

### 14 ஆண்டுகளுக்கு பின்பு சதமடிப்பாரா சச்சின்? ரசிகர்கள் எதிர்பார்ப்பு!

இந்தியாவின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் சச்சின் 14 ஆண்டுக்கு பின்னர் பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானத்தில் சதம் அடிப்பார் என்று மொகாலி ரசிகர்கள் நம்பிக்கையுடன் காத்திருக்கின்றனர். இந்தியா, அவுஸ்திரேலியா அணிகள் மோதவுள்ள 3வது டெஸ்ட் போட்டி மொகாலியில் உள்ள பஞ்சாப் கிரிக்கெட் சங்க மைதானத்தில் நடக்கிறது. இம்மைதானம் இந்திய வீரர் சச்சினுக்கு சோதனைக் களமாக உள்ளது. சச்சின், 1999ல் இங்கு நடந்த நியூசிலாந்துக்கெதிரான டெஸ்டில் முதன்முறையாக (ஆட்டமிழக்காமல் 126) சதம் அடித்தார். அதன்பின் இங்கு 5 முறை (88, 55, 94, 88, 98) அரைசதத்தோடு வெளியேறினார். இவர், இதுவரை இங்கு விளையாடிய 10 டெஸ்டில் ஒரு சதம், 5 அரைசதம் உட்பட 709 ஓட்டங்கள் எடுத்து அதிக ஓட்டங்கள் எடுத்தவர்கள் பட்டியலில் 2வது இடத்தில் உள்ளார்.

முதலிடத்தில் இந்தியாவின் ராகுல் டிராவிட் (735 ஓட்டங்கள்) உள்ளார். இம்மைதானத்தில் விளையாடிய ஒருநாள் போட்டியிலும் சச்சின் பெரிய அளவில் சோபிக்கவில்லை. இவர், இங்கு ஒரு முறை கூட சதம் அடித்ததில்லை. நான்கு முறை (99, 85, 67, 62) அரைசதம் அடித்தார். அதிகபட்சமாக 2007ல் பாகிஸ்தானுக்கெதிராக இங்கு விளையாடிய போட்டியில் 99 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தார். இவர், இதுவரை இங்கு விளையாடிய 7 ஒருநாள் போட்டியில் 366 ஓட்டங்கள் எடுத்துள்ளார். டெஸ்ட் அரங்கில், கடைசியாக செஞ்சுரியனில் 2011ல் நடந்த தென் ஆப்ரிக்காவுக்கெதிரான டெஸ்டில் சதம் (146 ஓட்டங்கள்) அடித்தார் சச்சின். அதன்பின் 8 முறை (56, 91, 76, 94, 73, 80, 76, 81) அரைசதம் அடித்தார். தவிர இந்திய மண்ணில், கடைசியாக 2010ல் பெங்களூருவில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கெதிரான டெஸ்டில் இரட்டை சதம் (214 ரன்கள்) அடித்தார். அதன் பின் இந்தியாவில் விளையாடிய டெஸ்டில் 6 முறை (53, 61, 76, 94, 76, 81) அரைசதம் அடித்து ஆட்டமிழந்தார். இம்முறை மொகாலி மைதானத்தில் சதம் அடித்து அசத்துவாரா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.



எஸ். கணேஷ்




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# ஆதனம் வாங்குவதற்குரிய தருணமா?

நாமும் நமது இல்லமும்

ராஜா-மகேந்திரன்

## தொடர் - 386

காலம் பொன்னானது. நல்ல சந்தர்ப்பம் வாழ்வில் சில நேரங்களில் மட்டுமே வரும். தவறவிட்டால் மீண்டும் அப்படியொரு சந்தர்ப்பத்திற்காக நீண்ட காலம் காத்திருக்க வேண்டும். பல வீட்டின் விலை அதிகமாகி விட்டது. பொறுத்து இருந்து பார்ப்போம். விலை குறைந்த பின்பு வாங்கலாம் என பொறுத்திருக்கிறார்கள். இது நியாயமான, சரியான முடிவா?

கடந்த வருடத்தின் (2012) இறுதி 5-6 மாதங்களில் ஆதன வியாபாரத்தில் மந்த நிலை ஏற்பட்டது. அதற்கு பல காரணங்கள் முன்வைக்கப்பட்டன. இருந்த போதிலும் முக்கியமானதும் இன்றியமையாததும் அடமானக்கடனில் ஏற்பட்ட இறுக்கமான மாற்றங்களை கொள்ளலாம். எனினும் இந்த வருடத்தின் (2013) ஆரம்பத்தில் நிலைமை சற்று மாறிக் காணப்படுகின்றது. அடுக்குமாடிக் கட்டிடத்தின் மனைகளின் விற்பனையில் இறக்கம் இருக்கின்றபோதிலும் தனி வீடுகள், சேர்ந்த வீடுகளின் விற்பனையில் பெரிய மாற்றம் ஏற்பட்டதாக தெரியவில்லை. இவ்வாறான வீடுகளின் விற்பனை சாதாரணமாகவே காணப்படுகின்றது. இதன் தொடர்ச்சியாக அண்மையில் வெளிவந்த ரொறொன்ரோ றியல் எஸ்ரேற் சபையின் (Toronto real estate board) அறிக்கையின்படி சராசரி விலை ஏறக்குறைய 2% அதிகரித்துள்ளது. இன்றைய மத்திய வங்கியின் ஆளுனர் திரு. மார்க் கார்னியின் எதிர்பார்ப்பு போல கனடிய ஆதனத்தின் வியாபாரத்தில் மந்த நிலை ஏற்படத் தொடங்கியுள்ளது. அத்துடன் இதுவரை விலையில், குறிப்பாக ரொறொன்ரோ பெரும்பாகத்தில் விலை இறக்கம் ஏற்படவில்லை. ஆனால் அவரின் அண்மைய எதிர்வு கூறலின்படி எதிர்வரும் இரு வருடங்களிற்கு ஆதனவியாபாரம் மந்த நிலையாகவே காணப்படும் எனக் கூறியுள்ளார். கனடாவில் எதிர்காலத்தில் ஆகக்குறைந்தது 10% இறக்கம் ஏற்படலாம் என International Monetary Fund நிறுவனம் எதிர்வு கூறியுள்ளது. ஏற்கனவே வீட்டின் விலை இறக்கத்தை வன்கூவரில் காணக்கூடியதாகவுள்ளது. கடந்த 10 வருடங்களிற்கு மேலாக ஆதனவிலையில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு ஒரு இறக்கம் ஏற்பட்டே தீரும். பிற்பாடு சமநிலை ஏற்பட்டு அதற்கு அப்புறம் மீண்டும் விலை அதிகரிக்கலாம். கனடிய மக்களின் தொகையும் அதிகரித்தே வருகின்றது. கடந்த வருடத்தின் (2012) இறுதி அரைப்பகுதியில் கடன்பழு அதிகரித்தது. ஆனால் அதிகரிக்கும் வேகம் குறைந்தே செல்கின்றது. இதற்கு



வீட்டு வியாபாரத்தின் மந்த நிலையும் காரணமாகலாம் எனவும் திரு. மார்க் கார்னி தெரிவித்துள்ளார். இவர் யூலை 2013 இல் தனது கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் பதவியிலிருந்து விலகி, ஐக்கிய இராச்சியத்தின் (United Kingdom) மத்திய வங்கியின் ஆளுனர் பதவியை ஏற்கவுள்ளார்.

புதிதாக வரவிருக்கும் ஆளுனர், எவ்வாறு கனடிய பொருளாதாரத்தை கையாளுவார் என்பதனைப் பொறுத்தே எதிர்காலத்தின் கனடிய பொருளாதார திசையின் போக்கு தெரியவரும்.

2008 இலிருந்து கனடிய அரசும் பலவிதமான இறுக்கமான நிலைமையை, அடமானக்கடன் பெறுபவர்களுக்கு எதிராகக் கொண்டு வந்தது. வட்டிவீதம் மிகவும் குறைவாக இருந்து வந்ததால் ஆதனம் வாங்குபவர்கள், வாங்கிக் கொண்டே இருந்தார்கள். 2012 யூலை 9ஆம் திகதியில் அறிமுகப்படுத்தப்பட்ட மிக இறுக்கமான அடமானக்கடன் பெறும் முறையே பலரை ஆதனம் வாங்குவதற்கான தகைமையைக் குறைத்தது. எனினும் இந்த வருடத்தின் (2013) ஆரம்பத்திலிருந்து சில நிதி நிறுவனங்கள் சில இறுக்கங்களை தளர்த்தி உள்ளதை அவதானிக்கலாம்.

கடந்த பல வருடங்களாக 250,000 புதிய வரவாளர்கள் என்ற கொள்கையே மத்திய அரசு கையாளுகின்றது. இதனைத் தொடரப்போவதாகவே ஸ்ரீபன் காப்பர் அரசின் புதிய குடிவரவுக் கொள்கை தெரியப்படுத்தியுள்ளது. இந்நிலைமை தொடரும் வரை ஆதன வியாபாரமும் சாதகமாகவே காணப்படும். எனினும் சிறிது காலம் இதன் தாக்கம் இருக்கும். எது எவ்வாறாயினும் ஆதனமுதலீடு நீண்டகால முதலீடே. குறுகிய கால முதலீடு அல்ல என்பது குறிப்பிடத்தக்கது.


# HomeLife/GTA Realty Inc. Brokerage*

*Independently Owned & Operated

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"



Raja Mahendran, P.Eng.

5215 Finch Ave, E, #203, Toronto. Tel.:416.321.6969 & Traders Blvd #29, Mississauga - Tel.:905.712.2666

## CONDO FOR RENT



HWY 401 & KENNEDY

Brand new condo for rent. 2 Bedroom, 2 washroom.Avail. immediately. Rent $1495.

## 101 ERSKINE IN UPTOWN T0RONTO



Another Tridel Project. price starting from $259,900. Summer 2015.

## CONDO FOR SALE

HWY 401 & KENNEDY

1 Bedroom + den. Indoor swimming pool. Recreation facilities. Asking price $259,900.

## CONVENIENCE STORE FOR SALE

Over 10 years establish convenience / Grocery / Audio / video. Space for expansion. Asking only $129,900

## COMMERCIAL SPACE FOR LEASE



MIDDLEFIELD & FINCH

1000Sq.ft. Available on the main floor. many uses available. avail. April 01, 2013.

# வாகன காப்புறுதிகளின் விலைகள் தொடர்ந்து அதிகரிக்குமா?

**'நான் ஒழுங்கான முறையில் பல வருடங்களாக வாகனம் செலுத்துகிறேன். விபத்துகளை எதிர்கொண்டு நட்டஈடுகள் என எதுவும் பெறவில்லை. குற்றச்சாட்டுகள், தண்டனை ரிக்கற்றுகள் என்பவற்றிலும் என்றுமே அகப்பட்டதில்லை. இந்த மாதிரி எனது வாகனமோட்டும் பதிவுகள் இருக்கும் போது எதற்காக இந்த வருடம் புதுப்பிக்கும் போது எனது வாகன காப்புறுதி விலை மேலும் அதிகமாக உயர்த்தப்பட்டது.**

இப்படியான குமுறல் பலருக்கும் உருவாகி காப்புறுதி முகவர் நிலையங்களை நோக்கி பல்வேறு கேள்விக் கணைகள் பல இடங்களிலிருந்தும் எழுந்த வண்ணமேயுள்ளன.

இதனை பலரும் சந்தித்து இருப்பீர்கள்! இது 'பொதுவாக அதிகரிக்கும் கோட்பாடு' (General Increases) என பதில் வந்திருக்கும். சில நேரங்களில் புரிந்து கொள்வது என்பது சிரமமாக இருந்திருக்கும்.

**காப்புறுதி விலைகள் பொதுவாக ஏன் அதிகரிக்கின்றது?**

"பொதுவாக அதிகரிக்கும் கோட்பாடு" என்றால் என்ன?

'காப்புறுதி கம்பனி' என்பது பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்கத் தயார் நிலையில் இருக்கும் ஒரு 'பண பெட்டகம்' (Compensation money box) என வரைவிலக்கணப்படுத்தலாம் என்பதே காப்புறுதி தொடர்பான நூல்களில் குறிப்பிடப்படும்.

காப்புறுதி செய்த ஒவ்வொருவரும் அதனுள் தங்கள் மாதாந்த கட்டுப்பணத்தினை கூட்டாக சேர்ந்து உள்ளே போகின்றார்கள். பாதிக்கப்பட்டவர்கள், பாதிப்புகளை எதிர் கொள்ளும்போது தங்களின் பாதிப்புகளுக்கு சற்று நிவாரணமாக அதிலிருந்து ஒரு தொகையினை வெளியே எடுக்கின்றார்கள்.

ஒவ்வொரு காப்புறுதி கம்பனியும் ஒவ்வொரு பணப் பெட்டகம் மாதிரி! நிஜமாக பாதிக்கப்பட்டவனுக்கு சகலரும் சேர்ந்து கைகொடுத்து உதவுகின்றோம் என்பதே இதன் தத்துவ கோட்பாடு ஆகும். (Risk Sharing Principle)

உறைபனி கொட்டும் இவ்வருட குளிர்காலத்தில் வீதி விபத்துகளுடன் சம்பந்தப்பட்ட பல சம்பவங்களை வீட்டில் இருந்து கொண்டு தொலைக்காட்சியில் காண்கிறோம்.

• 401 அதிவேக நெடுஞ்சாலையில் ஒன்றன் பின் ஒன்றாக எண்பது வாகனங்கள் மோதிய சம்பவங்கள்.

அதே மாதத்தில் இதே மாதிரியான இன்னொரு விபத்தில் முப்பது வாகனங்கள் மோதிய விபத்துகள் இதே நெடுஞ்சாலையில் நடந்திருந்தது. (Pile up collision)
உடல் காயமுற்றோர் பலர், வாகனங்கள் பல உடைபட்டு சிதறுண்டிருந்தது.

## கனடிய தகவல் தொடர் 191

• சரி! இன்னொரு செய்தி!
அது பலகாலமாக கனடாவின் ஊடகங்கள் உட்பட சகல காப்புறுதியுடன் தொடர்புடைய குழுவுக்கு தலைமை தாங்கிய தமிழ் துப்பறியும் பொலிஸ் நிபுணர் திரு. கஜமுகந்தன் கதிரவேலு என்னும் இளைய தலைமுறையின் அதிகாரி இது பற்றி



அரசாங்கம் மற்றும் நிறுவனங்கள் யாவுமே குரல் எழுப்பிய வண்ணமேயுள்ளன. அதுவேறு ஒன்றுமல்ல!
2012 ஜனவரி மாதத்தில் கனடா வெளிவந்த நாமும் அறிந்த பரபரப்பான செய்தி!

உடல் காயங்கள் பெரிதாக இல்லாத நிலையில், உடல் காயமுற்றவருடன் சேர்ந்து அதனை மோசமான நிலைமைக்கு உருவாக்கி பணப் பெட்டகத்தினுள் இருக்கும் பணத்தினை பயன்படுத்தி இலாபம் அனுபவிக்கும் சட்ட ஆலோசகர்கள் (Para legal specialist) உடல் பயிற்சி வைத்தியர்கள் (Physiotherapist & Chiropractor) போன்றவர்களால் காப்புறுதி என்னும் பணப் பெட்டகத்தினுள் இருந்து வெளியே இழுக்கும் பணம் ஒவ்வொரு வருடமும் பல மில்லியன் டொலர்கள் என புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.
1. நிஜமாக பாதிக்கப்பட்டு பணம் எடுப்பவர்கள்!
2. பாதிக்கப்படாது மோசடியாக பணம் எடுப்பவர்கள். அவர்களை உபயோகித்து பின்னால் நின்று பணம் எடுக்கும் முதலைகள்!

இறுதியில் என்ன முடிவு!
இது எல்லோரையும் பாதிக்கின்றது. பெட்டகத்தினுள் பணம் குறையும் போது, மேலதிக பணத்திற்காக புதுப்பித்தலின் போது விலை என்பது பொதுவாக அதிகரிப்பது தவிர்க்க முடியாது போகின்றது.

கடந்த ஜனவரி, 2012
பல மில்லியன் டொலர் பெறுமதியான காப்புறுதி மோசடியில் தமிழர்கள் பலர் பிடிபட்டார்கள் என்ற செய்தி பகிரங்கத்திற்கு வந்த காலம்! 'சவுக்கடி நடவடிக்கை' (Operation whiplash) என்றும் பெயரில் காப்புறுதி கம்பனிகள், காப்புறுதி நிறுவனங்களின் இணைப்பகம் (Insurance Bureau of Canada) மாகாண நிதி அமைச்சு போன்ற பல அமைப்புக்கள் சேர்ந்து ரொறொன்ரோ பொலிசாரின் உதவியுடன் நடாத்திய வேட்டையில் இந்த

குறிப்பிடுகையில் சகலரும் இங்கு இந்த மோசடியில் சுரண்டப்படுகின்றீர்கள் என்பதனை தொலைக்காட்சியில் ஆங்கிலத்திலும் தமிழிலும் தொடர்ந்து அறிவித்துக் கொண்டிருந்து பலருக்கும் நினைவிருக்கும்.

**பொதுவாக காப்புறுதி விலையினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?**

கனடாவில் காப்புறுதி தொடர்பான பாடத் திட்டங்கள், அவை தொடர்பான வகுப்புகள், கருத்தரங்குகள், முகவருக்கான அனுமதி பத்திரங்கள் பரீட்சைகள் யாவற்றிலும் அடிக்கடி நினைவுபடுத்தி கொள்ளும் மூன்று பிரதான காரணிகளும் பின்வருமாறு.

1. நட்டஈடாக வெளியே போகும் பணம். (Claims History)
பணம் வெளியே போனால் மாத கட்டுப்பணம் அதிகரிக்கும். வெளியே போவது குறைந்தால் விலை குறையும்.

2. காப்புறுதி பணங்களின் முதலீட்டு வருமானம் (Investment income from insurance fund)
காப்புறுதி கம்பனி என்ற பண பெட்டகத்தினுள் நாம் யாவரும் இடும் பணத்தின் பெரும்பகுதி பலவகையான திட்டங்களில் முதலிட்டு அதனை வளர்த்துக் கொள்ள கம்பனி நிபுணர்கள் முயற்சி செய்வார்கள்.




சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999


தொடர்ச்சி 10ஆம் பக்கம்


Sitham Sam Shanmugam (Sales Rep.)
HomeLife/GTA Realty Inc.
Cell - 416.230.7820
Office Scarborough - 416.321.6969
Office Mississauga - 905.712.2666
24 hrs.
•Independently owned and operated

MERVIS & HWY 401
2 Story detached home for sale. Very demand area.

Daisy Mart
Brand New convenience store at Tim Hortons
North of Newmarket at Leslie Main Road

LAND VALUE
Luxuary homes with 5 acre land, North of Richmound hill, New market. HWY 404. Extention, 10 Acres, 50 acres, hobby farm.

Scarborough Big lot's Investment
உங்கள் 2 ஆது வீட்டை முதல் வீட்டில் இருந்து முதலீடு செய்யுங்கள்.
Rent will pay the mortgage.
Buy your 2nd home with your sleeping equity. We can handle your mortgage.

0 - 5 years Newer homes in Stouffville

GAS STATION
North of Barrie with property. Good income. Store + Apartment

# காலத்தோடு வளரும் கணினிகள் -17

அன்பான வாசகர்களே!

ஒரு கணினியை நிறுத்துவதென்பது (shutting-down) கணினியில் செய்து கொண்டிருந்த வேலைகளை முடித்து விட்டுக் கணினியை மூடிக் கொள்வதேயாகும். எனவே கணினியை நிறுத்துவதற்கு முன்பாக திறந்த நிலையில் உள்ள எல்லாக் கோப்புக்களையும் (பைல்கள் Files) ஒவ்வொன்றாக மூடிக் கொள்வது முக்கியமானது. இவ்வாறு செய்யாது கணினியை நிறுத்துவதனால் கோப்புக்கள் பாதிக்கப்படலாம். கணினியை நிறுத்துவதற்குரிய படிமுறைகளைச் செய்தபின்பும் முற்றாகக் கணினி நிறுத்தப்படுவதற்கு சில செக்கன்கள் அல்லது நிமிடங்கள் வரை செல்லும். கணினி சில இயக்க மென்பொருள் (Operating System) சார்ந்த கோப்புக்களை இணையத்தளம் மூலம் தரவிறக்கம் (download) செய்வதற்கு அதிக நேரம் எடுக்கக் கூடும். இந்த நேரத்தில் திரையகத்தில் உள்ள on/off switch மூலம் திரையகத்தை மூடிவிட்டு கணினிக்கு வழங்கப்படும் மின்சார வழங்கலை நிறுத்தாது விடுவதன் மூலம் கணினியில் நடைபெறும் தரவிறக்கம் முழுமையாக நடைபெற்றதன் பின்பு கணினி தானாகவே நின்றுவிடும். சில மணித்தியாலங்களுக்கு கணினியைப் பாவிக்காது விடும் நேரங்களில் கணினியை நிறுத்தாது திரையகத்தை மட்டும் நிறுத்திக் கொள்ளலாம். மடிக்கணினிகளை படுக்கைகளிலும், சோபாக் கதிரைகளிலும் நீண்ட நேரத்திற்கு இயங்கிய நிலையில் விடுவது மிகவும் ஆபத்தானது என்பதையும் கவனத்தில் கொள்ளவும்.




கணினியில் தகவல்களை உட்செலுத்துவதில் அதிகமாகப் பயன்படுத்தப் படுபவை விசைப்பலகை (கீபோர்ட் Keyboard), குறியழுத்தி (மவுஸ் Mouse) என்பவை. கீபோர்ட் அத்தியாவசியமானது. ஆனால் மவுஸ் பல வேலைகளை இலகுவாக்குகின்றது. கணினியை இயங்கச் செய்ததும் ஒரு அம்புக்குறி வடிவில் டெஸ்க்ரொப்பில் தோன்றுவதை குறிகாட்டி (பொயின்ரர் Pointer) என்று கூறுவோம். இந்தப் பொயின்ரரை மவுஸ் இனை அங்கும் இங்குமாக அசைப்பதன் மூலம் நகர்த்திக் கொள்ளலாம். மவுஸ் பொயின்ரரை நகர்த்துவதன் மூலம் ஸ்கிரினில் (Screen) வேண்டியவற்றைச் செலக்ட் (Select) செய்யலாம்.

குறிக்கப்பட்ட பைல் ஒன்றினை அல்லது ஒரு மெனுவில் (menu) உள்ள பல்வேறு தெரிவுகளில் ஒன்றினைத் தெரிவு செய்வதற்குப் பொயின்ரரை தேவையான இடத்தில் நகர்த்தி மவுஸ் இன் இடது பக்கமுள்ள பட்டனை (Left button or Primary Button) அழுத்தித் தெரிவு செய்யலாம். இதனை மவுஸ் மூலம் சிங்கிள் கிளிக் (Single Click) செய்தல் என்று சொல்லலாம். மவுஸ் இன் இடது பக்க பட்டனை இரண்டு தடவை அழுத்துவதை டபிள் கிளிக் (Double Click) செய்தல் என்று சொல்வோம். மவுஸில் உள்ள வலது புறத்தில் உள்ள பட்டனை ஒரு முறை அழுத்துவதை றைட்கிளிக் (Right Click) செய்தல் என்று கூறுவோம். மவுஸ் ஒன்றின் வேகம். மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட தொழிற்பாடுகளை பயனர்கள் மாற்றிக் கொள்ளவும் முடியும். கணினியில் உள்ள கோப்புக்களை (பைல்களை) வெவ்வேறு போல்டருக்குள் (Folder) தொகுத்து வைத்திருக்கலாம். இதனால் போல்டரைக் கோப்புக்களின் தொகுப்பு எனத் தமிழில் அழைக்கலாம் என நினைக்கின்றேன். ஏதாவது ஒரு பைலினை அல்லது போல்டரினை அழிப்பதற்கு குறிக்கப்பட்ட பைல் அல்லது போல்டரினை தெரிவு (செலக்ட் Select) செய்து கொண்டு டிலீட் (Delete) பட்டனை அழுத்திக் கொள்ளுவதன் மூலம் செய்யலாம். ஒன்றுக்கு மேற்பட்ட போல்டர்களை அல்லது பைல்களை ஒரே நேரத்தில் செலக்ட் செய்து டிலீட் செய்யலாம். குறிக்கப்பட்ட பைல்களில் குறியழுத்தியின் காட்டியை (pointer of the mouse) வைத்துக் கொண்டு குறியழுத்தியில் உள்ள வலது பட்டனை (right button of the



- அகணி -
authorakani@yahoo.com

தொடர்ச்சி 14ஆம் பக்கம்


## வீட்டில் மேலும் சுதந்திரமாக வாழலாம்.

ஆரோக்கிய வீடாக மேம்படுத்துவதற்கான வரிச்சலுகை
**(Healthy Homes Renovation Tax Credit)** இதற்குஉதவும்.

65 வயதும் அதற்கு மேற்பட்ட வயதும் கொண்ட முதியவர்களும் அவர்களுடன் வாழும் குடும்ப அங்கத்தினரும் தமது வீட்டை பாதுகாப்பாக வைத்திருப்பதற்கும் இலகுவாக உபயோகிப்பதற்குமான திருத்தவேலைகள் செய்து $1,500 வரையிலான பணத்தை வரிச்சலுகையாகப் பெறலாம். இது அவர்களுடைய வருமானத்தில் தங்கியிருக்கவில்லை. இவ்வரிச்சலுகையை பின்வரும் திருத்த வேலைகள் செய்வதன் மூலம் பெறலாம். பாதுகாப்பிற்கு பிடிக்க உதவும் கைத்தடி (support bars), படிகள் அற்றபாதை (ramps) அல்லது கதவு திறந்து நடந்து உள்ளே போக இடம்கொடுக்கும் குளியல் தொட்டிகள் (walk-in bathtubs). உங்கள் வரிச்சலுகையைப் பெற இவ்வாறான திருத்தங்களுக்கு செலவழித்த பற்றுச்சீட்டை வைத்திருந்து உங்கள் வருமானவரிப் பத்திரங்கள் பூர்த்திசெய்யவும்.



ontario.ca/healthyhomes • 1-866-668-8297 • TTY 1-800-263-7776

ஒன்ராரியோ அரசினால் இதற்குரிய கட்டணம் செலுத்தப்பட்டது

Ontario

# வாகன காப்புறுதி...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

அங்கு முதலீட்டு வருமானம் அதிகரிக்கும் போது விலை குறையலாம். கனடாவின் பொருளாதாரத்தில் ஏற்படும் தாக்கங்களினால் கிடைக்கும் முதலீட்டு வருமானம், வட்டி வருமானங்கள் பாதிப்படைந்தால் மாத காப்புறுதி கட்டணம் உயர்வடையும்.

3. காப்புறுதி கம்பனியின் செலவுகள் (Operating Expenses)
கம்பனிக்கு ஏற்படும் சகல செலவுகளுக்கும் பலரும் பணம் போடும் பெட்டகத்தின் உள்ளிருந்தே பணம் எடுக்கப்படுகின்றது. மோசடிகளினால் நட்டஈடு கோரி வெளியே போகும் பணம் பல மில்லியன் டொலர் எனவும் அதனை துப்புத் துலக்க செலவழிக்கும் பணமும் ஏராளம் என காப்புறுதி தகவல் மையங்கள் தெரிவிக்கின்றன. எல்லா செலவுகளுக்கும் பணம் இங்கிருந்தே போகின்றது.



இறுதியாக செலவுகள் அதிகரித்தால் காப்புறுதி மாத கட்டுப்பணம் அதிகரிக்கும். குறைந்தால் மாத கட்டுப்பணம் குறையும். இதே மூன்று அடிப்படை காரணிகள் என்ற கோட்பாடே

• வாகன காப்புறுதியின் விலையினையும் தீர்மானிக்கின்றது.
• ஆயுள் காப்புறுதியின் விலையினையும் தீர்மானிக்கின்றது.
• வீடுகள், சொத்துகள், காப்புறுதி விலையினையும் தீர்மானிக்கின்றது.

**தனிப்பட்ட ரீதியில் எத்தகைய காரணிகள் வாகன காப்புறுதியின் விலையினை பாதிக்கும்?**
காப்புறுதி தொடர்பான வகுப்புகளிலும், கருத்தரங்குகளிலும் விரிவுரையாளர்கள் திரையில் குறிப்பிட்டு காட்டி தெளிவுபடுத்தும் பின்வரும் காரணிகள்.

1. காப்புறுதி செய்பவரின் வயது, ஆணா?. பெண்ணா?. திருமணமானவரா? (Age?, male or female?, marriage status)

2. சாரதி அனுமதி பத்திரத்தின் தன்மை! அவை வைத்திருக்கும் காலம்! ஏதாவது குற்றசாட்டுகள்?, (Driver's license class, experience, & any convictions, tickets)

3. ஏற்கனவே காப்புறுதி வைத்திருந்த அனுபவங்கள்
விபத்துக்குள்ளாகி நட்டஈடு பெற்ற வரலாறுகள்! (Insurance experience any claims)

விபத்துக்குள்ளாகி நட்டஈடுகள் பெற்ற சம்பவங்கள் மற்றும் குற்றச்சாட்டுக்களில் ரிக்கற் வாங்கிய நிகழ்வுகள் யாவற்றினையும் எவரும் ஒழித்து மறைக்க முடியாது. அங்கு பதிவுகளில் காட்டிக் கொண்டேயிருக்கும்.

4. வதியும் நகரம் (Residence)

இந்த அம்சத்தில் ரொறொன்ரோ நகரில் இருப்பவருக்கும், அஜெக்ஸ், நியூ மார்க்கட் நகரில் வசிப்பவர்களுக்குமே விலை வித்தியாசம் காட்டும்.

5. வாகனத்தின் பாவனையும், உபயோகிக்கும் தூரங்களும் (Usage of vehicle & Distance)

மேலதிகமாக பல சாரதிகளின் பெயரினை குறிப்பிட்டால் அல்லது வர்த்தகத்திற்கு வாகனத்தினை உபயோகித்தால் விலை உயர்வாக இருக்கும்.

5. வாகனத்தின் தன்மை! (Type of Vehicle)

6. நட்ட ஈடுகளின் வகைகள் (Type of coverage)

மேற்குறிப்பிட்டவையே தனிப்பட்ட ரீதியில் விலைகளை தீர்மானிக்கும் அடிப்படை காரணங்களாகும்.

**வாகன காப்புறுதியின் விலையினை எப்படி குறைக்கலாம்?**

இந்த வினாவுக்குரிய பதில்களை கனடாவின் காப்புறுதி துறையில் பல்கலைக்கழக பேராசிரியர் ஒருவர் 'நசனல் போஸ்ட்' பத்திரிகையில் பின்வருமாறு குறிப்பிட்டிருந்தார்.

1. மாகாண அரசாங்கம் முதலீடு செய்வது! அதாவது அரசின் நிதி ஒதுக்கீடுகளில் இந்த பண பெட்டகங்களுக்கு என ஒரு தொகையினை ஒதுக்குவது அல்லது கனடாவின் ஏனைய சில மாகாணங்களில் நடப்பது போல ஒன்ராரியோ மாகாணத்திலும் அரசே வாகன காப்புறுதி திட்டங்களை பொறுப்பெடுத்து நடத்துவது ஆகும்.

இவை தொடர்பாக விவாதித்துக்கொண்டு இருக்கின்றார்களே தவிர அரசினால் இதுவரை நடைமுறைப்படுத்தும் அறிகுறி கிட்டவுமில்லை.

2. மோசடியாக பணம் வெளியே செல்வதனை நிறுத்த சகலரும் ஒத்துழைப்பது.
3. விபத்துகளை குறைத்து அவதானமாக வாகனம் செலுத்தும் திறமையினை வளர்ப்பது.
4. தனியார் வாகனங்களை அடிக்கடி உபயோகிப்பதிலிருந்து குறைத்து பேருந்துகளில் பிரயாணிப்பது
5. தனிப்பட்ட ரீதியில் வாகன காப்புறுதி செய்ய விரும்புபவர், பொதுவான இணையத்தள ஊடகங்கள் சிலவற்றின் வழிகாட்டல்களுடன் தத்தமது நிலைமைக்கு ஏற்றமாதிரி மலிந்த விலையுள்ள கம்பனி எது என்பதனை தேடிக் கண்டு பிடிப்பது.

இப்படியே மேற்குறிப்பிட்ட பல காரணிகள் அந்த ஆங்கில பத்திரிகையில் வெளிவந்த ஆய்வு கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. ஆனால் நிலைமையினை கூர்ந்து பார்த்தால் விலை அதிகரிப்பதற்குரிய சாத்திய கூறுகளே ஒன்ராரியோ மாகாணத்தில் அதிகமாகி தென்படுகின்றன.

TUTORING
By Qualified & Experienced Tutors
KEEN TUTORING CENTRE
GRADE 6 - 12, IB , MCAT, UNIVERSITY 1st & 2nd YEAR
➢ SCIENCE, PHYSICS, CHEMISTRY, BIOLOGY
➢ MATH, FUNCTIONS, CALCULUS & VECTORS
➢ DATA MGT, ENGLISH & FRENCH
Call (647) 341 3975 / (647) 869 3974

# ..பிடித்தவர்கள்

25ஆம் பக்கத்தொடர்ச்சி

அறைக் கதவு திறந்து கொள்ள, இளைஞன் ஒருவன் வெளியே வந்தான். பத்தொன்பது வயது இருக்கும். முகத்தில் ஆவேசம் தெரிந்தது. அவனுக்குப் பின்னால் ஒரு இளம்பெண், அவனது முகச்சாயலில், அவனையும் விட வயதில் மூத்தவளாக, வெளியே வந்தாள்.
இளைஞன் திரும்பி அவளைப் பார்த்து 'அக்கா! உங்களுக்கு வேறை வேலையில்லை. இந்த இடத்துக்கு இதுக்குத்தான் வரமாட்டேன் என்டு சொன்னனான். உந்தக் கிழவன் என்ன சொல்லுறான் எண்டு பாத்தியளே'

சிவாவும் நீலவேணியும் நிமிர்ந்து பார்த்தார்கள்.

அவள் சிவாவையும், நீலவேணியையும் பார்த்துவிட்டு, மீண்டும் இளைஞனைப் பார்த்து 'தம்பி டேய்!' குரலில் பரிவு இருந்தது. 'உன்ரை நன்மைக்குத்தானே எல்லாம் சொல்லுறார். உனக்குப் பிடிக்காட்டிலும் கொஞ்சம் பொறுமையாய் இரேன். வயசுக்கு மூத்தவங்களுக்குக் கொஞ்சமென்டாலும் மரியாதை குடுக்க வேண்டாமே!'

'உவனுக்கே? எனக்கு வாற கோவத்திக்கு'' என்றவன் வசனத்தை முடிக்காமலே திருப்பி வாசல் வழியே கோபத்துடன் வெளியேற, 'சின்னப் பெடியன்! ஒண்டையும் நம்புறாங்களில்லை' என்று இவர்களைப் பார்த்து ஒரு அசட்டுச் சிரிப்புடன் கூறியவள், தம்பியாரைப் பின் தொடர்ந்தாள்,

சிவாவும் நீலவேணியும் காத்திருந்தார்கள்.

மீண்டும் சிறுவன் வந்தான். 'தாத்தா உங்களை உள்ளை வரட்டாம்'
இருவரும் உள்ளே சென்றார்கள்.

- இன்னமும் வரும்

Nantha Aiyadurai, B.Eng.
Real Estate Broker
Cell: 613 850 9931
COLDWELL BANKER
கனடாவின் தலைநகர் ஒட்டாவாவில்
Buying or Selling
Relocation Service
Ottawa> > > < < < GTA

நந்தா ஐயாத்துரை
Coldwell Banker Sarazen Realty, Brokerage 2544 Bank St. Ottawa, Ontario K1T 1M9 Office: (613) 288-1999 Fax: (613) 288-1555

# கத்தோலிக்க ஆன்மீகத்தலைவராக போப் பிரான்சிஸ்

அ. அன்ரனி மனோகரன்

**கடந்த இதழ் தொடர்ச்சி...**

வத்திக்கான் சட்டத்தின் படி இரகசிய வாக்கெடுப்பு தொடங்கிய முதல் நாளிலிருந்து பாப்பரசர் தெரிவு செய்யப்படும் வரை, முதல்நாள் ஒருதடவையும் அதனைத் தொடர்ந்து வரும் நாட்களில் காலையும் மாலையும் இருதடவைகளும் வாக்கெடுப்பு நடைபெறும். பாப்பரசர் தெரிவு செய்யப்படும் வரை அவர்கள் எவ்வித வெளிஉலக தொடர்பும் அற்று அங்கேயே தொடர்ந்து தங்கியிருக்க வேண்டும். அத்தியாவசிய உதவியாளர்களைத் தவிர வேறு ஒருவரும் உள்ளே அனுமதிக்கப்பட மாட்டார்கள். தற்போதைய காலத்துக்கு ஏற்ப செல்பேசிகள், பத்திரிகைகள், வானொலிகள், தொலைக்காட்சி பெட்டிகள் யாவும் ஆலயத்தினுள் அனுமதிக்கப்படமாட்டாது. பாப்பரசர் தெரிவாகும் தினத்தன்று காலையில் கார்தினால்கள் புனித இராயப்பர் பேராலயத்தில் ஒன்று கூடி திருப்பலி ஒப்புக்கொடுப்பார்கள். மாலையில் சென் பௌலின் ஆலயத்தில் கூடி, புனித செஸ்ரின் ஆலயத்தை நோக்கி நடை பவனியாக சென்றடைவார்கள். அங்கு வந்தடைந்ததும், விதிமுறைகளுக்கு அமைவாக நடப்பதாகவும், தேர்ந்தெடுக்கப்படும் பாப்பரசருக்கு விசுவாசமாக பணிபுரிவதாகவும், வாக்கெடுப்பு இரகசியத்தை பேணுவதாகவும் சத்தியப் பிரமாணம் எடுத்துக்கொள்ள வேண்டும். கார்தினால்கள் கல்லூரியின் பீடாதிபதி சத்தியப்பிரமாணத்தை வாசிக்க, வாக்களிக்க போகும் கார்தினால்கள் பைபிளின் மேல் தொட்டு தமது விசுவாசத்தை தெரிவிப்பர். கார்தினால்கள் அல்லாத இருவர்கள் மட்டும் வாக்களிப்புக்கு முன் தலைமை வகிக்க உள்ளே அனுமதிக்கப்படுவார்கள். ஒன்பது கார்தினல்கள் எழுந்தவாரியாக தெரிவு செய்யப்பட்டு, அவர்களில் மூவர் நடுவர்களாக கடமை புரியவும், இன்னும் மூவர்கள் மேற்பார்வையாளராகவும் மற்றைய மூவர்கள் சுகவீனம் காரணமாக, புனித செஸ்ரின் ஆலயத்துக்கு வரமுடியாமல் விடுதியில் தங்கி இருக்கும் கார்தினால் களிடம் சென்று வாக்குசீட்டுக்களை பெற்றுவர வெளியே செல்ல அனுமதிக்கப் படுவார்கள். செவ்வக வடிவிலமைந்த வாக்குசீட்டின் மேல்பகுதியில் நான் இவரை புனித பாப்பரசராக தெரிவு செய்கிறேன் என்று லத்தீன் மொழியில் பொறிக்கப்பட்டி ருக்கும். கீழ் பகுதியில் தெரிவு செய்யப்படுபவரின் பெயர் எழுதப்பட வேண்டும். ஒவ்வொருவருக்கும் இரண்டு வாக்கு சீட்டுக்களாக பகிர்ந்தளிக்கப்பட்டபின், கார்தினால்கள் அல்லாத இருவரும், ஆலயத்தை விட்டு வெளியேறுவார்கள். கதவுகள் இழுத்து மூடப்பட்டு வாக்களிப்பு ஆரம்பமாகும்,

கார்தினால்கள் தெரிவு செய்யப்படுபவரின் பெயரை வாக்குசீட்டில் எழுதி இரண்டு முறைமடித்துக் கொள்வார்கள். அதேவேளை யில் சுகவீனமுற்று வெளியில் இருக்கும் கார்தினால்களிடமிருந்து பெறப்பட்ட வாக்குசீட்டுகள் செஸ்ரின் ஆலயத்துக்கு கொண்டு வரப்படும். அதன்பின் ஒருவர் ஒருவராக பூசைப்பீடத்துக்கு சென்று, மடித்த



வாக்குச் சீட்டை எல்லோரும் பார்க்கும்படியா காட்டி, 'யேசுநாதர் சாட்சியாக, எனது வாக்கை கடவுளின் முன் தெரிவு செய்யப்பட வேண்டும் என்று நான் நம்புபவருக்கு அளிக்கிறேன்' என்று கூறி தட்டில் வைத்து அதை பீடத்திலிருக்கும் பாத்திரத்தில் சரித்து விடுவார். இது சாதாரண பூசைப்பாத்திரத்தை விட பெரிதாக இருக்கும். எல்லோரும் வாக்களித்தபின், நடுவர்களால், இன்னொரு பாத்திரத்துக்கு முழுசீட்டுக்களும் மாற்றப்பட்டு, குலுக்கப்பட்டு, எண்ணப்படும். வாக்களித்த மொத்த கார்தினால்களின் எண்ணிக்கையுடன், எண்ணப்பட்ட மொத்த வாக்குகளின் எண்ணிக்கை சரியாக பொருந்தாவிட்டால், அனைத்து வாக்குகளும் திறக்கப்படாது, நிராகரிக்கப்பட்டு, இறுதியில் எரிப்பதற்காக சேகரிக்கப்படும், .

இரண்டு நடுவர்கள் வாக்குசீட்டை பரிசோதித்துப்பார்க்க, மற்றவர் ஒவ்வொரு சீட்டாக எடுத்து தெரிவு செய்யப்பட்டவரின் பெயரை உரத்து வாசிப்பார். பின் அதை ஊசியால் குத்தி நூலில் கோர்த்து வைப்பார். எல்லா வாக்குசீட்டுக்களும் வாசித்தபின், ஒவ்வொருவரும் எடுத்த வாக்குகள் அறிவிக்கப்படும். மேற்பார்வையாளர்கள் ஒருமுறை பரிசோதித்து பார்ப்பார்கள். இறுதியில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுத்தவர் பெயர் தெரிவு செய்யப்படும். இதேவேளையில் கார்தினால்களால் பாவிக்கப்பட்ட குறிப்பு காகிதங்கள் எல்லாம் வாக்குசீட்டுகளுடன் எரிக்கப்பதற்கு சேகரிக்கப்பட்டும். மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஒருவருக்கும் கிடைக்கா விட்டால், மீண்டும் ஒரு முறை வாக்களிப்பு நடைபெறும். அப்போதும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைக்காவிட்டால், வாக்குசீட்டுக்கள் ஏரிக்கப்பட்டு அன்றைய வாக்களிப்பு முடிவுக்கு கொண்டுவரப்படும். அடுத்தநாள் காலையில் இரண்டு முறையும், மாலையில் இரண்டு முறையுமாக பாப்பரசர் தெரிவாகும்வரை வாக்களிப்பு தொடர்ந்து நடைபெறும். புதிய பாப்பரசர் தெரிவானவுடன் உடனடியாக வாக்குசீட்டுக்கள் எரிக்கப்படும்.

சம்பிரதாயப்படி புதிய பாப்பரசர் தெரிவானவுடன் எரிக்கப்படும் வாக்குசீட்டு களுடன் இரசாயன பதார்த்தங்கள் கலக்கப்பட்டு, வெண்ணிறபுகை புகைபோக்கி ஊடாக வெளியேற்றப்பட்டு, புனித இராயப்பர் பேராலயசதுக்கத்தில் கூடி நிற்கும் மக்களுக்கு தெரியப்படுத்தப்படும். பாப்பரசர் தெரிவு செய்யப்படாத நாட்களில் வாக்குசீட்டுக்களுடன் வைக்கல் கலக்கப்பட்டு கறுப்பு புகையாக வெளியேற்றப்படும். 1996ம் ஆண்டு மறைந்த பாப்பரசர் 2ம் யோன் போல் மூன்றில் இரண்டு பெரும்பான்மை முறைமையை மாற்றியமைத்தார். 13 நாட்களுக்கு பின்பும் ஒருவருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை கிடைக்க விட்டால், கார்தினால்கள் விரும்பினால் சிறிய பெரும்பான்மையுடன் பாப்பரசரை தெரிவு செய்யமுடியும். ஆனால் அந்த மாற்றத்தை, நாலு வாக்கு வித்தியாசத்தில் பாப்பரசராக தெரிவான பாப்பரசர் 16ம் பெனடிக்ட், 2007 ஆம் ஆண்டு இரத்து செய்து, மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் தான் பாப்பரசர் தெரிவு செய்யப்பட வேண்டும் என்ற சம்பிர-தாய முறையை மீண்டும் அமலுக்கு கொண்டு வந்தார். கார்தினால்கள் கல்லூரியில் பல பழமை வாதம் கொண்ட கார்தினால்களும், சமுதாய மாற்றங்களுக்கு ஏற்ப புதிய மாற்று சிந்தனை கொண்ட கார்தினால்களும் இருப்பதால் மூன்றில் இரண்டு பெரும்பான்மை என்பது சிறிது கடினமாகத்தான் இருக்கும். மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பாப்பரசர் தெரிவானவுடன், கார்தினால்கள் கல்லூரியின் பீடாதிபதி, தெரிவு செய்யப்பட்ட கார்தினாலை, மண்டபத்துக்கு அழைத்து சென்று 'உங்கள் தெரிவை நீங்கள் ஏற்றுகொள்கிறீர்களா' என்று கேட்பார். அவர் அதை ஆமோதிக்க வேண்டுமென்ற அவசியம் கிடையாது. அதை அவர் ஏற்றுக்கொண்டதும் 'என்ன பெயர் கொண்டு அழைக்கப்பட விரும்புகிறீர்கள்?' என்று கேட்கப்படுவார். பெயர் தெரிவானதும், பத்திரங்கள் நிரப்பப்பட்டு பாப்பரசரின் பெயர் பதிவேட்டில் பதியப்படும். பின்பு தெரிவு செய்யப்பட்ட பாப்பரசர் 'கண்ணீர்களின் அறை' என்று அழைக்கப்படும் சிறிய சிவப்பு நிறத்திலான அறைக்கு அழைத்து செல்லப்படுவார். புதிய பாப்பரசருக்கு தேவையான உடைகள் மூன்று விதமான அளவில் ஏற்கனவே தைத்து வைக்கப்பட்டிருக்கும். பாப்பரசருக்கான உடைகள் அணிந்தபின், சிவப்புநிற பட்டியும், வெள்ளை நிறத் தொப்பியும் அணியப்பட்டு, தங்கமுலாமிடப்பட்ட சிலுவையும் கையில் கொடுக்கப்படும்.

அதன்பின் புதிய பாப்பரசர் வெளிமாடத்துக்கு அழைத்து செல்லப்பட்டு வெளியே புனித இராயப்பர் பேராலயசதுக்கத்தில் காத்திருக்கும் மக்களுக்கு அறிமுகம் செய்யப்பட்டு, ஆசியுரை வழங்குவார். பாப்பரசர் 16ம் பெனடிக்ட் தனது பதவியை பெப்ரவரி 28ம் திகதி இராஜினாமா

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

**MATH, SCIENCE & ENGLISH TUITION**

Math & Physics taken for all grades from grade 4 to 1st year university. Special classes in advanced functions, calculus and vectors and data management & English from grade 4 to 8.
Classes available at *Scarborough & Stouffville*
***Contact: 647.340.9490 / 416.732.2228***

**LAW OFFICE**
***STEFANO FORTINI***
B.A., LL.B., Barrister & Solicitor
*3 Catherine Avenue,*
*Aurora, Ontario*
*L4G 1K4*
*Tel: 416.999.4376*
*Fax: 905.727.7017*
*Email: sfortini@rogers.com*

# இரத்தம் சுத்தமாக நாடிசுத்தி பிராணாயாமம்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

### CLEANING THE BLOOD

செய்முறை

1. விரிப்பின் மீது வஜ்ராசனத்திலோ, அல்லது சுகாசனத்திலோ உட்கார்ந்தபடி நிமிர்ந்து அமரவும்.
2. இடது கையை சின் முத்திரையுடன் இடதுகாலம் முட்டிமீது வைக்கவும்.
3. வலது கையின் இரண்டாவது மூன்றாவது விரலை மடித்து வலது மூக்கு துவாரத்தை மூட கட்டை விரலையும், இடது மூக்கு துவாரத்தை மூட மேலதிக விரலையும் பயன்படுத்த வேண்டும்.
4. வலது மூக்கு துவாரத்தை கட்டை விரலால் மூடி வெளிமூச்சை இடது துவாரத்தின் மூலமாக மெதுவாகவும் ஒரே சீராகவும் உள்ளிழுக்கவும். பின் மோதிர விரலால் இடது மூக்கு துவாரத்தை மூடவும். அப்படியே மூன்று எண்ணிக்கை இருக்கவும். கண்கள் மூடியிருக்க வேண்டும்.
5. வலது துவாரத்தைத் திறந்து எடுத்த மூச்சை மெதுவாக ஆறு எண்ணிக்கை வரை வெளியேற்றவும். முடிந்ததும் மூன்று எண்ணிக்கை அப்படியே வெளிமூச்சை எடுக்காமல் இருக்கவும்.
6. வலது துவாரத்தின் வழியாக மூச்சை மூன்று எண்ணிக்கை இழுத்து மூன்று எண்ணிக்கை நிறுத்தவும். பின், இடது துவாரத்தின் வழியாக ஆறு எண்ணிக்கை வரை வெளிவிடவேண்டும். இது ஒரு சுற்று ஆகும். இதுபோல் 5 முதல் 15 சுற்றுகள் வரை செய்து முடிக்கவும்.

**நாடிசுத்தியும் குறட்டை நோயும்**

குறட்டை விட்டு அவர் நிம்மதியாகத் தூங்குகிறார் என்று சொல்கிறோம். ஆனால் இது உண்மையல்ல. அவருக்கு ஆழ்ந்த நித்திரை கிடைப்பதேயில்லை. காரணம் தூக்கத்தில் மூச்சு விடுவது நின்றுபோக, இரத்தத்தில் பிராணவாயுவின் அளவு குறைய தூக்கம் கெடுகிறது. இதனால் தூக்கத்தில் கிடைக்க வேண்டிய ஓய்வு அவர்களுக்கு கிடைப்பதில்லை. இதனால் உடல் எடை அதிகரிக்கும். அத்துடன் இரத்த அழுத்தம் அதிகரித்து இதய பாதிப்பு ஏற்படக் கூடும். இதனைக் கடந்து மரணமும் சம்பவிக்க வாய்ப்புண்டு.

எனவேதான் நாடி சுத்தி பிராணாயாமத்தைத் தொடர்ந்து செய்து வந்தால் தடிமல், ஒவ்வாமை (அலர்ஜி), சைனஸ், மூக்கில் சதை வளர்வது, மூக்கு எலும்பில் வளைவு, மூச்சு இழுத்து விடுவதில் தடை என்பனவற்றைப் போக்கி இரத்தத்தில் பிராணவாயுவை அதிகரிக்கச் செய்யும். அதனால் குறட்டையின்றி நிம்மதியாகத் தூங்கலாம்.

**நாடிசுத்தியின் பலன்கள்**

1. தியானம் செய்வதற்கு தயார் செய்கிறது.
2. மன அமைதியைத் தருகிறது.
3. வலது, இடது நாசிகளில் நடக்கும் சுவாசத்தை சமப்படுத்துகிறது.
4. அசுத்த இரத்தம் சுத்தமடைகிறது.
5. உடலின் ஆரோக்கியத்தை மேம்படுத்துகிறது.
6. மூளை நரம்புகளுக்கு புத்துணர்ச்சி தருகிறது.
7. நல்ல தூக்கத்தை ஏற்படுத்துகிறது.
8. நல்ல பசியையும் ஜீரண சக்தியையும் ஏற்படுத்துகிறது.
9. இதனைத் தலைவலி வருகிறபோது செய்தால் தலைவலி போய்விடும்.
10. தொடர்ந்து பழகி வந்தால் நெஞ்சில் சளி சேர்தல், தலைவலி, பல்வலி என்பன வராது.

செய்பவர்கள் கவனத்திற்கு

1. வயிற்றில் உணவிருக்கும் போது இந்த பயிற்சியை செய்யக்கூடாது.
2. அசுத்தமான காற்றுள்ள இடத்தில் செய்யக்கூடாது.
3. களைப்பு ஏற்படும்போது பயிற்சியை நிறுத்த வேண்டும்.
4. செய்யும்போது மூச்சில் கவனத்தைக் செலுத்த வேண்டும்.
5. மூக்கடைப்பு இருக்கும்போது இதனைச் செய்ய வேண்டாம்.
6. பயிற்சியில் சந்தேகம் தோன்றினால் பயிற்சியாளரின் ஆலோசனையைப் பெறவேண்டும்.

**சித்காரி மூச்சுமுறை (நாக்கு மடிந்த நிலை)**

**செய்முறை**

1. விரிப்பில் முதுகுத் தண்டை நேராக நிமிர்த்தி இருத்தல் வேண்டும்.
2. உள்ளங்கைகளை கால் முட்டியின் மீது வைத்து வெளிக்காற்றை பற்களின் இடுக்குகள் மூலமாக உறிஞ்சி இழுக்கவும். பின் வாய்வழியே உள்ளிழுத்த காற்றை மூக்கின் வழியே வெளிவிட வேண்டும்.
3. இதனை பத்துமுறை செய்து முடிக்கவும்.

**பலன்கள்**

1. உடலைக் குளிர்ச்சியாக வைத்திருக்க உதவுகிறது.
2. முகத்தின் அழகு அதிகரிக்கிறது.
3. பித்தநீர் சுரப்பைக் கட்டுப்படுத்தி இரத்தத்தைச் சுத்தமாக்குகிறது.
4. மலச்சிக்கல், அஜீரணம், கல்லீரல் வீக்கம், தோல் நோய்கள் என்பனவற்றைப் போக்குகிறது.



5. மன அழுத்தம் (Stress), நரம்புத்தளர்ச்சி, உயர் இரத்த அழுத்தம் என்பனவற்றிற்கு இந்தப் பயிற்சி ஒரு வரப்பிரசாதமாகும்.
6. இந்தப் பயிற்சியைத் தொடர்ந்து பழகி வரும்போது ஆண்மை அதிகரிக்கும், பெண்மை மேலோங்கும்.
7. ஜலதோஷம், வாயுக்கோளாறு உள்ள நேரத்தில் இதனைச் செய்யலாகாது.

குறிப்பு : - இதனை ஆரம்பத்தில் ஒரு யோகாசன ஆசிரியர் உதவியுடன் செய்வது முக்கியமானது.




ஆரோக்கிய வாழ்வு

Diploma in Yoga Therapy (India)

416.289.2033 after 7:00pm
416.617.5721

TBC Toronto Business College



DIPLOMA PROGRAMS

Accounting & Payroll Admin.
35 weeks

Business Administration
26 weeks

Computerized Accounting
26 weeks

Medical Office Administrator
32 weeks

Personal Support Worker
26 weeks

SECOND CAREER
WHO IS ELIGIBLE?

- Currently Receiving EI
- Laid off after 2005 working less than 20 hours/week
- Received maternity / Parental benefits within last 3 years

Eligible for Tuition Fees, Books, Living Expenses, Day care & Transportation up to $28000

Certificate Courses

Windows, Word, Excel, Power Point, Access
Quick Books, Simply Accounting, Accpac
Bank Teller, Online Stocks & Options Trading

416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ), Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

MTSA-Markham Tamil Seniors Assosiation Canada

மார்க்கம் தமிழ் முதியோர் சங்கம் கனடா

மற்றும் CTMA-Canadian Tamil Medical Association

கனடிய தமிழ் மருத்துவ சங்கம், இணைந்து நடத்தும்

'மருத்துவத் தகவல் பட்டறை'

இடம்: ஆர்மடேல் சனசமூக நிலையம்-
Armadale Community Centre, 2401, Denison Road
(McCowan & Denison )

காலம்: ஞாயிற்றுக்கிழமை, மார்ச் 31, 2013

நேரம்: பி.ப. 1:00 மணி முதல் பி.ப. 8:00 மணி வரை

மாலைச் சிற்றுண்டிகள் வழங்கப்படும்! அனுமதி முற்றிலும் இலவசம்!!!!!

அனைவரையும் வந்து பயன்பெறுமாறு அன்போடு அழைக்கின்றோம்!

மேலதிக தொடர்புகளுக்கு:

647.874.5948 / 416.936.8002 / 647.996.7226 / 416.880.0443

மார்க்கம் தமிழ் முதியோர் சங்கம் கனடா

Markham Tamil Seniors Association Canada

# ஓடும் நீர் உறைவதில்லை 163

## மாங்காயும் தேங்காயும்

நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் வாழ்க்கை யானது நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் சூழலின் செல்வாக்கைப் பிரதிபலிப்பதாகவே அமைகின்றது. எமது புலன்களுக்கு அகப்படும் ஒவ்வொன்றும் மிகவும் நேர்த்தியான தகவலை எமக்குத் தந்துகொண்டிருக்கின்றன. எது எதுவோ அதை அதுவாக உணரும் போது இவ்வாறான தகவல்களை நாம் பெற்றுக்கொள்ள முடிகின்றது. இப்போது மாங்காயும் தேங்காயும் பிரதிபலிக்கும் வாழ்க்கை முறைகள் எவ்வாறு அமைகின்றன என்பதைப் பார்ப்போம். பொதுவாக “உங்கள் வாழ்க்கை மாங்காயின் தன்மையைப் வெளிப்படுத்துகின்றதா அல்லது தேங்காயின் தன்மையை வெளிப்படுத்துகின்றதா” என்பதற்கு தேங்காய் என்பதே பலரது விளக்கமாக அமைகின்றது. அதற்கு வழங்கப்படும் காரணங்கள் இளநீரின் இனிமையும் தேங்காயின் வெண்மையுமாக அமைகின்றன. முதலில் தேங்காயின் வாழ்க்கை முறையை உற்று நோக்குவோமாயின் வெளிப்புறத் தொடர்புகளுக்கு வாய்ப்பளிக்கப்படாத மூடப்பட்ட அமைப்பு முறைக்குள் தனக்கென்றே அரண்களை உருவாக்கி தனது வாழ்க்கையை நகர்த்திக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். இவ்வாறான மூடப்பட்ட அமைப்பு முறைக்குள் இருப்பதால் அதன் வளர்ச்சி நிலை என்ன என்பது எப்போதுமே ஒரு ஊகத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டிய தாக உள்ளது. அதுமட்டுமன்றி தன்னைச் சுற்றியுள்ள பாதுகாப்பு அரன்களே தனது வாழ்க்கையின் முடிவுக்குக் காரணமாக அமைந்துள்ளன என்பதையும் வெளிப்படுத்து கின்றது. உதாரணமாக ஒரு தேங்காயின் தும்புகள் நீக்கப்படுவதாலோ அல்லது அதன் ஓடு உடைக்கப்படுவதாலோ தேங்காயின் வாழ்க்கை முடிவுக்கு வந்துவிடுகின்றது. இந்த நிலையை அடையும் ஒவ்வொரு தேங்காயும் ஒட்டுமொத்தமாகத் தன்னை இழப்பதால் இவ்வாறு முடிவடையும் வாழ்க்கை வாழப்பட்ட வாழ்க்கையாகக் கருதப்படுவதில்லை. ஏனெனில், வாழப்பட்ட வாழ்க்கை என்பது நாம் வாழும் வாழ்க்கை முறையானது எமது இறப்பின் பின்னரும் விதையாக மாறி தொடர்ச்சியாக நன்மையளிப்பதாக அமைவதாகும்.

அடுத்து, மாங்காயைப் பார்ப்போம். பிஞ்சு, காய், கனி எனும் வளர்ச்சி நிலைகள் மிகவும் தெளிவானவை. ஊகத்துக்கு இடமற்றது. தனக்கென்று அரண்களை உருவாக்காமல் எதிர்கொள்ளவேண்டிய அனைத்தையும் எதிர்கொள்ளும் தன்மையைக் கொண்டது. பிறருக்கான தனது உச்ச பயன்பாடு என்பது தன்னைக் கனியவைப்பதன் மூலம் தான் கொடுக்க முடியும் என்ற உயர்ந்த இலட்சியத்தைக் கொண்டது. கொடுப்பதற்காகவே பிறந்தேன் என்று பெருமிதம் கொள்ளும் வாழ்க்கை முறை. பிஞ்சிலிருந்து காய் என்ற நிலையை அடையும் வரை பெற்ற அனுபவங்களை கனியாக்கவேண்டும் என்பதற்காக காயாக உள்ளபோது கடுமையான புளித் தன்மையை வெளிப்படுத்தி தன்னைப் பாதுகாத்துக் கொள்ளும் அற்புதமான தன்மையைக் கொண்டது. தான் கனியானதும் தேங்காயைப் போல் மனிதனுக்கு மட்டுமல்லாமல் எந்த உயிரினமானாலும் தனது இனிமையை, அனுபவச் சுவையை பயன்படுத்துவதற்கு எந்த வரையறைகளையோ அல்லது விதிமுறைகளையோ விதிக்காமல் முழுமனதுடன் பகிர்ந்தளிக்கும் பக்குவம். கனியைச் சுவைத்தபின் கழிவாக எறியப்படும் விதையால் கூட அடுத்தடுத்த தலைமுறை களுக்கும் தன்னை தயார்படுத்தும் தன்னலமற்ற வாழ்க்கைமுறை.

உங்களை நீங்களே கேட்டுக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கை மாங்காயா அல்லது தேங்காயா?

## மெழுகுவர்த்தியின் தகவல்

ஒரு மெழுகுவர்த்தியின் தன்மையைப் பார்ப்போம். மெழுகும் திரியும் அதன் சேர்க்கை. இவையிரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்பில்லாதவை. மெழுகுவர்த்தியில் மெழுகுக்குள் திரி செலுத்தப்பட்டிருக்கும். மெழுகு, திரியை மிக இறுக்கமாகப் பற்றியிருக்கும். தானாக அது ஒளியைக் கொடுக்காது. ஒருவர் அதன் தலையில் தீ வைக்க வேண்டும். தீ வைத்ததும் திரியும் அழிந்து மெழுகும் அழிந்து வெளிச்சத்தைத் தீ வைத்தவருக்குக் கொடுக்கும். தன்னை இழந்து வெளிச்சத்தைக் கொடுக்கிறது என்று அதைப் பயன்படுத்துபவர் பெருமை பேசிக் கொள்வார். இப்போது இந்த விடயத்தை வாழ்க்கைக்குள் கொண்டு வருவோம். சிறு வயதில் இருந்தே மனித சமூகம் கொள்கைகளையும், கோட்பாடுகளையும், தத்துவங்களையும், சாஸ்திரங்களையும், சம்பிரதாயங்களை யும் திரியாக்கி எமக்குள் செலுத்திவிடும். திரியை வைத்தவர்கள் தலையில் தீயை வைத்துவிட்டு சுகத்தை அனுபவிப்பார்கள். நாம் சூடு தாங்காமல் உருகி உருகி



வாழ்க்கையை அழித்துக் கொண்டிருப்போம். சுகத்தை அனுபவிப்பவர்கள் தொடர்ந்து அதை அநுபவிப்பதற்காக “பார்த்தீர்களா இந்த மெழுவர்த்தியை, தன்னை அழித்து பிறருக்கு வெளிச்சம் கொடுக்கிறது” என்று பெருமைப் படுத்துவது போல் கூறிக் கொண்டிருப்பார்கள். எமது வாழ்க்கை முடிவுக்கு வரப் போகின்றது என்றதும் அந்த எஞ்சியதால் தலைக்கு மேலே திரியுடன் திரிபவர்களது தலையில் தீ வைத்து கொண்டிருப்பார்கள். பாவம் இந்த மெழுவர்த்தி மனிதர்கள். வாழ்க்கை வாழ்வதற்கே என்பதைப் புரியாதவர்கள். நாம் வாழ்வதன் மூலம் தான் மற்றவர்களையும் வாழவைக்க முடியும் என்ற அடிப்படையை உணராதவர்கள். எமது வாழ்க்கைக்கு மெழுகுவர்த்தி தரும் தகவல் இது தான். “ஏ மனிதா! நான் ஒரு ஜடம். திரியை வைத்தவர்கள் தீயை வைப்பார்கள் என்பது எனக்குத் தெரியாது. ஒருவேளை உனக்கும் ஆரம்பத்தில் அது தெரியாமல் இருந்திருக்கலாம். ஆனால் தீயை வைத்து சூடு வாங்கும் போதாவது புரிந்து கொள்ளலாமே? நீ ஜடம் அல்லவே? தலையில் தீ வைத்தவருக்கு நான் வெளிச்சத்தைக் கொடுக்கிறேன் என்பதை விட உனது வாழ்க்கையில் ஒரு திருப்பத்தைக் கொடுக்கிறேன் என்பது தான் உண்மை”.

## நன்றி உணர்வு

நாம் பெற்றுக்கொள்ளும் அனைத்தும் (இன்பம், துன்பம், மகிழ்ச்சி, கவலை...) எமது வாழ்க்கையின் நகர்வுக்கு தவிர்க்க முடியாத உள்ளீடுகள் என்பதை ஆய்வுக்கு இடமின்றி ஏற்றுக்கொண்டு அவற்றைத் தருபவர்களுக்கு நாம் திருப்பிச் செலுத்தும் உணர்வுபூர்வமான உள்ளப் பகிர்வே நன்றியாகும். இதுவே ஒரு நாய்க்கும் அதன் எஜமானுக்கும் இடையில் இடம்பெறுகின்றது. எல்லாமே வாழ்க்கை என்பது நாயின் நிலைப்பாடு. உண்மையும் அதுவே. கடந்தும் உள்ளேயும் (கடவுள்) இருப்பது தான் வாழ்க்கை. நாம் சுவாசத்தை உள்ளிழுக்கும் போது வாழ்க்கை உள்ளே வருகிறது, வெளிவிடும்போது நாம் வாழ்க்கைக்குள் போகிறோம். இந்த இயக்கத்திற்குள் இடம்பெறும் எல்லாமே வாழ்க்கை தான். அதற்காக நாம் திருப்பிச் செலுத்தும் உணர்வுபூர்வமான உள்ளப் பகிர்வே நன்றியாகும்.



அன்பார்ந்த விளம்பரம் வாசகர்களுக்கு: வாழ்வியல் சார்ந்த எனது ஆக்கங்கள் எழுத்து வடிவில் ‘விளம்பரம்’ பத்திரிகை யிலும் ஒலிவடிவில் கீதவாணி வானொலியிலும் இடம்பெறுகின்றன. இயலுமான வரை இவற்றை உங்கள் உற்றார், உறவினர், நண்பர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள். - நன்றியுடன் KG Master

**KG Master:** –www.kgmaster.com
- www.facebook.com / - kgmaster.yourlifecoach

**அமைதியின் குரல் - Words of Peace**

அன்பு, அமைதி, ஆனந்தம், கடவுள் எனப் பல பெயர் கொண்டு அழைத்தாலும் விடயம் ஒன்றுதான். நீங்கள் வெளியே தேடும் ஆனந்தமும் நிம்மதியும் உங்களின் உள்ளேதான் உள்ளது. தேடுங்கள். எல்லா இடங்களிலும் தேடுங்கள். கிடைக்கவில்லை என்றால் என்னிடம் வாருங்கள். அதனை நீங்கள் உங்கள் வாழ்வில் அனுபவிப்பதற்கு என்னால் உதவிசெய்ய முடியும். - மஹராஜி

**1-877-707-3221 / தமிழில் - 416.431.5000**

**- MAHARAJI -**



மஹராஜியின் உரைகள்

| On DVD | On TV |
| --- | --- |
| இலவச DVDக்கு அழையுங்கள் | Saturdays at 11:00 am |
| | Rogers Cable Channel - 20 |
| (416) 431-5000<br>1 877 707 3221 | Bell Express vu<br>Channel - 219 |

# “ஒவ்வொரு மனிதரும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

சமபுத்தி பேசுகையில் “இங்கு எல்லா விதமான ஆயுர்வேத மசாஜுகளும் வழங்கப்படுகின்றன. பங்கேற்பாளர்கள் தங்கள் சௌகரியத்தை பொறுத்து ஆயுர் ரசாயனாவின் வெவ்வேறு நிகழ்ச்சிகளை தேர்தெடுக்க முடியும். அடிப்படையாக பார்தால் எல்லா ஆயுர் நிகழ்ச்சிகளும் ஒரே நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டவை தான். அவர்கள் இங்கு செலவிடும் நாட்களை பொறுத்து அவர்களுக்கு செய்யப்படும் மசாஜுகளும் அதிகரிக்கும். நம்முடன் அதிக நாட்கள் அவர்கள் செலவு செய்கையில் அவர்களுடைய உடல் புத்துணர்வு இன்னும் சற்று அதிகமாக தூண்டப்படும். நம்முடைய நோக்கமே அவர்களுக்கு எது சிறந்ததோ அதை வழங்குவது தான். அதோடு மட்டுமல்லாமல் இந்நிகழ்ச்சியின் பகுதியாக, அருகில் உள்ள பசுமை நிறைந்த மலைவாழ் கிராமங்களுக்கு நடைபயணமாக சென்று வருவதும், இயற்கையுடன் சற்று நேரம் செலவழிப்பதும் ஒருவரை மேலும் புத்துணர்வடையச் செய்யும்” என்கிறார்.

ஆயுர் ரசாயனா 2 ½ நாட்களும், ஆயுர் ரசாயனா இன்டென்சிவ் 5 நாட்களும், ஆயுர் சம்பூர்னா 7 நாட்களும், ஆயுர் சஞ்ஜீவினி வகுப்பு 9 நாட்களும் நடைபெறுகின்றன. இந்த வகுப்புகள் அனைத்திலுமே ஒருவருடைய அடிப்படை ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்காக சில சித்த மருந்துகளும், ஆயுர்வேத மற்றும் ஸ்விடிஷ் மசாஜ்களும் அடக்கம். ஆயுர் நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதற்கு ஈஷா யோகா வகுப்புகள் செய்திருக்க வேண்டிய அவசிய மில்லை. 7 வயதிற்கு மேற்பட்ட எவரும் இந்நிகழ்ச்சிகளில் பங்கெடுத்துக் கொள்ளலாம்.

சுநேத்ரா என்றொரு கண் சிகிச்சை நிகழ்ச்சியும் இம்மையத்தில் வழங்கப்படு கிறது. “சு” என்றால் நல்ல, “நேத்ரம்” என்றால் கண்கள் என்று பொருள். பொதுவாக கண் நோய்களில் 95% நோய்கள் இங்கு கையாளப்படுகின்றன. இங்கு கற்றுத் தரப்படும் பயிற்சிகளை தொடர்ந்து செய்து வந்ததன் மூலம் கண் கண்ணாடியை கழற்றியவர்கள் ஏராளம்.

“யோக மார்கா” வகுப்பு குழந்தைகளுக்காக பிரத்தியேகமாகவும் நடத்தப்படுகிறது. குழந்தைகளுக்கான நிகழ்ச்சியில் பெரியவர் களுக்கான சிகிச்சைகளோடு, இயற்கை பகுதியில் தினசரி நடைபயணமும், உற்சாக விளையாட்டுகளும், பொழுதுபோக்கு அம்சங்களும் உள்ளடங்கும். இவ்வகுப்பு செய்வதற்கு ஈஷா யோகா செய்திருக்க வேண்டும். 7 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும்.

சிகிச்சை முறைகளில் சித்த மருத்துவம் பெரும்பான்மையாக இருப்பதற்கு சத்குரு அவர்கள் தரும் விளக்கம், “சித்த மருத்துவம் ஆயுர்வேதத்தை காட்டிலும் சில ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்தது. இது மிகமிக பழமையான மருத்துவமுறையாகும். இம்மருத்துவமுறையில் குறிப்பிட்ட சூழலில் வளர்க்கப்பட்ட மூலிகைகளை மட்டுமே பயன்படுத்துகின்றனர். இதில் பலவாரியான மருந்துகள் இல்லாமல் இருக்கலாம். ஆனால் இவை ஒருவருடைய உடல் அமைப்பின் மூலத்தையே தொடவல்லவை. பொதுவாக மருத்துவமுறைகள் நோயை மட்டுமே அணுகும். ஆனால் சித்த மருத்துவமுறையில் ஒருவரின் உடல் அமைப்பின் அடிப்படையையே தொட இயலும். ஏனென்றால் சற்றே பார்க்கையில் நோய் என்பது மனிதனால் உருவாக்கப்பட்டதே. பொதுவாக மருத்துவத்தில் மருத்துவர் உங்களுக்காக எல்லாம் செய்துவிடுவார். ஆனால் யோகாவில் நீங்கள் தான் எல்லாம் செய்ய வேண்டும். இப்படி இருக்கையில் பழமை வாய்ந்த யோகாவும் சித்தாவும் இணையும்போது ஆச்சரியப்படத்தக்க வகையில் பலனளிக்கின்றன. நம் அனுபவத்தில் மருத்துவரீதியாக கைவிடப் பட்டவர்களுக்கும் இந்த காம்பினேஷன் அதிஅற்புதமாக வேலை செய்திருக்கிறது” என்கிறார்.

ரெஜீவினேஷன் வகுப்புகளை தவிர பொதுவாக ஆசிரமத்திற்கு வருவோரும் இம்மையத்தில் உள்ள வசதிகளை பயன்படுத்திக் கொள்ளலாம். வாக்-இன் மசாஜ் எனப்படும் வசதியையும் இங்கு வருவோர் பயன்படுத்திக் கொள்ளலாம். தங்கள் விருப்பப்படியோ அல்லது இங்கு தரப்படும் அறிவுறுத்தலின் படியோ ஒருவர் தெரபிகளை செய்துக் கொள்ள முடியும். தங்கள் வருகையை முன்பதிவு செய்துக் கொள்வது மிக அவசியம்.

இங்கு வகுப்புகளில் கற்றுக் கொண்டதை தொடர்ச்சியாக செய்து வருவதன் மூலமும் வாழ்க்கை முறையை ஒரு சீராய் மாற்றி அமைத்துக் கொள்வதன் மூலமும் ஒருவருக்கு ஆரோக்கியம் என்பது எட்டா கனியாய் அல்லாமல் தினசரி வாழ்க்கையில் நிதர்சனம் ஆகும்.

வாருங்கள், இளைபாறுங்கள்,
உயிர்ப்படையுங்கள், புத்துணர்வு பெறுங்கள்!

# காலத்தோடு...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

mouse) அழுத்தி கட்டளைகளில் டிலீட்டினைத் தெரிவு செய்வதன் மூலமும் டிலீட் செய்யலாம். கணினியில் ஒரு குறிக்கப்பட்ட வேலையைச் செய்வதற்கு ஒன்றிற்கு மேற்பட்ட வழிமுறைகள் உள்ளன என்பதற்கு இதனை உதாரணமாகக் கொள்ளலாம்.

உதாரணமாக test 1 என்ற பெயர் கொண்ட பைலினை அழிக்கும் பொழுது Are you sure you want to send test 1 to Recycle bin? என்ற செய்தி தோன்றும். இந்தக் கேள்விக்குரிய பதிலாக Yes என்பதைத் தெரிவு செய்த பின்பே குறிக்கப்பட்ட பைலினை அழித்து விட்டுக் கணினியின்



டெக்ஸ்ரொப்பில் காணப்படும் ரீசைக்கிள் பின் (Recycle Bin) என்ற போல்டருக்குள் தற்காலிகமாக வைத்துக் கொள்ளும். நாங்கள் தவறுதலாக ஒரு பைலினை அழிக்காமல் இருப்பதற்காகவே இந்த ஏற்பாடு. அதாவது ரீசைக்கிள் பின்னில் (Recycle Bin) உள்ள பைல்களை மீளவும் பெற்றுக் கொள்ளலாம் அல்லது நிரந்தரமாக அழித்துக் கொள்ளலாம்.

ரீசைக்கிள் பின்னில் உள்ள பைல்களை மீளப் பெற்றுக்கொள்வதற்கு டெஸ்க்ரொப்பில் உள்ள ரீசைக்கிள் பின் ஐகனை கிளிக் செய்து விட்டு குறிக்கப்பட்ட பைலின் பெயரைச் செலக்ட் பண்ணி ரைற் கிளிக் (Right Click) செய்து ரீஸ்ரோர் இனைக் கிளிக் செய்ய வேண்டும். இப்போது குறிக்கப்பட்ட பைல் இருந்த இடத்திற்கே திரும்ப வந்து விடும். ஒன்றிற்கு மேற்பட்ட பைல்களையும் ஒரே நேரத்தில் ரீஸ்ரோர் செய்ய முடியும். எப்பொழுதும் ஒன்றிற்கு மேற்பட்ட பைல்களை செலக்ட் செய்வதற்கு கொன்ரோல் பட்டனை (Ctrl Button) அழுத்திப் பிடித்தவாறு பைல்களைத் தெரிவு (Select) செய்ய வேண்டும். பைல்களையும், போல்டர்களையும் ரீசைக்கிள் பின்னிற்குள் செல்லாது ஒரே முறையில் நிரந்தரமாக அழிப்பதற்கு பைல்களை அல்லது போல்டர்களைச் செலக்ட் செய்து விட்டு விசைப்பலகையில் உள்ள ஷிப்ற் (Shift) பட்டனையும், டிலீட் பட்டனையும் சேர்த்து அழுத்த வேண்டும். இவ்வாறு செய்யும் பொழுதும் தவறுதலாக அழிக்காமல் இருப்பதற்கான பாதுகாப்பு வசதி ஒன்று உள்ளது. உதாரணமாக testdocuments என்ற போல்டரினை இந்த முறையில் அழிக்கும் பொழுது Are you sure you want to remove the folder ‘testdocuments’ and all its contents? என்ற கேள்வி தோன்றும். இதில் Yes இனைச் செலக்ட் செய்தால் மட்டுமே போல்டர் அழிக்கப்படும்.

புளொப்பி டிஸ்க் (நெகிழ் வட்டு Floppy Disk) அல்லது யுஎஸ்பி ரைவ் (USB drive) களில் சேமிக்கப்படும் பைல்கள் அல்லது போல்டர்களை அழிக்கும் பொழுது இவை ரீசைக்கிள் பின் உள்ளே செல்வதில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும். கணினியின் உள்ளே (நிலை வட்டுக்கள்) உள்ள பைல்கள் மட்டுமே ரீசைக்கிள் பின் உள்ளே செல்லும்.

என் அன்புக்குரிய வாசகர்களே! இன்றும் வழமைபோல் கணினி பற்றிய அறிவை வளம்படுத்தும் நோக்கில் சில விடயங்களைப் பற்றிக்கவனித்தோம். தொடர்ந்து வாசியுங்கள். உங்கள் எண்ணங்களைத் தெரியப் படுத்துங்கள். அடுத்த இதழில் மீண்டும் சந்திப்போம். நன்றி. வணக்கம். தொடரும்.


@ GTA Square

TUTORING



Saturday & Sunday 9:00 To 11:00
- Math - Grade 9 ,10 and 11 ($10 Per Hour )
- Advanced Functions - Grade 12 ($15 Per Hour )
- Vectors and Calculus- Grade 12 ($15 Per Hour )

Kamal: 416.696.5007 / 647.268.5007
15 years experience in teaching math for high school students
(Priority will be given for home work)

YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




முட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிகு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு
தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை
8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

# மிக நீண்ட பொழுது!

மாலை 5 மணிக்கு நிகழ்ச்சி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்ட 'எங்கேயும் எப்போதும், ராஜா' என்ற இசை நிகழ்ச்சிக்காக லொஸ் ஆஞ்செல்ஸ், அமெரிக்காவில் இருந்து வந்திருந்த நண்பன், அவரது மனைவி, எனது மனைவி, பிக்கரிங்கில் வசிக்கும் வேறொரு நண்பரின் மனைவி - இவர்களுடன் நான் மாலை 3 மணிக்கு றோஜஸ் சென்ரர் நோக்கிப் புறப்பட்டேன். கனடாவில் பனிக் காலத்தில் ஒரு இசை நிகழ்ச்சி அரங்கேற்றப்படுவது ஒரு வியப்பு. இசை ஞானி என்பதற்காக இயற்கை தன் இயல்பை இசைந்து கொடுக்குமா என்ன? வானம் சினந்து அழுதுகொண்டிருந்தது. ½ மணி நேரத்தில் சென்றடையவேண்டிய சென்ரரை சென்றடைய 4 மணி நேரம் தேவைப்பட்டது. வீதிகள்தோறும் தடங்கல்கள். அதற்கும் அப்பால் வாகனம் தரிப்பதற்கு ஏற்பட்ட சிரமம் விபரிக்க முடியாததொரு துன்பம். ½ மணிநேரம் நகரின் பெரும் வீதிகள் மற்றும் குறுக்கு வீதிகளில் அலைந்து ஈற்றில் றோஜஸ் சென்ரிலிருந்து 10 நிமிட நடை தூரத்தில் வாகன தரிப்பு கிடைத்தது என்பதைவிட லஞ்சம் கொடுத்து பெறப்பட்டது என்பதுதான் உண்மை. சிரமப்பட்டு பொக்கட்டில் இருந்த வொலற்றை (wallet) எடுத்து 50 டொலர்களை ஊழியரிடம் கொடுத்துவிட்டு தரிப்பிடத்தின் உள்ளே சென்றபொழுது அங்கு பல தரிப்பிடங்கள் காலியாக விருந்ததை அறிந்தவேளை ஏமாற்றப்பட்ட உண்மை தெரிந்தது. நேரமோ இரவு 7:15 ஆகிவிட்டது. மாற்று வழியில்லை என்பதை உணர்ந்து ஏமாற்றத்தை ஏற்றுக்கொண்டு மௌனமானேன்.

வாகன தரிப்பிடத்திலிருந்து றோஜஸ் சென்ரரை நோக்கி நடந்தபொழுது கண்ட காட்சி மனதை வருடியது. வதைக்கும் குளிரையும் பொருட்படுத்தாது பல முதியவர்கள், குறிப்பாக முதிய பெண்கள் பொருத்தமான குளிருடைதன்னும் அணியாது மிகவும் கஷ்டப்பட்டு நடு நடுங்கி தள்ளாடி நடந்து சென்றது இளயராஜாவின் இசையில் இவர்கள் கொண்ட அபரீத காதலைக் காட்டியது. றோஜஸ் சென்ரரை அடைய 7:25 மணியாகிவிட்டது. Box No. 329ஐ சில நிமிடங்கள் தேடி பின் அதன் உள்ளே சென்றதும் அதுவரை இசை நிகழ்ச்சி ஆரம்பமாகவில்லை என்பது ஒருபக்கம் வியப்பாகவும் மறுபக்கம் சந்தோசமாகவும் இருந்தது. குதூகலமாக பானங்கள் அருந்தி பிற்சா சாப்பிட்ட வண்ணம் நிகழ்ச்சி எப்போ ஆரம்பமாகும் என எதிர்பார்த்துக் காத்திருந்த நண்பர்களுடன் நானும் இணைந்தேன். அப்பொழுது மதுபானம் பெறுவதற்கு பணம் தேவைப்படலாம் என்பதற்காக எனது வோலற்றை பின் பொக்கற்றில் தேடிய பொழுது பொக்கற் வெறுமையாக இருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியது. கனடாவில் ஒரு வோலற் தவறப்பட்டால் ஏற்படக்கூடிய விபரீதத்தை கனடிய வாசகர்கள் எழுத்தில் படிக்கவேண்டிய அவசியமில்லை. 300 டொலர்கள், சகலவிதமான கடன் அட்டைகள், இவற்றுடன் Driver's Licence, Health Card, Law Society Identity Card, வீட்டுத்திறப்பு, அலுவலக திறப்பு அதன் access card, இவற்றை இழந்தால் ஏற்படக் கூடிய அவலத்தை நினைத்து மனம் பதறியது. மேலும் இவற்றை தொலைத்த பலரின் கசப்பான அனுபவங்கள் மனதில் தோன்றி அச்சுறுத்தின. அதேவேளை அந்தநேரம் தொலைத்ததை தேடிப்பார்க்க முயன்றால் மனைவிக்கும் நண்பர்களுக்கும் தெரிய வந்துவிடும். அதனால் அவர்களின் இசை ரசனை பாழாகிவிடும் என்பதற்காக மௌனமாய் இருந்துவிட்டேன். வாகன தரிப்பிடத்தில் நடந்த நிகழ்வை மீழ்நோக்கிப் பார்த்த பொழுது வோலற் வாகனத்துள்தான் விழுந்திருக்க வேண்டும் என்ற முற்று முழுதான நம்பிக்கை இருந்தது.

சுமார் 7:30 மணிக்கு இசை நிகழ்ச்சி ஆரம்பமாகியது. இந்த இசை நிகழ்ச்சி பற்றிய கருத்துக் கணிப்புக்காக இக்கட்டுரை எழுதப்படவில்லை என்பதனால் அது தவிர்க்கப்படுகிறது. எங்கேயும் எப்போதும் ராஜா பற்றிய விமர்சனம் அண்மைக்காலமாக நம்மத்தியில் இடைவிடாது பேசப்பட்ட விடயம். அந்த வகையில் மிகவும் பரபரப்பை ஏற்படுத்திய இசை விழா என்பது மாற்றுக் கருத்தற்றது. இது ஒரு மேடை நிகழ்ச்சியாக அமையவில்லை என்பது எனது கருத்து. ஒரு வகுப்பறை அல்லது றெக்கோடிங் ஸ்ருடியோ போல் காட்சியளித்ததுடன் இளயராஜாவின் ஸ்துதிபாடும், அவர் புகழ்பாடும் நிகழ்ச்சியாகவும் தோன்றியது. சுமார் 4 மணி நேரத்தை வருந்திக் கழித்தேன். நிகழ்ச்சி முடிவில் என்னுடன் வாகனத்தில் வந்தவர்கள் என்னுடன் சேர்ந்து குளிரில் அவஸ்தைப்பட வேண்டாம் என்ற நோக்கத்தில் அவர்களை றோஜஸ் சென்ரரின் வெளியே நிற்கும் படி பணித்துவிட்டு நான் மட்டும் வாகனம் நோக்கி நடந்தேன். மீண்டும் அதே முதியோர் காட்சிகள். இம்முறை பூட்ஸ் அணியாது வெறும் செருப்பு மட்டும் அணிந்து குளிரில் துவண்ட ஒரு முதிய பெண்மணியைப் பார்த்து பதறிப்போனேன்.

வோலற் வாகனத்துள் இருக்குமா என்ற ஆவலில் மனம் சஞ்சலப்பட்ட வண்ணம் நடந்தேன். வாகன கதவை திறந்து வாகனத்துள் முற்றாக தேடிப்பார்த்தேன். கொட்டிய பனியில் மூடப்பட்டு தரையில் மறைந்திருக்கலாமென பனியை கீறி கிளறிப் பார்த்தேன். வோலற் கண்ணில் படவில்லை. ஏமாற்றத்துடன் எதிர்கொள்ளவிருக்கும் சவால்களை மேற்கொள்ளும் திட்டங்களை மனதில் நினைத்தவண்ணம் வாகனத்தின் மேல் உறைந்திருந்த பனியை அகற்றிக் கொண்டிருந்த பொழுது ஒரு இளைஞன் குளிரில் நடுங்கியவண்ணம் என்னை அணுகி, 'என்ர காரை எங்க பாக்பண்ணினன் என்று தெரியேல்லை.... லேக்குப்பக்கமாக என நினைக்கிறேன்.' என தனது வாகனத்தை எங்கு தரித்தார் என்பதை அறியாதவராய் அங்கலாய்த்தார். அவரைத்தொடர்ந்து சுமார் 80 வயது மதிக்கத்தக்க முதியவரும் குளிரில் நடுங்கிய வண்ணம் அங்கு வந்தார். முதியவர் இளைஞனின் அப்பா என தெரிய வந்தது. இவர்களும் இசை நிகழ்ச்சிக்காக வந்தவர்கள். இவர்கள் இருவரின் பரிதாப நிலையை பார்த்ததும் எனது சோகம் மறைந்துவிட்டது. உடனடியாக இருவரையும் வாகனத்தில் ஏறும்படி பணித்து வாகனத்தில் உஷ்ணத்தை ஏற்படுத்தினேன். அவர்களின் வாகன தரிப்பிடத்தை கண்டுபிடிப்பதற்காக அவர்கள் கூறிய திசை நோக்கி வாகனத்தை நகர்த்தினேன். சிறிது வினாடிகளில் இளைஞன் முதியவரைப்பார்த்து, 'அப்பா கமரா எங்கே?' எனக்கேட்டார். 'உன்னட்டதானே தம்பி கமரா இருந்தது' அப்பா பதில் கூறினார். இருவருக்குமிடையில் சற்றுக்குழப்பம் ஏற்பட்டது. அடுத்தவினாடியே, 'அண்ணே காரை நிறுத்துங்க' என மகன் பணித்தார். பின் இருவரும் வாகனத்தை விட்டு இறங்கினர்.

அப்பாவும் மகனும் குளிரினாலும், பொருள் இழப்பாலும் துவண்டுபோவார்களே என்ற எண்ணம் எனது சொந்தக் கவலையை ஓரம்கட்டியது. அவர்கள் நினைப்பு என்னை வருடி வாட்டியது. அதேவேளை நீண்ட நேரம் என்னைக் காணவில்லை என்ற பதட்டம் எனக்காக காத்திருக்கும் மனைவிக்கும்



## எங்கேயும் எப்போதும் ராஜா



மனுவல் ஜெசுதாசன்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்


கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

பெருமையுடன் வழங்கும்

**மகுடம் - 2013**

**பல்சுவை கலை நிகழ்வு**

மக்களால் நன்கு அறியப்பட்ட அனுபவமிக்க நடன ஆசிரியர்களின் மாணவர்கள் வழங்கும் நடனங்கள், நாடகங்கள், திரை இசை நடனங்கள், மெகா ரியூனர்ஸ் (Mega Tuners) இசைக்குழுவின் இன்னிசை மழை மற்றும் பல நிகழ்வுகள்.

காலம் : *March 23 , 2013*
நேரம் : மாலை 5:30 மணி
இடம் : Armenian Youth Centre, 50 Hallcrown Place, Toronto (Victoria park & HWY 401)

இந்நிகழ்வுக்கு கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் ஆசிரியர்கள், அபிமானிகள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலதிக தொடர்புகளுக்கு: *416.414.3327* *416.299.6645* *416.283.5265* *416.283.1439* *416.296.7037* *647.894.6467*

# மிக நீண்ட...

நண்பர்களுக்கும் ஏற்படுமே என்ற ஆதங்கத்தில் அவர்கள் நின்ற இடம் நோக்கி மெதுவாக வாகனத்தை ஓட்டினேன். மனைவியும் நண்பர்களும் வாகனத்தில் ஏறுவதற்கு வசதியாக சிரமப்பட்டு நடு வீதியில் வாகனத்தை நிறுத்தினேன். இரு திசையிலும் நகர்ந்த வாகனங்கள் எனது சட்ட மீறலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வண்ணம் ஹோன் அடித்தவண்ணமும் சிலர் கெட்ட வார்த்தைகளால் என்னை இம்சைப்படுத்தியும் சென்றனர். பின் ஆசனத்தில் முதலில் ஏறிய பானு, 'இது யாருடைய கமரா?' எனக்கேட்டபோது எனக்கு பேரதிர்ச்சி ஏற்படுத்தியது. 'ஐயய்யோ....இது......' அந்த கதையை சொல்லி முடிப்பதற்குள் என் மனம் வெந்து போனது. அப்பாவையும் மகனையும் தேடிப்பார்க்க முயன்றும் பயனளிக்கவில்லை. இதுவரை எனது சோக கதையை என் நண்பன் நந்தா தவிர வேறு யாருக்கும் நான் கூறவில்லை. நேரமோ நடு நிசியைத் தாண்டிவிட்டது. தொடர்ந்தும் மர்மத்தை சகிக்கமுடியாத நண்பன், 'வோலற் காரில் இருந்ததா?' எனக்கேட்டார். அப்பொழுதுதான் என் மனைவியும் பானுவும் ஜெகாவும் ஒருமித்து, 'என்ன வோலற்' என வியந்தார்கள். மீண்டும் அந்த கதையை சொல்லிமுடிப்பதற்குள்....என்பாட்டை....அதை எப்படி சொல்வேன்.

களைப்பும் பசியும் மன உழைச்சலும் எங்களை உலுப்பின. இருப்பினும் வோலற்றில் இருந்த டெபிற் அட்டை, கடன் அட்டைகள் - இவற்றை ரத்து செய்ய வேண்டும் என தீர்மானித்தோம். அதற்கான தொலைபேசி அழைப்பு எண்களை பெற்றுக் கொடுத்தவர் பானு. பின்பு வாகனத்தை ஒதுக்குப்புறத்தில் தரித்துநின்று சகல அட்டைகளையும் ரத்துச்செய்தோம்.

இப்பொழுது நேரம் காலை 1:00 மணி. தொடர்ந்து ½ மணி நேரம் வரை பசி ஆறுவதற்காக சாப்பாட்டுக்கடைகள் தேடி அலைந்தோம். ரெஸ்ரோறன்ற் திறந்திருந்தால் வாகன தரிப்பிடம் இருக்கவில்லை. தரிப்பிடமிருந்த ரெஸ்ரோறன்ற்ஸ் மூடப்பட்டிருந்தன. ஸ்காபொரோவில் செப்பட் மக்கவன் சந்தியில் ரிம் ஹோட்டன் 24



மணிநேரம் இயங்குவதாக கூறப்பட்டது. அங்கு சென்று பார்த்தபொழுது அதுவும் மூடப்பட்டிருந்தது. ஏமாற்றத்துடன் சற்று கிழக்கு நோக்கி வந்தபொழுது மார்க்கம் செப்பட் சந்தியில் 24 மணி நேர காலை உணவு பரிமாறும் உணவகத்தில் கூட்டம் ஏராளமாக காணப்பட்டது. அதன் உள்ளே சென்றபொழுது நேரம் காலை 2 மணி. அந்நேரம் அங்கிருந்தவர்களில் 60 சதவீதமானவர்கள் நம்மவர்கள். இசை நிகழ்ச்சியின் பின் அங்கு வந்தவர்கள் என்பது எங்களைப்போன்ற அவர்களின் உடைகளிலும் உரைகளிலிலும் அறியக்கூடியதாகவிருந்தது.

இசை நிகழ்ச்சி ஏற்படுத்திய ஏமாற்றம், அப்பா மகன் சோக நிகழ்வு, என் சொந்தக்கதை இவற்றை எல்லாம் மறந்து அந்த ரெஸ்ரோறன்ரில் ஒரு மணி நேரம் சுவையான உணவருந்தி கழித்தோம். பதின்ம வயது நினைவுகள் தோன்றின.

அமெரிக்க விருந்தினர்களை மார்க்கத்திலும், பானுவை பிக்கறிங்கிலும் விட்டு விட்டு நாங்கள் வீடு சென்றடைந்த பொழுது காலை 4 மணியாகிவிட்டது. தூக்கம் கண்களுக்கு எட்டத்தில் நின்றது. அப்பா மகன் - அவர்களின் கமரா கண்களில் தோன்றிய வண்ணம் இருந்தன. இவர்களை அடையா-ளம் காண்பதற்காக அந்த கமராவில் எடுக்கப்பட்டுள்ள காட்சிகளை பார்க்க முயன்றும் கமராவின் உரிமையாளர்களைக் கண்டுபிடிக்க முடியவில்லை. இசை நிகழ்ச்சியின் சில காட்சிகள் மட்டும் பதிவாயிருந்தன. இந்த முயற்சியில் பொழுது விடிந்தது.

காலை 7 மணிக்கே இசை நிகழ்ச்சியை கேட்டும் பார்த்தவர்களிமிருந்தும் அதன் கணிப்பீடு பற்றி உரையாடுவதற்கான அழைப்புக்கள் வரத்தொடங்கின. அழைத்தவர்கள் யாவரும் வேறு பல வழிக-ளில் அன்றைய தினம் சிரமப்பட்டுள்ளார்கள் என்பது தெரியவந்தது. இந்த அழைப்புக்களின் மத்தியில் காலை 10 மணியளவில் வந்த தொலைபேசி அழைப்பு சற்று வித்தியாசமாக இருந்தது. அழைத்தவர் ஆங்கிலத்தில் பேசினார். அவரும் இளையராஜாவின் அகம்பாவம் பற்றிப் பேசுவாரோ என நினைத்தேன். ஆனால் அவர், 'நான் பொலிஸ் நிலையம் 52ம் பிரிவிலிருந்து அழைக்கிறேன்...நீங்கள் சட்டத்தரணி அவர்கள்தானே?" என வினவினார். பொலிஸ் நிலையத்திலிருந்து தொலைபேசி அழைப்பு வந்தால் அது கைது செய்யப்பட்டு தடுப்பில் வைக்கப்பட்டிருப்பவர் என்னிடம் ஆலோசனை பெறுவதற்காக இருக்கும். அத்தகைய அழைப்பெனக்கருதி உற்சாகமாக, ஆம் என பதிலளித்தேன். 'நீங்கள் உங்கள் வோலற்றை தொலைத்து விட்டீர்களா? என அவர் தொடர்ந்து கேட்டபொழுது என்னை அதுவரை அமுக்கி வைத்திருந்த ஏதோ சுமை என்னை விட்டு அகன்ற உணர்வு ஏற்பட்டது. மேலும் உற்சாகத்துடன் ஆம் என்று பதிலளித்தேன். நான் மாலை 1 மணிவரை கடமையிலிருப்பேன் அதன் முன் நீங்கள் வந்து உங்கள் வோலற்றைப் பெற்றுக்கொள்ளலாம்..... உங்கள் அடையாள அட்டைகள், கடன் அட்டைகள் யாவும் இருக்கின்றன. ஆனால் பணம் ஒன்றுமில்லை.....உங்கள் வோலற்றை ஒருவர் நிலையத்தில் கொடுத்துவிட்டு சென்றார் எனக்கூறினார். அப்பொழுது நந்தா அன்றைய தினம் வாகன தரிப்பிடத்தில் கொடுத்த 600 அமெரிக்கன் டொலர்களை வோலற்றுள் வைக்காமல் கால்சட்டை பைக்கட்டில் வைத்தபடியால் அந்த டொலர்கள் காப்பாற்றப்பட்டன என அமைதியடைந்தேன்.

வாகனம் ஓட்டும் அனுமதி பத்திரம் என்னிடமில்லை எப்படி நான் அங்கு வாகன மோட்டி வரமுடியும் என வேடிக்கைக்காக ஒரு குதர்க்கமான கேள்வியை அந்த பொலிஸ் உத்தியோகத்தரிடம் கேட்டேன். அதற்கு அவர் மிகவும் நிதானத்துடன், 'நீங்கள் வாகனத்தை வேகமாக ஓட்ட வேண்டாம்... வீதி ஒழுங்குகளை மீறவேண்டாம்.. பொலிஸ் உங்களை மறித்தால் எனது பெயரையும் இலக்கத்தையும் அவர்களிடம் கூறுங்கள் என ஆலோசனை வழங்கினார். 24 மணி நேரத்துள் மீண்டும் ஒன்ராறியோ மாகாண தலைநகர் ரொறொன்ரோ நாடி பயணித்து வோலற்றைப் பெற்றுக்கொண்டபொழுது நேரம் மதியம் 12 மணி. எனது வாழ்வில் 20 மணி நேரத்தை முழுங்கி சாதனை படைத்த தனி ஒரு இசை நிகழ்ச்சி எங்கேயும் எப்போதும் ராஜா.

## குறிப்பு:

அப்பா மகன் கமரா என்னிடம் பாதுகாப்பாக உள்ளது. அவர்களை எனக்கு அடையாளம் தெரியும். ஆனால் அவர் பற்றிய விபரம் தெரியாது. என்னுடன் 416 444 8070 என்னும் இலக்கத்தில் தொடர்பு கொள்ளவும். உங்களுக்காகவே விசேடமாக இந்த கட்டுரை எழுதப்பட்டது.

# கத்தோலிக்க...

11ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்தவுடன், பாப்பரசர் பதவி காலியாகி விடும். அடுத்தநாள், கார்தினால்கள் ஒன்று கூடி வாக்களிப்பு தினத்துக்கான நாளை தெரிவு செய்ய கலந்து ஆலோசிப்பார்கள். பாப்பரசர் பெனடிக் கடந்த திங்கட்கிழமை வாத்திக்கன் நடைமுறையில் சில மாற்றங்கள் செய்தார். அதன்படி பங்குனி மாதம் பதினைந்துக்கு முன் கார்தினால்கள் கூடி இரகசிய வாக்கெடுப்பு நடத்தி புதிய பாப்பரசரை தெரிவு செய்யலாம்,

பாப்பரசர் 16ம் பெனடிக் தனது பதவிக்காலத்தில் பெரிய மாற்றங்கள் எதையும் பெரிதாக செய்யாவிட்டாலும், பழமை வாதப்போக்கு கொண்டவராகக் கருதப்பட்டார். ஆங்கங்கே சில கத்தோலிக்க மதநிறுவனங்களில் தலைதூக்கிய பால-ியல் சம்பந்தப்பட்ட குற்றச்சாட்டுக்களுக்கு சரியான நடவடிக்கை எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும், முஸ்லிம் மற்றும் யூதமக்கள் சம்பந்தமாக அவர் வெளிப்படுத்திய சில கடுமையான கருத்துக்களும், அவரை மறைந்த பாப்பரசர் 2வது ஜோன் போல் அளவுக்கு எல்லோர் மத்தியிலும் பெரிதாக பார்க்கப்படவில்லை.

இருபதாம் நூற்றாண்டில் எல்லா இனத்தவராலும் பெரிதும் மதிக்கப்பட்டவர் பாப்பரசர் 2வது ஜோன் போல். 1978 ஆம் ஆண்டு இளம்வயதில் பாப்பரசராக பட்டம் பெற்ற பாப்பரசர் 1வது ஜோன் போல், தெரிவாகி 39 நாட்களில் மாரடைப்பால் இறந்தபோது, அப்பதவிக்கு தெரிவானவர் தான் பாப்பரசர் 2வது ஜோன் போல். பாப்பரசர் 1வது ஜோன் போலின் மரணம் பற்றி பல யூகங்கள் அந்நாட்களில் பத்திரிகைகளில் வெளிவரத் தவறவில்லை. நிதி சம்பந்தமாக, வத்திக்கான் சில நிறுவனங்களுடன் மேற்கொண்ட சில முறை கேடுகளுக்கு புதிய பாப்பரசர் உடன்படாதபடியால் நஞ்சூட்டி கொல்லப்பட்டிருக்கலாம் என்றும் பத்திரிகைகள் சாடின. அக்காலத்தில் வெளியான கோட் பாதர் 3 திரைப்படம்



அவரின் அகால மரணத்தை தனது கதையில் உட்புகுத்தி, பிரசித்தி பெற்று, பணம் சம்பாதித்துக் கொண்டது.

இவரைத்தொடர்ந்து தனது 55 ஆவது வயதில் தெரிவான பாப்பரசர் 2வது ஜோன் போல் இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஆன்மீக நட்சத்திரமாக திகழ்ந்தார். இவரது காலத்தில் பல விதி முறைகள் உடைக்கப்பட்டன. மதசார்பற்ற முறையில் பல நாட்டு தலைவர்களை சந்தித்தார். அவற்றில் குறிப்பாக பிரிட்டன் எலிசபெத் மகாராணியை சந்தித்தது, யூதர்களின் பிரார்த்தனை மண்டபத்துக்குள் நுழைந்தது, முஸ்லிம்களின் பள்ளிவாசலுக்குள் காலடி வைத்தது போன்றவைகளை குறிப்பிட்டு சொல்லலாம். அவரின் எளிமையான பண்பு எல்லோரையும் கவர்ந்தது. தனது பதவிக் காலத்தில் தள்ளாத வயதிலும் 117 நாடுகளுக்கு பயணித்திருக்கிறார். தன்னை கத்தியால் குத்தி கொல்ல முனைந்தவனை சிறைச்சாலையில் சென்று மன்னித்த பெருமை அவரையே சாரும். 1995 இல் இலங்கை சென்றபோது நடைபெற்ற ஒரு சம்பவம் சிலபேருக்கு ஞாபகம் இருக்கலாம். கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து, வாகன பவனியாக தனது கண்ணாடி பொருத்திய வாகனத்தில் நீண்ட நேரமாக நின்ற நிலையில் வீதியில் இருமருங்கிலும் காத்திருந்த மக்களுக்கு ஆசிவழங்கி வந்தவர், திடீர் என்று கொச்சிக்கடை அந்தோனியார் ஆலயத்தைக் கண்டவுடன் தனது வாகன அணியை நிறுத்தி, கோவிலுக்குள் நுழைந்தார். கோவில் குருவானவர் அடங்கலாக முக்கியமான எல்லோரும் நிகழ்ச்சி திடலிலும், ஜனாதிபதி மாளிகையிலும் காத்திருந்தார்கள். அங்கிருந்த காவலனிடம் கழிப்பறைக்கு போக இடம்

தொடர்ச்சி 24ஆம் பக்கம்

# Malayal Bhagawathi Joythidam

## Pandit Tulsidhar Swamiji








### 100% Guaranteed Result

கேரளாவிலிருந்து வருகை தந்துள்ள பிரபல ஜோதிட வல்லுனர் பல இடங்களுக்கு சென்று தற்போது கனடா வந்துள்ளார். இவர் கைரேகை, சாதகம், முகநாடி ஆகியவை கொண்டு மிகத்துல்லியமாக நடந்தவை, நடக்க இருப்பவை பற்றிய விபரங்களைக் கூறுவார். இவற்றை எல்லாம் அறிந்து பரிகாரம் செய்து கொள்ள ஒரு முறை என்னை சந்தியுங்கள்.

- கைரேகை
- கல்வி, உத்தியோகம்
- வதிவிடப் பிரச்சினைகள்
- குடும்ப பிரச்சினைகள்
- குழந்தை பாக்கியம்
- எதிரிகள் பிரச்சினைகள்
- கர்ப்ப தோஷம்
- நாம நட்சத்திரம்
- தொழில் வியாபாரம்
- நீதிமன்ற வழக்குகள்
- திருமண யோகம்
- கணவன் மனைவி ஒற்றுமையின்மை
- சர்ப்ப தோஷம்
- கஸ்ட நஷ்டங்கள்

**Tel.:647.856.0559**

GTA Square Mall (2nd Floor)
5215 Finch Ave. E., Unit #257
Scarborough ON M1S 0C2
(FINCH & MIDDLEFIELD)

**Open 7 Days A Week, 10:00 am - 8:00pm**

# வெளியும் நேரமும்

## சார்பியல் - 15

### விஞ்ஞானத்தின் புதுமை எளிமையாக

மாக்ஸ்வெலின் சமன்பாடுகளில் இருந்து பெறப்பட்ட முடிவான மின்காந்த அலையான ஒளியின் வேகம் மாறாதது என்ற முடிவானது முன்னர் கொண்டுள்ள பல கருதுகோள்களைத் தவறானவை எனக் காட்டியதை அறிந்து கொண்டோம். இதன் விளைவானது இன்னமும் ஆச்சரியமான பல விடயங்களைத் தெளிவுபடுத்தியது. அதன்படி, 1905ம் ஆண்டுக்கு முன்னராகப் பேரண்ட வெளிபற்றியதும், நேரம் பற்றியதுமான எமது சாதாரண எண்ணத்தை மாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. நியூட்டன், வெளியை எதேச்சையானது, ஒன்றிலும் சார்பில்லாதது எனக் கூறியிருந்தார். அதுபோலவேதான் நேரமும் எப்போதும் தனித்துவமானது என்பது அவரது அசைக்க முடியாத நம்பிக்கையாக இருந்தது. சாதாரணமாகவே நாங்களும் அப்படித்தான் நம்பிக் கொண்டு இருக்கின்றோம். ஆனால் ஒளியின் ஒருமை வேகம் என்பது இரண்டு நிகழ்வுகளுக்கு இடையேயான நேரம் வெவ்வேறு அவதானிகளுக்கு வெவ்வேறானவையாக இருக்கும் என்பதனை எடுத்துக் காட்டுகிறது என்று அயன்ஸ்ரைன் கூறினார்.

எடுத்துக் காட்டாகச் எங்களின் எடுத்துக் காட்டான சுதாவின் பயணத்தைப் எடுத்துக் கொள்வோம். புவியில் இருந்து விண்மீன் ஒன்றின் கிரகத்திற்குச் சென்று, அங்கிருந்து மீண்டும் புவிக்கு திரும்பி வந்த நிகழ்ச்சிய-’னைப் பாருங்கள். சுதாவின் புவியை விட்டுப் புறப்பட்ட நிகழ்வும், பின்னர் திரும்பி வந்த நிகழ்வும் என்ன இரண்டு நிகழ்வுகளுக்கு இடைப்பட்ட காலத்தை எடுத்துக் கொண்டால், அது சுதாவிற்கு கிட்டத்தட்ட 8 வருடங்களைக் காட்ட, லதாவிற்கோ 20 வருடங்களைக் காட்டியது. இந்நியையில் சுதாவின் பயணக்காலம், 20 வருடங்கள் எனபது சரியா அல்லது 8 வருடங்கள் என்பது சரியா என்ற கேள்வி எழுகிறது. இரண்டுமே அவரவர் நிலைகளில் சரியானவை என்பதும் இப்போது எமக்குத் தெரிகிறது. அப்படியாயின் இதிலுள்ள சிக்கல் என்ன? சுலபமான விடையுள்ளது. நேரம் என்பது தனித்துவமானதல்ல, சார்பானது. இதேபோலவே, மியூஓன்களுக்கு புவியின் மேற்பரப்பின் தூரமானது. அவை தோன்றிய இடத்தில் இருந்து சில மீற்றர்கள் ஆகவிருக்க, புவியினருக்கோ மியூஓன்கள் புவியின் மேற்பரப்பில் இருந்து 60 கிலோமீற்றர் உயரத்தில் உருவானது தெரிகிறது. இங்கேயும் நேரத்தில் ஏற்பட்ட சிக்கல் காணப்படுகிறது. புவியின் மேற்பரப்பில் இருந்து எவ்வளவு உயரத்தில் மியூஓன்கள் தோன்றின? 8 மீற்றர்கள் உயரத்திலா அல்லது 60 கிலோமீற்றர்கள் உயரத்திலா? இங்கேயும் இரண்டு முடிவுகளும் சரியானவை என்பதால் தூரமும் தனித்துவமல்லாத சார்புத் தன்மையது என்பது தெளிவாகின்றது.

சிறப்புச் சார்புத் தத்துவத்தின் இவ்விரண்டு எடுத்துக் காட்டுகளும், நேரம் பற்றியதும், தூரம் பற்றியதுமான எமது சாதாரண கருத்தான ‘அவை தனித்துவமானவை’ என்பதனை மாற்றிவிட்டன. சிறப்புச் சார்பின் இந்த விளைவுகள், ஹேமான் மின்கொவ்ஸ்கி (Hermann Minkowski) என்ற ஜேர்மனிய கணிதவியலாளரின் கருத்தில் ஆழப் பதிந்து கொண்டது. இந்நேரத்தில் மைக்கல்சன் - மோர்லியின் பரிசோதனை முடிவுகளையும் பாருங்கள். நேரமெதுமையாக்கலும், நீளக்குறுக்கமும் சேர்ந்து வெளியிலே பயணிக்கின்ற ஒளியின் வேகத்தினை மாறாது எப்பவும் அகிலமாறிலியின் பெறுமானத்திலேயே வைத்திருக்கின்றன. எனவே, வெளியானது முப்பரிமாணங்களான புள்ளிகளுடன், நேரம் என்ற பரிமாணத்தையும் இணைத்து வைத்திருக்கின்றது என மின்கொவ்ஸ்கி கூறினார். இதனை வெளி-நேர நாற்பரிமாணம் எனவும் பெயரிட்டுக் கூறினார். இந்த விவகாரம் பற்றிய அவரது ஆய்வின் வெளிப்பாடாக, அவரது கணித முடிவுகள் நேரமும் தூரமும் ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்தவை என்பதைக் காட்டின. அதற்கான சூத்திரம் ஒன்றினையும் அவர் கொடுத்தார். அதனூடாக, நேரத்தினையும் மின்கொவ்ஸ்கி ஒரு பரிமாணமாகக் கூறினார். முடிவாக, மின்கொவ்ஸ்கி, முப்பரிமாணம் கொண்ட வெளியுடன், நேரம் என்ற இன்னொரு பரிமாணமும் ஒன்றாகச் சேர, வெளி-நேரம் (space-time) என்ற நாற் பரி-மாணம் உண்டு என்ற கருதுகோளினை முன்வைத்தார். கிட்டத்தட்ட மாக்ஸ்வெலின் மின்னும் காந்தமும் இணைந்து மின்காந்தம் வந்தது போலவேதான் வெளியும் நேரமும் ஒன்றிணைந்து வெளி-நேரம் வந்தது. ஆனால் மின்னும் காந்தமும் தனித் தனியான தன்மைகளைக் காட்ட வல்லன. ஆனால் வெளியும் நேரமும் உண்மையில் தனித்தனியாகக் கருதப்படக் கூடியனவல்ல. ஒன்றில் ஒன்று தங்கியுள்ளவை. எங்களது அன்றாட வாழ்வியலில் அண்ணளவான நிலையிலேயே அவற்றினைப் பார்ப்பதால் இரண்டும் வேறுவேறானவை, ஒன்றிலும் தங்கியிராதவை என்று கருதுகிறோம்.

மின்கொவ்ஸ்கி வெளியையும் நேரத்தையும் இணைத்து வெளி-நேரம் என்ற தனியான நாற்பரிமாணக் கருதுகோளினைக் கொடுக்கும் போது, அக்கருதுகோளாது பெரியதொரு இரகசியத்தை அயன்ஸ்ரைனின் ஊடாக புவியினருக்குக் கொடுக்கப் போகிறது என்பதனை அப்போது அவரே அறிந்திருப்பாரோ தெரியாது. அயன்ஸ்ரைன் ஒரு இயற்பியல்வாதியே, கணித வல்லுனர் அல்ல. ஆனாலும் சிறப்புச் சார்புத் தத்துவத்தின் முடிவுகளை கணித வடிவிற் காட்டக் கூடிய வல்லமையைப் பெற்றிருந்தார். லோறன்ஸ்சின் மாற்றீடுகளோ, அதன் விரிவாக்கமான மின்கொவ்ஸ்கியின் வெளிநேரப் பின்னலோ அயன்ஸ்ரைனின் கணித அறிவுக்கு உட்பட்டவையாகத்தான் இருந்தன. அதனால் அம்முடிவுகளை அயன்ஸ்ரைனும் இலகுவாகவே விளங்கிக் கொண்டார். தனது முடிவுகளை தெளிவுபடுத்துவதற்கு அவர் தனது அதிசய, அழகான ‘சிந்தனைப் பரிசோதனை’ (Thorough Experiment) முறைகளை பாவித்திருந்தார். அப்பரிசோதனைகளின் வன்மை காரணமாக அவற்றில் ஒன்றையேனும் நான் இங்கு எடுத்துக் காட்டவில்லை. முடிவுகளையே பகிர்ந்து கொண்டேன் தொடரும்...




உங்களது கருத்துக்களை விளப்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண்மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

- கனி -
416.261.1348
leptons@hotmail.ca






யோகா சோதிடம்
• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல் • சாதகக் குறிப்புக் கணித்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# Math Adventure Club!!




## DON'T WORRY

If you are in this situation

JOIN THE POWER TEAM NOW & GET YOUR 75% AND ABOVE AT LEAST

AVOID BEING DROP THE COURSE

**FOR G10, G11, G12 "THE POWER TEAM"**

***ACT IMMEDIATELY AND DON'T MAKE IT WORSE***

இதே நிலை தொடரவிடாமல் மாணவர்களை

செம்மைப்படுத்தும் குழுப் பயிற்சி

75% மிகக் குறைந்த முழுப்பேறு

**info: 416-666-5515**

## FINAL EXAM REVIEW

**STARTS MAY 4TH WEEKENDS ONLY**

**APRIL 20TH 2013 – FOR THOSE STUDENTS AVE BELOW 60%**

**MAY 4TH 2013 – ABOVE AND AVERAGE 60%**

**EACH CHAPTER COVERS THE MOST HIGHLIGHTED QUESTIONS + ANSWERS & AN OUTSTANDING WORK FOR YOU**

**FINAL MARKS AT LEAST 75%**

**DON'T WORRY**

**FOR G10, G11, G12**

**info 416-666-5515**

# பெண்கள் தினம்



ஒடுக்கப்பட்ட ஓர் இனமாய் அன்று
ஒரு காலம் வாழ்ந்தது பெண்இனம்
அடங்கி வாழ்ந்த பெண்களிடம்
அன்று அகப்பை கையில் தினம் தினம்

வியக்கும் விதத்தில் அறிவியலில் இன்று
விவேகம் கொண்டு கற்று அறிந்தனர்
ஆளும் வரிசையில் இன்று பெண் இனம்
ஆயுதம் ஏந்தி படையினில் நிற்கினம்

காராத்தே கற்று கொண்டு கூட அவர்கள்
கயவர்களை கண்டு தம்மை காக்கின்றனர்
ஆணுக்கு பெண் சமமென மதிப்பிட்டு
ஆற்பரித்து நிற்கின்றது பெண் இனம்

கண்ணுக்கு சமமென பெண்ணை கருதுபவர்கள்
கன்னியர் கற்பை பறிப்பது அறிவாமோ
மண்ணுக்கு சமமென மதிப்பவர்கள்
மண்ணில் பெண் உரிமை தர மறுப்பதேன்

பிறந்தபோது தந்தைக்கு பெண் அடிமை
மணந்தபோது மன்னவனுக்கு பெண் அடிமை
தாயானபின்னே தனையனுக்கு பெண் அடிமை
இறந்த பின்பு தான் பெண்ணுக்கு விடுதலையா?

*- கவிநாதம் - பரந்தாமன்*

# வசந்தமே வருக!



வசந்தமே வருக வனப்பினைத் தருக
கசப்புக் கலைத்துக் காசினி மகிழ
அசதி நீங்கி அகிலம் இயங்க
நிசமாம் காலமே நிறைவாய் வருக

இகமே விரும்பும் இனிய காலமே
சுகந்தம் சுமந்து சுவாசம் நுழையும்
இதமாம் தென்றல் இனிதாய்த் தழுவப்
பதமாய் வருக பங்குனித் திங்களில்

மனங்கள் குளிர மரங்கள் தளிர்க்க
தினமும் சிறார்கள் திடல்கள் நிறைக்க
சினமே தவிர்த்துச் சிரிக்கும் முதியோர்
கனவில் நிலவும் காலமே வருக

வண்ண மலர்கள் வடிவைக் காட்ட
எண்ணச் சிறகுகள் எழிலாய் விரிய
மண்ணில் வளங்கள் மலிந்து விளங்க
பண்ணவன் மலரடி பணிகிறோம் வருகவே!

- இராஜ்மீரா இராசையா.

இந்தப் பணம் எங்கே போகிறது என்று எப்போதாவது ஆச்சரியப்பட்டிருக்கிறீர்களா?



$1.7 பில்லியன்
இந்த மாகாணத்தின் ஆரோக்கிய & கல்வித் திட்டங்களுக்கான நிதியளிப்பில்

$130 மில்லியன்
உள்ளூர் மற்றும் மாகாண தர்ம ஸ்தாபனங்களையும் ஒன்ராறியோவின் பொழுதுபோக்குத் தடகள வீரர்களையும் ஆதரிப்பதற்கு

$112.3 மில்லியன்
OLG விளையாட்டு மைதானங்கள் அமைந்திருக்கும் நகரசபைகளிலுள்ள சமூக மையங்கள் மற்றும் கல்லூரி வளாகங்கள் போன்றவற்றின் உள்ளகக்கட்டமைப்புகளுக்கான கட்டிட நிதிக்காக பயன்படுத்தப்பட்டிருக்கின்றது

பொருளாதார நடவடிக்கைகளினால் ஒன்ராறியோவில் கடந்த ஆண்டு OLG உருவாக்கிய $3.7 பில்லியனில்* அது ஒரு பகுதி மட்டுமே ஆகும்.
*ஏப்ரல் 1, 2011 -முதல் மார்ச் 31, 2012 வரையுள்ள காலத்தின் அடிப்படையில்

OLG

OLG யின் நவீனமயமாக்கல் பற்றியும் அது உங்களுக்கு எவ்வாறு பயனளிக்கலாம் என்பது பற்றியும் ModernOLG.ca ல் மேலதிகமாய் அறிந்திடுங்கள்


SKN
SKN FINANCIAL
எண்கள் எதைப் பேசுகிறது?
$1530*
*$10,000 அடைவுக்கு PRINCIPAL REDUCTION SCHEME® (PRS) திட்டத்தின் மூலம் நீங்கள் ஒரு வருடத்தில் சேமிக்கும் தொகை.....
உங்கள் தங்க நகை அடைவுகளைத் தவணை முறையில் விரைவில் மீட்டு வட்டியை சேமிக்கும் திட்டத்தை PRINCIPAL REDUCTION SCHEME® (PRS) SKN வழங்குகின்றது
உங்கள் அனைத்துக் கட்டணங்களையும் பிரதான வங்கிகளில் செலுத்தலாம்.
Now @ Brampton
40 வருடங்களுக்கு மேலான நம்பிக்கைக்கு SKN
BRAMPTON
85, Kennedy Road South, Unit - 33
(Next to TIM HORTONS)
Kennedy & Steeles
905-499-0800
SCARBOROUGH
2677, Eglinton Avenue, Unit - 4
(Close to CIBC Bank)
Brimley & Eglinton
416-269-5393

TRIDEL

# Another Tridel project Presented By
# HomeLife GTA Realty Inc.
# 101 ERSKINE IN UPTOWN TORONTO




## Price Starting From $259,900

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

"கனவு உங்களுடையது, பொறுப்பு எங்களுடையது"

5215 Finch Ave. E, #203, Toronto - Tel: 416.321.6969
145 Traders Blvd #29, Mississauga - Tel: 905.712.2666

*Independently Owned & Operated

# தனது நாட்டையும் மக்களையும் நேசித்தவர் வெனிசியுலா அதிபர் கூகோ ஷெவேஸ்

அமெரிக்க அரசாங்கத்தை எதிர்த்து நின்று இடதுசாரிக்கொள்கைகளை நிலைநிறுத்திய மாபெரும் தலைவராக தென் அமெரிக்க மக்களால் மட்டுமல்ல உலக மக்களால் மதிக்கப்படும் ஒரு செயல்வீரனாக குகோ செவேஸ் விளங்குகின்றார். 1954ல் பிறந்த ஷெவேஸ், இராணுவ கல்லூரியில் படித்து மிகக் குறுகிய காலத்திலேயே இராணுவ தளபதி நிலைக்கு உயர்வுபெற்றவர். தனது இராணுவத்தின் அனுசரணையோடு 1992 ல் வெனிசியுலா அதிபர் கார்லோஸ் அந்திரே பிரேஸ்க்கு எதிராக புரட்சிசெய்ய முனைந்து வெற்றியடையாததால் பதவியும் பறிக்கப் பட்டு இரண்டு ஆண்டுகள் சிறையில் அடைக்கப்பட்டிருந்தார். அவர் சிறையில் இருந்தபோது இருந்த அதிபர் ராபல் கல்தேராவினால் பொதுமன்னிப்பு அளிக்கப் பட்டு 1994ல் விடுதலை செய்யப்பட்டர். அதன்பின்னர் இராணுவ வீரர் என்ற நிலையை விட்டு அரசியல் வாதியாகத் தன்னை மாற்றிக்கொண்டு அரசியலில் ஈடுபட்டார்.

ஷெவேஸ் 1954ல் வசதிகள் மிகக்குறைந்த ஏழ்மையான குடும்பத்தில் பிறந்தார். அவரின் தந்தையார் ஆசியராக இருந்தாலும் வசதி யற்ற சாதாரண கீழ்நிலையில் உள்ளவ ராகவே காணப்பட்டார். தென்மேற்குப் பகுதியில் உள்ள சபநேற்றா என்னும் கிராமத்தில் பிறந்தவர் ஷாவேஸ். அவருக்கு ஐந்து சகோதரர்கள் இருந்தனர். எல்லோருமே ஆண்கள். இவர் இரண்டாவது மகனாவார். இளமைக்காலத்திலேயே மிகவும் துடிப்பும் கட்டுக்கடங்கா மனப்போக்கும் கொண்டவராகக் காணப்பட்டார் என அவரைப்பற்றிய குறிப்புக்கள் உள்ளன. பாடசாலையிலும் சரி, இராணுவப் பயிற்சிக் கல்லூரியிலும் சரி அவருக்கு நல்ல பெயர் கிடைக்கவில்லை. குளப்படிக்காரன், கீழ்ப்படிவற்றவன் என்ற பெயரை அவர் பெற்றிருந்தார்.

இவரது பாடசாலைக் காலத்தில் உள்ளூர் வரலாற்றாசிரியர் யோஸ் எஸ்தபான் றுயிஸ் குயிவேறா வரலாறு, அரசியல் பற்றிய விளக்கங்களை ஷெவேயின் 16வது வயதில் அளித்தார். இந்த வரலாற்று அரசியல் அறிவு அவருக்கு வெனிசியுலா அரசாங்கத்தின் இராணுவக் கல்வி நிலையத்தில் பரீட்சை யில் வெற்றிபெறச்செய்ததோடு அங்கு இராணுவப் பயிற்சியையும் பெற்றுக்கொள்ள வாய்ப்பைத் தந்தது. பயிற்சியை முடித்துக் கொண்ட ஷெவே வெனிசியுலா இராணுவத்தில் இணைந்துகொண்டார். இளமைக்காலத்திலேயே பாடசாலையில் ஒரு கீழ்படிவற்ற உண்மைக்குப் புறம்பான மாணவன் என்னும் பெயரைப்பெற்றிருந்தார் எனினும் இராணுவக் கல்லூரி அவருக்கு நல்ல பயிற்சியைப் பெற்றுத் தந்தது எனலாம். 1976ல் போர்வீரன் என்ற நிலையில் இருந்து லெப்ரினன் கேணல் என்ற நிலைக்குத் தன்னை உயர்திக்கொண்டார். அங்கு பணியாற்றும் வேளை அரசாங்கத்தின் நேர்மையற்ற முறைகளைக் கண்டு மனம்



வெதும்பியதோடு அந்த அரசபீடத்தை அடியோடு சாய்க்கவேண்டும் எனவும் எண்ணங்கொண்டார். தனது படை அணியி னரை அரசாங்கத்திற்கு எதிரான ஒரு சதித்திட்டத்தில் ஈடுபட முயற்சிகளை மேற்கொண்டார். 1992ல் மேற்கொள்ளப்பட விருந்த இந்த சதிப்புரட்சியினை மோப்பம் பிடித்துக்கொண்ட அரச அதிகாரிகள் உற்சாகமடைந்து அதில் ஈடுபடத் தூண்டியவர்கள், ஈடுபட்டவர்கள் பலரைக் கைதுசெய்து சிறையில் அடைத்தும் கொன்றும் குவித்தனர். ஷெவேயும் அவர்களுள் ஒருவராக சிறையில் அடைக்கப் பட்டார். அவரை நீதியற்ற முறையில் அடைக்கப்பட்டதாக மக்கள் கருதினர். எனவே அரசிற்கு எதிராக அவரை விடுதலை செய்யுமாறு பலவாறான கோரிக்கைகளை முன்வைத்ததோடு அரசாங்கத்திற்கு எதிராகவும் கருத்துக்களை வளர்த்து வந்தனர். இதனால் அப்போதைய ஜனாதிபதியாக இருந்த றபையில் கல்றா ஷெவையையும் மற்றைய சதித்திட்டக் குற்றவாளிகளையும் மன்னித்து விடுதலை செய்தார்.

இராணுவ அதிகாரியாக இருந்த ஷெவேஸ் அரசியல் வாதியாகத்தன்னை மாற்றிக் கொண்டு ஐந்தாவது குடியரசு என்னும் கட்சியை ஆரம்பித்தார். தன்னை ஒரு இடதுசாரி அரசியல்வாதியாக வரித்துக் கொண்ட ஷெவே 1999ல் நடந்த பொதுத் தேர்தலில் 56வீத வாக்குக்களைப் பெற்று நாட்டின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். வெனிசியுலா வரலாற்றில் மிகவம இளம் வயதுடைய அரசியற் தலை-வராக அவர் தனது 44வது வயதில் நியமனம் பெற்றார்.

தனது சோசலிஸ புரட்சியினை நடைமுறைப்படுத்தும் முகமாக நாட்டின் சொத்துக்களை மக்களுக்குப் பகிர்ந்தளித் தார். இதனால் மக்களில் 80வீதமான ஆதரவைப் பெற்றுக்கொண்ட ஒரு தலை-வராக தனது பணிகளைத் தொடர்ந்தார். அதே நேரம் தனது அரசியல் தலைவராகக் கருதிய கியூபன் ஜனாதிபதி பிடல்காஸ்ரோவுடன் நல்ல தொடர்புகளைப் பேணிவந்தார். கோபிஅனான் ஐ.நாவின் பொதுச்செயலாளராக இருந்தபோது ஐநாவில் கலந்துகொள்ள அமெரிக்காவிற்கு வருகை தந்த செவேஸ் அங்கு இடம்பெற்ற நீயுயோக் மெற்ஸ் போட்டியில் முதலாவது பந்தையும் வீசி தனது துடுப்பாட்டத் திறனையும் உலகறியச் செய்து நாடு திரும்பியபின்னர் ஷெவே தனது அதிகாரங்களை நிலைநிறுத்தவதற்காக அரசியல் சீர்திருத்தத்தைச் செய்தார். புதிய அரசியல் யாப்பு ஒன்றும் இவரது காலத்தில் வரையப்பட்டது.



2000ல் புதிய யாப்பின்படி ஜனாதிபதிக்கான தேர்தல் இடம்பெற்றது. அந்தத்தேர்தலில் ஷவேஸ் மேலும் ஆறு ஆண்டுகளுக்கு ஆட்சி செய்வதற்கான அதிகாரத்தைப் பெற்றுக்கொண்டார். இந்த அரசியல் யாப்புச் சீர்திருத்தம் ஷவேஸுக்கு பல அதிகாரங்களை வழங்கியதோடு அரசியல் எதிரிகளால் அவர் ஒரு சர்வாதிகாரி எனவும் வர்ணிக்கப்பட்டார். கூகோ சவேஸ் ஒரு நவீனபாசிச வாதி எனவும் வியாபாரிகளுக்கு எதிரானவர் எனவும் எதிரணியினரால் கண்டன விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்பட்ட அதே வேளை அவர் ஒரு ஏழைகளின் வெற்றிவீரனாகவும், பிரபலம் மிக்க தலைவனாகவும் கொண்டாடப்பட்டார். ஆனால் அவருக்கான எதிர்ப்பு பல்வேறு அரசியல் சிக்கல்களை அவருக்கு ஏற்படுத்திக்கொண்டது. பெருந்தொகையான கையெழுத்தோடு பல்வேறு மனுக்கள் ஷவேயின் அரசாங்கத்தைக் கலைப்பதற்காக தேர்தல் ஆணையாளரிடம் கையளிக்கப் பட்டுள்ளன. 2002 ஷவேய்க்கு எதிரான நடவடிக்கைகள்காரணமாக மில்லியன் கணக்கான மக்கள் வீதிகளில் இறங்கிப் போராட்டினர். போராட்டக்காரர்கள் இராணுவத்துடன் கைகலப்பில் ஈடுபட்டனர். இதனால் ஷெவேஸ் தனது இராணுவத்தாலேயே கைதுசெய்யப்பட்டார். இதனால் இராணுவம் ஒரு இடைக்கால தலைவராக பெற்றோகர்மொனாவை நியமித்தது. எனினும் சில நாட்களுக்குள்ளா கவே பெற்றோகர்மொனாவைப் பதவியி லிருந்து அகற்றிவிட்டது. ஷவேஸின் துணைத்தலைவராக இருந்து டியோஸ்டாடு ஷவோயை விடுதலை செய்யும்படி அவருக்கு விசுவாசமான படையினரைப் பணித்தபோது இரண்டு நாட்களின்பின் ஷவோ ஜனாதிபதிமாளிகைக்குத் திரும்பினார். இரண்டு நாட்கள் மட்டும் நீடித்த சதித்திட்டம் வெற்றிபெறாது முடிவுற்றது.

இதன்பின்னர் ஷவே சமூகச் சீர்திருத்தங்களில் அதிகளவு பணத்தைச் செலவீடு செய்தார். எழுத்தறிவித்தல் அதாவது ஏழைப்பிள்ளைகள் அனைவருக் கும் கல்விவாய்ப்பை ஏற்படுத்துதல், மருத்துவ வசதிகளை இலவசமாக்குதல் என்பனவற்றிற்கு முதலே தேசிய

- த. சிவபாலு -
B.Ed (Hons), M.A

மயமாக்கப்பட்ட வெனிசியுலாவின் எண்ணைக் கிணறுகளில் இருந்துகிடைக்கும் பணத்தைச் செலவிடப் போதுமாக இருந்தது. இது ஷெவேயின் ஆதரவாளர்களால் பெரிதும் வரவேற்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் 2004ல் இடம்பெற்ற பொதுசன வாக்கெடுப்பில் ஷெவே மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றவும் வழிவகுத்தது. பொதுஅபிப்பிராய வாக்கெடுப்புக்கு கட்டாயப்படுத்திய எதிர்தரப்பினர் ஷவே ஆட்சியில் இருப்பதற்குத் தகுதியற்றவர் எனவும் குறிப்பிட்டனர் எனினும் மக்களின் ஆதரவைப் பெற்றுக்கொண்டமையால் ஷெவே மிண்டும் ஜனாதிபதியானார். 2006ல் இடம்பெற்ற பொதுத் தேர்தலில் ஷெவே

தொடர்ச்சி 35ஆம் பக்கம்


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

# கத்தோலிக்க...

16ஆம் பக்கத்தொடர்ச்சி

கேட்டபோதுதான், தள்ளாத வயதில் அவர் செய்யும் நீண்ட பயணங்கள் அவருக்கு எவ்வளவு சரீர உபாதைகளைக் கொடுக்கின்றன என்பதை எல்லோராலும் அறிய முடிந்தது. வழமையாக நிகழ்ச்சிகளுக்கு பல மணிநேரம் தாமதமாகி வருவதையே தனது வழமையாக கொண்டிருந்த அப்போதைய ஜனாதிபதியை, பாப்பரசர் காக்கவைத்து விட்டார் என்று இலங்கை பத்திரிகைகள் தலையங்கம் தீட்டி மகிழ்ந்தன.

மத்தியகிழக்கில் அமைதி, கருச்சிதைவு, ஓரினச் சேர்க்கை, கம்யூனிஸம்,போன்ற சிக்கலான விடயங்களில் தனது துணிச்சலான கருத்துக்களை வெளிப்படுத்தி மதசார்பற்ற ஒரு நிலையில் வேற்று மதத் தலைவர்களைச் சந்தித்து புரட்சிகரமான ஓர் ஆட்சியாளராக ஒளிர்ந்து ஒரு சிறந்த கத்தோலிக்க தலைவராக மாத்திரமல்ல சமாதானத்தின் பாதுகாவலராகவும் செயற் பட்ட பாப்பரசர் 2வது ஜோன் போல் அமர்ந்த நாற்காலியில் இனி யார் உட்காரப் போகின்றார்கள்?

அறுவர்களின் பெயர்கள் பிரஸ்தாபிக்கப்படு கின்றன. 65 வயதான கானாவை சேர்ந்த பிற்றர் தேர்க்சன், கனடா குபெக்கை சேர்ந்த 69 வயதான மரக் ஔலெட், நைஜீரியாவை சேர்ந்த 81 வயதான பிரான்சிஸ் அரின்செ மற்றும் இத்தாலியை சேர்ந்த 79 வயதான எவசியோ பெர்டோன், 72 வயதான அஞ்சேலோ ஸ்கோல, 65 வயதான பிரஸ் டி அவிஸ் ஆகியோரில் ஒருவர் தெரிவாகலாம் என்று எதிர்பாக்கப்படு கிறது. பாப்பரசர் பதவியை 1523ஆம் ஆண்டின் பின்னர் இத்தாலியர் அல்லாத போலந்து நாட்டின் ஜோன் போல் II மற்றும் பதவி விலகியுள்ள ஜேர்மனி நாட்டைச் சேர்ந்த பாப்பரசர் 16ம் பெனடிக்ட் ஆகிய இரண்டு பேர் மட்டுமே இதுவரை வகித்துள்ளனர். எனவே இம்முறை இத்தாலியைச் சேர்ந்த ஒருவருக்கு அப்பதவி வழங்கப்பட வேண்டுமென ஒருசாரார் கடுமையாக வாதிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதைவிட இம்முறை அப்பதவி வளர்ந்து வரும் நாடொன்றைச் சேர்ந்த ஒருவருக்கே வழங்கபடவேண்டு மென்ற வலுவான கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டுள்ளன. இன்னும் சிலவாரங்களில் வத்திக்கன் புகைபோக்கி யில் இருந்து வெண்புகை வெளி வரும்போதுதான் இதற்கு பதில் கிடைக்கும். பதவி விலகிய பாப்பரசர் அன்று இரவே உலங்கு வானூர்தியில் வத்திக்கானை விட்டு வெளியேறி நானூறு வருட பாரம்பரியம் கொண்ட வத்திக்கானுக்கு வெளியே அமைந்திருக்கும் கோடைகால விடுமுறை மாளிகையில் சில காலம் தங்கியிருப்பார். தற்சமயம் வத்திக்கான் சுவர்களுக்குள் இருக்கும் பழைய கன்னியர் மடம் ஒன்று, இளைப்பாறிய பாப்பரசர் பெனடிக் தனது கடைசிக் காலத்தை அமைதியாக களிப்பதற்காக தற்சமயம் புனரமைப்பு செய்யப்படுகிறது. சில மாதங்களில் அவர் மீண்டும் வத்திக்கான் திரும்பி தனது இறுதிக் காலத்தை அங்கு அமைதியாக களிப்பார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. புதிய பாப்பரசரின் நிர்வாகத்தில் எந்தவித தலையீடும் செய்ய மாட்டார் என்று சொல்லப்பட்டாலும் பல நடைமுறை சிக்கல்களை எப்படி தவிர்ப்பது போன்றவை- களை இனித்தான் தீர்மானிக்கப் பட வேண்டும். இராஜினாமா செய்த பின்பு அவரை எப்படி அழைப்பது? முக்கியமான



பத்திரங்களை முத்திரையிடப் பாவிக்கப்படும் அவரின் மோதிரத்தை என்ன செய்வது? புதிய பாப்பரசர் இவரை எப்படி மரியாதை செய்து அழைப்பது போன்ற பல கேள்விகள் ஏற்கனவே பலரின் மனதிலும் எழத்தொடங்கிவிட்டன.

எல்லோரினதும் எதிர்பார்ப்பு இப்படி இருக்கும்போது பாப்பரசர் பெனடிக் வத்திக்கானை விட்டு வெளியேறிய, அடுத்த சில நாட்களில் ஒன்று கூடிய கர்தினால்கள், கடந்த செவ்வாய்க்கிழமை புதிய பாப்பரசரை தெரிவு செய்யும் தினமாக தீர்மானித்தார்கள். கிறிஸ்தவர்கள் தமது புனித வாரமாக கருதும் ஏசுநாதர் இறந்து உயித்தெழுந்த நாட்களைக்கொண்ட ஈஸ்டர் வாரம் பங்குனி மாதக்கடைசியில் வருவதால், புதிய பாப்பரசரை அதற்கு முன்தெரிவு செய்யப்பட வேண்டிய ஒரு இக்கட்டான நிலைக்கு கர்தினால்கள் தள்ளப்பட்டார்கள்.

கடந்த செவ்வாய்க்கிழமை மாலை சென் பௌலின் ஆலயத்தில் ஒன்று கூடிய கர்தினால்கள் நடை பவனியாக புனித செஸ்ரின் ஆலயத்தை வந்தடைந்தார்கள். உலகப் புகழ்பெற்ற ஓவியர் மைக்கல் அஞ்சலோவின் பிரபலமான சித்திரங்கள் இவ்வாலயத்தில் இருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது. வெளியே புனித இராயப்பர் சதுக்கத்தில் மழையையும் பொருட்படுத்தாது எதிர்பார்ப்புடன் காத்து நின்ற மக்களுக்கு புனித செஸ்டின் ஆலய புகைக்கூட்டில் இருந்து வந்த கரும் புகை இரண்டு வாக்களிப்புக்கு பின்பும் பாப்பரசர் தெரிவு செய்யப்படவில்லை என்பதை உணர்த்தி நின்றது. அன்றிரவு ஓய்வுபெற கர்தினால்கள் விடுதிக்கு திரும்பினார்கள். ஏமாற்றத்துடன் மக்கள் வீடு திரும்பினார்கள். இவ்விடுதியிலிருந்த எல்லா விதமான வெளியுலக தொடர்புகளும் துண்டிக்கப்பட்டு அங்கு கடமை புரியும் சேவகர்களும் இரகசியம் பேணும் சத்தியப்பிரமாணம் எடுக்கப்பட்டபின்பே சேவைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

புதன்கிழமை மதியமும், இரண்டு வாக்களிப்பு முடிவடைந்ததற்கு அறிகுறியாக மீண்டும் கரும்புகை வெளியேற்றப்பட்டு கர்தினால்கள் இன்னும் ஒரு முடிவுக்கு வரவில்லை என்பதை உணர்த்தி கூடி நின்ற மக்களை ஏமாற்றம் அடைய செய்தது. ஆனால் அன்று மாலை வெளியேறிய வெண்புகையோ, கர்தினால்கள் புதிய பாப்பரசரை தெரிவு செய்து விட்டார்கள் என்பதை காட்டி நின்றது. தொலைக்காட்சி, வானொலி நிலையங்கள், இணையத்தளங்கள், சமூக வலைத்தளங்கள் போன்றவை யார் முதலில் செய்தியை உலகுக்கு பறை சாற்றுவது என்பதில் மும்முரமாகின. றோம் நகர மக்கள் வெள்ளம் புனித இராயப்பர் சதுக்கத்தை நோக்கி நகர்ந்தது. எல்லோரினது பார்வையும் மாடத்தை நோக்கியே இருந்தன. ஏறத்தாள கனடா நேரம் மூன்று மணிக்கு கர்தினால்கள் சகிதம் புதிய பாப்பரசர் மாடத்திலிருந்து கையை அசைத்து மக்களுக்கு காட்சி கொடுத்தார்.

யாருமே எதிர்பார்க்காதபடி, அர்ஜென்டினாவை சேர்ந்த கர்தினால் ஜோர்ஜ் மரியோ பெர்கொக்லியோ தெரிவு செய்யப்பட்டு பல நூற்றாண்டுக்கு பின் தெரிவான ஐரோப்பியர் அல்லாத முதல் பாப்பரசர் என்ற பெருமையைத்தட்டிக் கொண்டார். கருத்தடை, கருவழிப்பு ஓரினசேர்க்கை போன்றவற்றில் இறுக்கமான பழைமைவாத கருத்துக்களை கொண்டவரானாலும், எளிய மக்களின் சமூக நலன்களில் பெரிதும் ஈடுபாடு கொண்டவராக எல்லோராலும் பெரிதாக அறியப்பட்டவர். கர்தினாலாக இருக்கும் போது அவருக்குரிய ஆடம்பர கார் பங்களா போன்றவற்றை தூக்கி எறிந்து விட்டு, சாதாரண மக்களுடன் பஸ்சில் பயணித்து, எளிமையான ஒரு தொடர் மாடிக்கட்டிடத்தில் தங்கி தனது உணவை தானே தயாரித்து வாழ்ந்து காட்டியவர் என்று அறியப்படுகிறார். அவர் தனக்கு தெரிவு செய்த பிரான்சிஸ் என்ற பெயரே அதற்கு கட்டியம் கூறியது. பன்னிரண்டாம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த புனிதர் பிரான்சிஸ் ஏழை மக்களின் மீட்பன் என்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டவர்.

புதிய பாபரசர், இத்தாலியப் பெற்றோருக்கு மகனாக பிறந்த இவர் நுரையீரல் சுகவீனம் காரணமாக தனது பட்டப்படிப்பை துறந்து பத்து ஆண்டுகளின் பின் தனது 32 வது வயதில் குருவானவராக பட்டம் பெற்றார். ஆரம்பத்திலிருந்தே அவரின் பணிகள் ஏழை மக்கள் அதிலும் சேரிப்புற வாழ் மக்களை நாடியே இருந்தது. படிப்படியாக மேலுயர்ந்து 1998 இல் கர்தினாலாக, பாப்பரசர்

தொடர்ச்சி 35ஆம் பக்கம்

MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# ....பிடித்தவர்கள்

## தொடர்கதை

### இக்கதையின் பெயர்கள், சம்பவங்கள் யாவும் கற்பனையே

'ஒவ்வொரு நாளும் அங்கை போகத் தேவையில்லை. முதல்நாள் போய் நீங்கள் ஓம் எண்டு சொன்னால், மிச்சமெல்லதாத்தையும் சாமியாரே பாத்துக் கொள்ளுவாராம். நூல் திரிச்சு ஏழு நாளும் பூசையில் வைத்து சொல்ல வேண்டிய மந்திரமெல்லாம சொல்லி' அவரே எல்லாம் செய்வார். நீங்கள் போக வேண்டுமெண்டில்லை. ஏழாம் நாள் போய், ஒரு மணித்தியாலப் பூசையிலை இருந்திட்டு வரவேணும்.. பிறகு எட்டாம் நாளில் நூலை உங்கடை கையில் தருவாராம். நீங்கள் வீட்டுக்கு வந்து விரும்பிய மாதிரிக் கட்டிக் கொள்ளலாம்.'

'ம் பாப்போம்' என்டாள் நீலவேணி.

நீலவேணி பாப்போம் என்று சொன்னதும் அன்னப்பிள்ளை மாமிக்கு உற்சாகம் வந்து விட்டது.

'போக நினைச்சால் வெள்ளிக்கிழமை பாத்துப் போங்கோ பிள்ளை. வெள்ளிதான் நல்ல நாள். காலைப் பூசைதான் நல்லது. பின்நேரம் அல்லது இரவு கூடப் போகலாம்.' என்ற மாமி 'மற்றது பிள்ளை கொஞ்சம் வில்லங்கமான பூசை எண்டால் 504 டொலர் கேட்பாராம். நீங்கள் போகேக்கை ஆயத்தமாகப் போகலாமெல்லே'

'சரி மாமி, நான் இவரிட்டைக் கேட்டுப் பாக்கிறேன். ஓமெண்டு சொல்லுவாரோ தெரியேல்லை. அப்பிடி ஓமெண்டு சொன்னாரெண்டால் ஒருக்காச் செய்து பாக்கலாம்தான்.'

'ஓம்பிள்ளை. அவன் சரி எண்டு சொல்லுவான். நான் எதுக்கும் பார்க்காலை திரும்பி வரேக்கை கனகத்திட்டை சாமியாரின்டை பெயரையும் விலாசத்தையும் மெதுவாய் கேட்டு வந்து சொல்லுறேன். ஆருக்கு ஏன் எண்ட விசயமெல்லாம் ஒரு குருவிக்கும் தெரிய வராது. பிறகு நீங்கள் விரும்பின மாதிரிச் செய்யுங்கோ' எனக் கூறிய மாமி பார்க்குக்கப் போக ஆயத்தமானாள்.

நீலவேணி மாமியின் கைகளைப் பார்த்தாள். உட்காரணம் ஏதுமின்றித்தான் பார்த்தாள்.

மாமி அதைக் கண்டுகொண்டார்.

'நான் அங்கை ஒண்டுக்கும் போகேலை.' என்றவர், கைகளைக் நீட்டிக் காட்டியபடி, 'இஞ்சை பார் பிள்னை ஒண்டுமில்லை' எனக் காட்டினார்.

மாமி இடுப்பைக் காட்டவில்லை. மாமியின் இடுப்புப் பகுதி போட்டிருந்த நீண்ட ஆடையால் மறைந்திருந்தது. இப்ப கொஞ்ச நாட்களாக மாமி இதுபோன்ற முழு உடம்பையும் மறைக்கும் ஆடைகள்தான் அணிகின்றார்.

அன்று வெள்ளிக்கிழமை. காலை 7 மணி.

சிவாவும் நீலவேணியும் அன்னப்பிள்ளை மாமி கூறிய சாமியாரின் வீட்டுக்கு வந்திருந்தார்கள். எஸ்தர் வரவில்லை. வரமாட்டேன் என்றுவிட்டாள். சிவாவும் முதலில் வர மறுத்துத்தான் இருந்தான். பின்னர் நீலவேணியின் நச்சரிப்புத் தாங்கமுடியாமல் வந்துவிட்டான்.
வீட்டு வாசலில் பாதணிகளைக் கழற்றி வைத்தார்கள். இன்னமும் இரண்டு சோடி பாதணிகள் வாசலில் இருந்தன. வாசலில் ஒரு பத்து வயதுச் சிறுவன். 'உள்ளை வந்து இருங்கோ. தாத்தாவோடை ஆரோ இருக்கினம். அவை வந்தாப்போலை நீங்கள் உள்ளை போகலாம்:'
'விபரமான பையன் போலை' சிவா தனக்குள் சொல்லிக் கொண்டான்

சாமியாரின் வீட்டு வரவேற்பறையில் இருவரும் வந்து அமர்ந்தார்கள். வரவேற்பறையை அடுத்து இருந்த அறைதான் சாமியாரின் (அலுவலக) அறை, சாத்தியிருந்தது. உள்ளேயிருந்து சந்தணம், சாம்பிராணிப் புகை போன்றவற்றின் மணம் கமகம என வந்து கொண்டிருந்து. அறைக்கதவின் கீழாக இருந்த இடைவெளியின் ஊடாகத்தான் இந்த மணங்கள்.

உள்ளே யாரோ இருக்கின்றார்கள். இடைக்கிடை கதைக்கும் சத்தம் கேட்டது.

சிவா மணிக்கூட்டில் நேரத்தைப் பார்த்தான்
நேரம் ஏழரை!

◊ கனி ◊

ஒன்பது மணிக்கு வேலையிடத்தில் நிற்கவேணும். எட்டரை மணிக்கென்டாலும் சாமியார் விட்டால்தான் வேலைக்கு நேரத்திற்குப் போகலாம். 'சில சமயம் வேலைக்குப் பிந்தி வரவேண்டி வரலாம்' என்று ஏற்கனவே அனுமதி பெற்றிருந்தாலும் மனம் ஏனோ அந்தரப்பட்டுக் கொண்டு இருந்தது.

இன்னமும் பத்து நிமிடங்கள் கடந்து விட்டன.

தொடர்ச்சி 10ஆம் பக்கம்





**TAXES TAXES TAXES**

**வரிகள் (காலை) வாராது காப்போம்**

Ask your Neighborhood Tax Professionals on how to
***Pay Less TAX, Get Best Refunds, Plan Your Next Year's TAXES***
Negotiate Tax Payments with CRA (Our team includes retired CRA Auditor/Appeals Officer)
Phone numbers to call this home based professional alliance

| | | |
|---|---|---|
| *Markham & Eglinton* | *416-901-0929* | *(SIVA)* |
| *Warden and Finch* | *416-492-7957* | *(YOGA)* |
| *Steeles and Pharmacy* | *647-782-2790* | *(JOHN)* |

We speak English, Tamil, Sinhalese, Arabic, Farsi, and Afghani, for your convenience.
Our services also include
1. Business Accounting and Tax 2. Business Registration and Start-up
3 Business Advice, and Budgeting. 4. Review Tax Assessments and Raise Objections

Please visit our website to know more about our bio data and the other specialized services we provide for the business community.
***www.sivassolutions.ca***

***ACT NOW***
• Free pick up and delivery
• New clients get a special Tax preparation Discount.

***Contact us for a pre Tax preparation discussion and RRSP advise before Feb. 15 to have your return prepared free of charge (some restrictions may apply).***

# BASEMENT RENT

**BOVAIRD & CREDITVIEW (BRAMPTON)**
A room upstairs with all facilities & 1 bedroom bsmt also avail. for rent. Close to shopping, Go station, TTC. Ladies preferred. December rent free.
416.704.1344 / 647.832.9183

**NEILSON & MCLEVIN**
Bsmt Bedrooms for rent. Sep. entrance, kitchen, laundry. Close to TTC, Malvern mall, school. No smoking. Avail. April 01, 2013.
416.724.8727 / 647.280.6163

**MARKHAM & DENISON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 parking, laundry. Close to all facilities. No smoking & No pets. Avail. April 01, 2013.
647.521.5092 / 905.472.0313

**MARKHAM & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.438.3724

**NEILSON & MORNINGSIDE**
2 அறைகள் கொண்ட Bsmt இல் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance, parking, laundry. Close to all facilities. விரும்பினால் உணவும் கொடுக்கப்படும். Boys preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.298.9913

**MCLEVIN & NEILSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry. Close to TTC, mall, bank, school. Avail. Anytime.
416.281.4065 / 416.278.4568

**MORNINGSIDE & SHEPPARD**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Utilities included.
416.284.8757 / 416.877.4839

**MARKHAM & STEELES**
1 Bedroom bsmt for rent. Washroom, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.889.1083

**MORNINGSIDE & SHEPPARD**
2 Bedroom bsmt fo rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. April 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.429.6963

**NEILSON & FINCH**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.564.4200

**9TH LINE & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
905.554.7476 / 416.371. 7146

**MCCOWAN & ELLESMERE**
2 bedroom walk-out bsmt for rent. Sep. entrance, laundry. Minutes to Scarborough Town Centre, Hwy 401, Two - 24-hour bus routes. Please no smoking, pets. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.264.9918

**BRIMORTON & SCAR.GOLF CLUB**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. April 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.575.6226

**MIDLAND & EGLINTON**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.726.2472 / 416.287.2732

**MARKHAM & 14TH AVE.**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.400.3037

**MORNINGSIDE & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. April 01, 2013.
416.356.1477 / 416.282.3452

**SCAR.GOLF CLUB & KINGSTON**
Newly renovated 2 bedroom walk-out bsmt for rent. Laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.618.0153

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, utilities included. Close to all facilities. Avail. April 15, 2013.
தொடர்புகளுக்கு: 416.895.0812

**MCCOWAN & DENISON**
New 1 bedroom bsmt for rent. Close to all facilities. Single person preferred. Avail. April 01, 2013.
தொடர்புகளுக்கு: 416.605.9088

**MORNINGSIDE & KINGSTON**
2 Bedroom + 1 den bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. April 15, 2013.
தொடர்புகளுக்கு: 416.816.5293

**NEILSON & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.833.8903

**MORNINGSIDE & NIGHT STAR**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, full kitchen, full washroom. Close to TTC, mall, school, bank. Avail. immediately.
416.493.8928 / 416.464.4132

**BIRCHMOUNT & DANFORTH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, living room. Close to all facilities. Avail. Anytime.
416.624.1717 / 416.699.9374

**MARKHAM & DENISON**
Brand new 2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
647.761.5599 / 905.479.5599

**MCLEVIN & NEILSON**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Couple preferred. Close to all facilities. 1 Bedroom for rent in a main floor. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 647.771.8426

**MORNINGSIDE & MCNICOLL**
1 Bedroom walk-out bsmt for rent.Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.893.4478

**VICTORIA PARK & LAWRENCE**
1 bedroom walk-out bsmt apt. for rent. Cable television, internet, parking. Close to TTC, Wexford Swimming Pool & Wexford High school, Temples & Churches.
416.288.9575 / 647.866.9575

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to temple, GTA Square Mall, TTC. Avail. immediately.
416.888.0926 / 416.332.9363
(Call after 4.30pm)

**MCCOWAN & DENISON**
2 Bedroom bsmt. apt. for rent. Sep. entrance. Parking, laundry, utilities including. Close to bus, shopping, school, etc. Avail. immediately.
905.201.4812 / 647.768.1499

**KENNEDY & LAWRENCE**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.836.0800

**MORNINGSIDE & MORNINGVIEW**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, school, bank. Avail. March 15, 2013.
தொடர்புகளுக்கு: 416.627.6001

**MORNINGSIDE & NEILSON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, mall. Avail. immediately.
416.473.2988 / 647.990.4584 / 416.335.9883

**MORNINGSIDE & OLD FINCH**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.792.3661

**MAJOR MACKENZIE & MARKHAM**
2 Bedroom bsmt for rent. Parking, laundry. Close to YRT, mall. Avail. immediately. Single mother or Seniors preferred.
தொடர்புகளுக்கு: 416.856.6197

**MCCOWAN & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance. Ladies only. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.768.0475

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Rent $900. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.575.5055

**MARKHAM & SHEPPARD**
1 Bedroom bsmt + 1 Room for rent in main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.754.7172

**MCCOWAN & ELSON**
Newly renovated 2 bedroom bsmt apt. for rent. Sep. entrance, parking, laundry. Step to school, TTC. Quiet place. Park near-by. Avail. immediately.
647.991.4437 / 905.205.0595

**NEILSON & SHEPPARD**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Couple or Single person preferred. Avail. immediately.
647.349.7252 / 647.702.8300

**MORNINGSIDE & FINCH**
Newly renovated 1 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Avail. April 01, 2013.
தொடர்புகளுக்கு: 647.855.0339

**BRIMLEY & EGLINTON**
1 Bedroom bsmt for rent. Sep. entrance. Share with one person. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.833.2077

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, bank, school. Avail. immediately. குழந்தைகளை பராமரிப்பதற்காக வயதானவர்களுக்கு குறைந்த வாடகைக்கு கொடுக்கப்படும்.
647.909.0475 / 416.800.6404

**MARKHAM & ELSON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to TTC, YRT, school. Avail. April 01, 2013. (Call after 6:00 pm)
தொடர்புகளுக்கு: 416.566.2601

**MARKHAM & DENISON**
1 bedroom for rent. Sep. entrance. Parking, cable & laundry. Close to TTC, YRT, Mall & school. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.339.1062

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately. Small family preferred.
தொடர்புகளுக்கு: 416.846.0190

**MIDDLEFIELD & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. April 01, 2013.
905.201.9901/416.648.1987

**WARDEN & SHEPPARD**
1 Bedroom bsmt for rent. Laundry. Close to all facilities. Avail. immediately. Students or old people preferred.
தொடர்புகளுக்கு: 647.448.6464

**MORNINGSIDE & STAINES**
1 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. Anytime.
தொடர்புகளுக்கு: 416.726.9275

**MCLEVIN & NEILSON**
Newly 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.971.6959

**BELLAMY & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry, unlimited internet. Close to all facilities. Avail. immediately.
647.427.9684 / 416.268.7918

மேலும் பக்கங்கள் 27, 28

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு **www.vlambaram.com**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# BASEMENT RENT

**SCAR.GOLF CLUB & ELLESMERE**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.836.2253

**MARKHAM & STEELES**
2 bedrooms bsmt for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately. Rent $650. தொடர்புகளுக்கு: 647.740.5623

**EILSON & FINCH**
1 Bedroom walk-out bsmt for rent. Sep. entrance, parking, laundry, cable. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.412.0268
(Leave the message)

**MARKHAM & HIGH GLEN**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.473.8520

**MARKHAM & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, 2 parking, laundry. Close to TTC, school, mall. Avail. immediately. தொடர்புகளுக்கு:
416.875.4377 / 647.765.2443

**MORNINGSIDE & SHEPPARD**
1 Bedroom bsmt walk-out for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.888.2630

**STAINES & STEELES**
2 bedroom bsmt and 1 Bedroom for rent - main floor. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.805.5722 / 647.348.1913

**MORNINGSIDE & MCLEVIN**
1 Bedroom walk-out bsmt fo rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
416.519.2899 / 416.303.6589

**NEILSON & FINCH**
1 bedroom bsmt for rent with food. Parking, cable, laundry. Close to Malvern Mall, school & bus. பெண்கள் மட்டும். Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.297.4100

**MORNINGSIDE & SEWELLS**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.839.0679

# HOUSE FOR LEASE

**BRIMORTON & MCCOWAN**
3 + 3 Bedroom house for lease. 3 Washrooms, parking, laundry. Close to all facilities. தனித்தனியாகவும் அறைகள் கொடுக்கப்படும்.
தொடர்புகளுக்கு: 416.301.5555

# வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணத்தில் Brown Road இல் வீடு ஒன்று சகல வசதிகளுடனும் வாடகைக்கு உள்ளது.
தொடர்புகளுக்கு: 416.931.3444

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# ROOM FOR RENT

**MIDDLEFIELD & DENISON**
2 Bedrooms for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
**9TH LINE & 14TH AVE**
1 Bedroom also avail.
905.201.9901 / 416.648.1987

**MORNINGSIDE & MCNICOLL**
2 bedroom for rent in amain floor. Parking, laundry. Close to all facilities. 2 Bedroom bsmt also avail.
தொடர்புகளுக்கு: 416.837.9441

**MORNINGSIDE & MILITARY TRAIL**
1 Bedroom for rent. parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 647.500.3580

**MARKHAM & DENISON**
1 Bedroom for rent. Laundry, kitchen. With meals or without meals. Avail. immediately.
647.504.3336 / 416.356.3773

**MORNINGSIDE & FINCH**
1 Bedroom for rent. Laundry, washroom. Avail. Anytime. Ladies preferred.
416.930.3713 / 416.299.8124

**MARKHAM & BRIMORTON**
1 Bedroom apt. and 1 bachelor apt. for rent. Close to all facilities. Avail. immediately.
**LAKESHORE & 3RD STREET**
1 Bedroom also avail. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 416.417.5059

**KENNEDY & LAWRENCE**
1 Bedroom for rent. Washroom, laundry. Close to RT Subway. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.757.9733

**WARDEN & FINCH**
1 Master bedroom Condo. for rent. Sep. full washroom, internet, car parking, fully furnished. GYM, swimming pool. Avail. immediately. Male student or working man preferred.
தொடர்புகளுக்கு: 416.452.0765

**MAIN & DUNDURN - HAMILTON**
5 Min to McMaster University 3 rooms avail. immediately. Girl students only. Close to all facilities. Fully furnished.
416.986.2528 / 416.284.8291

**MARKHAM & ELLESMERE**
3 Bedroom apt. இல் 1 bedroom சகலவசதிகளுடன் வாடகைக்குஉண்டு. Close to all facilities. Avail. immediately.
416.557.7241 / 647.852.4555

**NEILSON & SILVER BELL**
3 அறைகள் உள்ள வீடும் bsmt ம் வாடகைக்கு உண்டு. மல்வேன் Mall இற்கு அருகாமையில். TTC, school அனைத்து வசதிகளும் உண்டு.
தொடர்புகளுக்கு: 647.848.7121

**MCCOWAN & LAWRENCE**
Room for rent. Sep. entrance, parking. Close to all facilities. Avail. immediately.
647.827.5529 / 647.294.2212 / 647.717.9537

**MIDDLEFIELD & MCNICOLL**
மேல்தளத்தில் 1 படுக்கை அறை வாடகைக்கு உண்டு. Kitchen, living room, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.803.2587

# ROOM FOR RENT

**MIDLAND & EGLINTON**
1 Room for rent in 3 bedroom bungalow house. Close to all facilities. Avail. immediately. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 416.906.5013

**FINCH & MIDDLEFIELD**
1 Bedroom for rent in a condo. Parking, laundry, kitchen. Close to all facilities. Rent $400. Ladies preferred.
தொடர்புகளுக்கு: 647.835.5244

**PHARMACY & FINCH**
1 Bedroom for rent - Main floor. Parking, laundry. Close to TTC, schools. இரண்டு நேரச்சாப்பாடும் கொடுக்கப்படும். Avail. immediately. பெண்கள் விரும்பத்தக்கது.
416.201.1222 / 416.299.4895

**MARKHAM & SHEPPARD**
சகல வசதிகளுடன் கூடிய 3 அறைகள் கொண்ட வீட்டில் ஒரு அறை வாடகைக்கு உண்டு. Sep. entrance. kitchen, washroom, parking, Laundry. Avail. immediately. Close to TTC, school, mall...
தொடர்புகளுக்கு: 416.335.5242

**LAWRENCE & PHARMACY**
**2** நேரச் சாப்பாட்டுடன் Room வாடகைக்கு உண்டு. 4 Bedroom bsmt சகல வசதிகளுடன் உண்டு. மற்றும் மேல் தளத்தில் 1 அறை வாடகைக்கு உண்டு. குறைந்த செலவில் TVI, Sun TV, Vijay TV, free Internet தேவையெனில் ஒழுங்கு செய்து தரப்படும். ஆண்கள் விரும்பத்தக்கது. தொடர்புகளுக்கு:
647.388.1481 /416. 759.7016

**BELLAMY & LAWRENCE**
Newly renovated 2 bedroom bsmt for rent. Sep. entrance, parking, laundry. Closet o all facilities. Avail. immediately.
416.438.2626 /416.779.7563

**WARDEN & FINCH**
2 Bedroom for rent. Laundry. Close to TTC, mall, school, Seneca college, etc. Ladies or couple preferred.
தொடர்புகளுக்கு: 416.493.6540

**MORNINGSIDE & SHEPPARD**
***Morningview Trail***
4 அறைகள் கொண்ட வீட்டில் 2 அறைகள் வாடகைக்கு உண்டு. Washroom, kitchen must be shared. Female preferred. Close to ttc - 131 bus, school.
தொடர்புகளுக்கு: 416.805.8791

**FINCH & BIRCHMOUNT**
1 Bedroom for rent. Sep. entrance, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.890.5267

**BIRCHMOUNT & MCNICOLL**
1 Bedroom for rent. Parking. Close to TTC, mall. Avail. immediately.
647.346.0930 / 647.783.4876

**MORNINGSIDE & NEILSON**
1 Large bedrooms வாடகைக்கு உண்டு. Washroom, parking. பெண்கள் / தம்பதியினர் விரும்பத்தக்கது. Including bedroom set. Close to all facilities. Avail. immediately.
416.267.0072 / 647.740.5162

**MARKHAM & LAWRENCE**
Newly renovated bsmt apt. Avail. immediately. Close to TTC, mall, Centennial college.
647.706.4881 / 416.439.4076

# ROOM FOR RENT

**KEELE & EGLINTON**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, York University, no frills. 1 bedroom bsmt with sep. entrance also available. Avail. immediately.
416.658.1144 / 416.302.3070

**KENNEDY & LAWRENCE**
Rooms available in main floor. Bsmt Apt. available. Close to subway, bus, stores...
தொடர்புகளுக்கு: 416.830.5560

**NEILSON & FINCH /MORNINGSIDE**
Rooms for rent. Parking, laundry. Close to TTC, mall, school. Avail. immediately. 2 & 3 bedrooms condo. for rent.
647.361.9527 / 416.825.9717

# HOUSE FOR RENT

**KENNEDY & ELLESMERE**
3 Bedroom house for rent. Parking, laundry. Close to Highland farm, hopper hut, TTC. Avail. April 01, 2013. No pets & no smoking.
647.760.8275 / 416.587.8275

**MARKHAM & LAWRENCE**
3 Bedroom house for rent. 2 Washroom, 4 parking. Close to TTC, Cedarbrae mall. Avail. immediately
தொடர்புகளுக்கு: 416.817.2072

**14TH AVE. & BOX GROVE**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.587.0408

**NEILSON & SHEPPARD**
3 Bedroom house for rent. Parking, laundry. Finished bsmt. Close to all facilities. Avail. May 01, 2013.
416.287.6503 / 647.393.7436

**MIDLAND & EGLINTON**
3 Bedroom + 2 bedroom bsmt house for rent. Parking, laundry. Close to all facilities. Avail. April 15, 2013.
தொடர்புகளுக்கு: 416.302.0809

**MEDOWVALE & ELLESMERE**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to TTC, HWY401, university. Avail. immediately.
தொடர்புகளுக்கு: 416.724.8677

**MARKHAM & SHEPPARD**
3 Bedroom house for rent. Close to TTC, school, bank, mall. Avail. April 01, 2103.
416.919.9964 / 905.683.5105

**SCAR.GOLF CLUB & LAWRENCE**
4 Bedroom house for rent. Parking, laundry. Close to all facilities. Bsmt உம், அறைகளும் தனித்தனியாகவும் கொடுக்கப்படும்.
416.454.9986 / 416.219.4936

**MORNINGSIDE & SHEPPARD**
3 Bedroom house for rent. Finished bsmt. Close to all facilities. Rent $1300. Avail. March 15, 2013.
தொடர்புகளுக்கு: 416.876.7471

மேலும் பக்கங்கள் 26, 29

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு *www.vlambaram.com*

# பெண்ணுரிமை Women's Rights

காலம் காலமாக பூசிக்கப்பட்டும் அர்ச்சிக்கப்பட்டும் சில வேளைகளில் அடிமைப்படுத்தப்பட்டும் பெண்கள் பார்க்கப்படுவது விந்தையான ஒரு அனுபவம் தான். சிக்கல் நிறைந்த உளவியல் கோலங்களுக்குள் பெண்களின் நிலைப்பாடு என்பது மேலும் குழப்பத்தினையே ஏற்படுத்துகின்றது. கவிதைகளில் இலக்கியமாகவும், நவீன உலகில் போதைப் பொருளாகவும் பார்க்கப்பட்ட இவர்களது சிந்தனைகள் விழிக்கப்பட்டபோது நாமும் விழித்துக் கொண்டோம். சமுதாயத்தின் சரிபாதியான பெண்கள் வரலாற்று ரீதியில் முழுமையான உரிமைகளைப் பெறவில்லை என்பதிலிருந்து வரலாறு சற்று பின்னோக்கி நகர்த்தப்படுகிறது. தாங்கள் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உட்பட்டதான எண்ணம் காலம் கடந்து தோன்றியுள்ள சூழ்நிலையில் இது நீண்ட கால அழுத்தத்தின் வெளிப்பாடும் ஆயிற்று. பெண் என்ற காரணத்தால் பால், அரசியல், சமூக நியமம், மானிட விஞ்ஞானம் என்பவற்றில் தனியான உளப்பகுப்புக்கு உட்பட்டுள்ள சூழ்நிலை காரணமாக பெண்ணியக் கோட்பாடு தற்போது விடுதலைக்குரிய போராட்டமாக விரிவடைந்துள்ளது.

பெண்களின் ஒடுக்குமுறை என்பது ஆண்களின் ஆதிக்கத்தால் பிறந்தது என்ற கருத்து மேலோங்கிய வேளை தெளிவானதொரு கருத்தாகவும் முன்வைக்கப்பட்டுள்ளது. மீளவும் மனித வரலாறுக்கு புதிய விளக்கத்தினையும் மீளவும் மரபுரிமைகளை சரிபார்க்கும் தன்மைகளையும் இது வேண்டி நிற்கின்றது. பொதுவாக உடல்வலு, பொருளாதாரம், அரசியல், வரலாற்று நிலைகளில் பிரித்துப் பார்க்கக்கூடாது என்ற ரீதியில் பலபக்க பரி-மாணங்களைக் கொண்ட சிக்கலான ஆய்வாகவும் இது உருப்பெற்றுள்ளது. மார்க்சியக் கோட்பாடு தோன்றிய வேளையில் தான் பெண்கள் பற்றிய விளக்கம் எழுந்தது என்பது சிலரது கருத்தாகும். "ஆண்கள் பெண்களை ஏமாற்றாமலும், வஞ்சனை செய்யாமலும் இருக்கவேண்டுமென்று பொது உடமைக் கொள்கைக்காரன் விரும்புகின்றான். ஒரு பகுதியை முடக்கியோ அல்லது விலைக்கு வாங்கியோ அன்பு செலுத்த முடியாது என்பதனையும் ஒரு பக்கத்தின் விருப்பத்திற்கு விரோதமாக சமுதாயம் செயல்பட முடியாது என்பதனையும் உணர வேண்டும்" என்ற அடிப்படைக் கொள்கையை பொது உடமைச் சிந்தாந்தம் தெளிவாக விளக்குகிறது.

பெண் என்பவள் பிள்ளை பெறவும், வீட்டுவேலை செய்யவும், பாலியல் தேவையைப் பூர்த்தி செய்யவும் சிலவேளைகளில் சேவகம் செய்யவும் பிறந்துள்ளதாக கருதப்படும் கோட்பாடு ஆணாதிக்கச் சமுதாயத்தின் உரிமையாக இருந்தது. சமூக அமைப்பில் கவர்ச்சிக்குரிய பொருளாகவும், அழகுப் பதுமைகளாகவும் கருதப்பட்டுள்ளதுடன் மனித மூளையினை வெதும்பப் பண்ணும் பல்வேறு நடவடிக்கைகளும் நிகழ்ந்துள்ளன. 'கற்பு' என்ற வரையறைக்கு உட்படல், சோரம்போதல், விபசாரியாதல், விதை-வயாதல் போன்ற பல்வேறு பாத்திரப் படைப்புகள் இவளுக்கு உண்டு. பெண்களின் சுயநிர்ணய உரிமை மறுக்கப்பட்டு நீண்ட காலமாகப் போராட்ட வாழ்வு நிகழ்ந்துள்ளது. வர்க்கப் போராட்ட சிந்தனைகள் தோன்றியது முதலே பெண்ணியம் பற்றிய சிந்தனைகள் ஓங்கி ஒலித்தன.




பெண்ணுரிமை என்பது பல்வேறு அம்சங்களில் மறுக்கப்பட்டதான வாதம் பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுந்துள்ளது. வீட்டுக்கடமை என்பது பெண்களுக்கு மட்டுமே உரியது என்பதே நீண்ட காலக்கொள்கையாயிற்று. மனைவி, மனையாள், அகத்தாள், இல்லக்கிழத்தி இப்படி பல சொற்கள் இவளுக்கு உண்டு. "ஈன்று புறந்தருதல் என்றலைக்கடனே" என்பது வெறும் பிள்ளை பெறுவதோடு நின்று விட்டது. 'தாயோடு அறுசுவை போம்' என்பதில் சமைப்பதோடு ஒடுங்கி விட்டது. சமூக நியமத்தில் வீடு தான் உலகம் என்பதுபோல் ஆகிவிட்ட சூழ்நிலையில் படிப்பு இன்றி, உலகஞானம் இன்றி ஞான சூனியங்களாக இவர்கள் வாழ்ந்துள்ளனர். "மனைவி என்பவள் முதலாவது வேலைக்காரி" என்ற கோட்பாடு போல் நிலைத்துவிட்டது. மேலும் சமூக ரீதியில் பல தாக்கங்கள் இவளுக்கு கிடைத்துள்ளன. இந்த சூழ்நிலையில் தான் பெண்ணுரிமைக் கோட்பாடுகள் தலை தூக்கின.

அடுத்துள்ள பெண்ணுரிமை மறுப்பு என்பது ஆண்களின் சொத்துரிமையுடன் தொடர்புடையது. ஆணாதிக்க பழமொழிகளிலும் பெண்களை இழிவு படுத்தும் பழமொழிகளிலும் சமூகத்தினை பார்க்க முடிகிறது. "கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன்" என்று நீண்ட காலமாக சொல்லி வருகிறோம். அர்த்தமே புரியாது. கல்லையும் புல்லையும் புரு'னாக்கும் பெண்களின் நிலை சற்று குழப்பமானது. 'விதவை எதிரே வருவது அபசகுனம்' இப்படி ஒரு கொள்கை நீண்ட காலமாக நிலவி வருகிறது. ஆண்களுக்கு வெள்ளை உடுப்பு மவுசினைக் கூட்டிவிடுகிறது. அத்துடன் "கற்பு" இப்படி ஒரு புதுமையான சொல்லும் அவருடன் சேர்ந்து வந்துள்ளது. "தான் திருடி இதனால் பிறரை நம்பாள்", "பெண் என்றால் பேயும் இரங்கும்", "பெண்சாதி இல்லாதவன் பேயைக்கட்டி தழுவுவது போல", "ஆடமாட்டாத தேவடியாள் தெரு கோணல் என்றாளாம்", "ஊருக்கொரு தேவடியாள் யாருக்கென்று ஆடுவாள்", "நல்லமாட்டிற்கு ஒரு அடி நல்லபெண்ணுக்கு ஒரு சொல்", "பேதமை என்பது மாதர்க்கழகாம்"இ "பொம்பிளை சிரித்தால் போச்சு புகையிலை விரித்தால் போச்சு" இப்படி பல பழமொழிகள் பெண்களுக்காக மட்டும் எழுந்தவை. ஆண்களின் ஆதிக்க வரிகளாக இவைகள் இன்றும் உள்ளன. பெண்களை அடிமைப்படுத்திய இவ்வரிகள் அவர்களது நெஞ்சினை குடைந்தன. இத்துடன் கூடவே ஆண்களின் விபசாரம், ஆணாதிக்கக் கட்டளைகள், விதவைகளின் பரிதாபநிலை, வாரிசு, உரிமை என்பவற்றின் மூலம் பெண்களை தனிமைப்படுத்தி இன்புற்ற சூழ்நிலை இன்று மாறி வருகிறது.

இலக்கியத்தில் கூட பெண்களின் நிலை அக்காலத்தின் கண்ணாடிதான். ஆண் பெண் உறவுகளில் கூட ஆண்கள் ஒன்றுக்கு மேற்பட்ட பெண்களை நாடுவது சமூக ரீதியாக ஏற்கப்பட்டது. சேறுகண்ட இடத்தில் மிதிச்சு தண்ணி கண்ட இடத்தில் கழுவிப் போடும் தன்மையனே ஆண். இப்படித்தான் சூழ்நிலை. எனவே பால் வேறுபாட்டில் கூட சுயமான உரிமை மறுப்பு இருந்துள்ளது. பெண்ணின் உடல் கட்டுப்பாடு என்பது சொந்தப் பாலியல் தெரிவுமீது, அணிகலன்கள் மீது, சொந்த வடிவமைப்பு மீது, சொந்த உழைப்பு மீது, சொந்தச் சிந்தனைமீது சார்ந்தது. ஆனால் இது சமூக நிகழ்வாகி விட்டுள்ளது. தனிமனித செயல்கள் கூட சமூக கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. ஆணாதிக்க கருத்தில் பெண்களின் சுதந்திரம் மறுக்கப்படும் போது விடுதலை உணர்வு எழுகிறது.

பெண்களின் சிந்தனை சுதந்திரமாக இயங்குவது முதல் தேவையாக இருந்துள்ளது. ஆணின் உழைப்பில் தங்கி வாழும் நிலையில் ஆண்களே முன்னிலைப் படுத்தப்பட்டுள்ளனர். ஆண் பெண் இணைவு என்பது சம உரிமைகள், சம கடமைகள் பற்றியதாகும். எனவே உழைப்பு அல்லது சொத்துரிமை என்பதில் பெண்ணுரிமை மறுக்கப்பட்டது. பொதுவாக ஒருவரின் உழைப்பினைச் சுரண்டும் சூழ்நிலை ஏற்பட்ட வேளை உடல்வலு மிக உதவியது. இதுவே ஆணாதிக்க வலுவாயிற்று. இயற்கை வழங்கிய முரண்பாடுகளை விட மனித முரண்பாடுகள் வலுப்பெற்றன. உழைப்பும் உழைக்கின்ற தன்மையும் ஆண்களிடம் சேர்ந்த வேளையில் தொடர்ந்தும் பிரச்சினைக்குரியதாயிற்று.

தொடர்ந்து ஏற்பட்ட அனுபவங்களும், அவலங்களும் பெண்களின் உரிமைகள் பற்றிச் சிந்திக்க தூண்டின. வாழும் உரிமை முதல் வாக்குரிமை வரையில் இவர்களது சிந்தனைகள் ஊடறுத்தன. வீட்டிலிருந்து பிரிந்து சென்ற இதயம் உலகினை உலுப்பியது. ஆற்றல் பெற்ற இவர்களது உழைப்பு ஆண்களையும் கேள்விக் குறியாக்கியது. தொடர்ந்து வந்த சமூக நியமங்கள் தகர்வு பெற்றன. நாடுகள்



**சிந்தனைப் பூக்கள்**
**எஸ். பத்மநாதன்**

தொடர்ச்சி 36ஆம் பக்கம்

**Sales Reps. Welcome**

For All your Real Estate & Investments Needs!

**Raja M. Mahendran,** P. Eng.
(Broker / Owner)



* INDEPENDENTLY OWNED AND OPERATED

**HomeLife/GTA Realty Inc.** Brokerage *

5215 Finch Ave E, #203 Toronto - 416.321.6969
145 Traders Blvd # 29, Mississauga - 905.712.2666

**ஸ்ரீ கைலாசம் சைவசமய கிரியைகள் சேவை**

சைவ கிரியைகள், ஆலோசனைகள், சைவமுறைப்படி சமயதீட்சை,
அந்திமக்கிரியை (மரணச்சடங்கு), அந்தியேட்டி (புனர்தகனம், கல்பூசை) என்பவற்றை
சைவ முறைப்படி செவ்வனே செய்துகொள்வதற்கும், அவை தொடர்பான
ஆலோசனைகளுக்கும் 'இணுவையூர்' சிவஸ்ரீ.மு.சு.வைத்தியநாதன்குருக்கள்
(பிரித்தானிய சைவ முன்னேற்றச் சங்க முன்னாள் சைவக்குருக்கள்)

தொடர்புகளுக்கு: *647.629.5468 / E.mail:smskurukkal@yahoo.com*

## தையல் வகுப்புக்கள் தையல் Orders

**MARKHAM & LAWRENCE**

Saree Blouse, Salwar Kameez, Skirt & Blouse மற்றும் Ladies Items தைப்பதற்கு கற்றுக் கொடுப்பதுடன், order க்கும் தைத்துக் கொடுக்கப்படும். Saree Blouse Block எடுத்து தைப்பதற்கு கற்பிக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## SAREE BLOUSE

**தையல் தேவைகளுக்கு**

சாறி Blouse உட்பட அனைத்து தையல் தேவைகளுக்கும் மற்றும் சாறியில் இருந்து நூல் எடுத்து குஞ்சம் பின்னியும் கொடுக்கப்படும். சாறி Blouse ஒன்று தைப்பதற்கு $20.
தொடர்புகளுக்கு:905.492.0259

## தமிழ் அச்சு வடிவமைப்பு

தமிழ் அச்சுவேலைகள், வடிவமைப்பு தமிழ் மொழியில் வாழ்த்து பா, பாராட்டுப் பத்திரம், நிகழ்ச்சி நிரல், விளம்பரம், துண்டுப்பிரசுரம், விழா மலர், புத்தகம், நினைவு மலர், அறிவித்தல், என்பவை வடிவமைத்து, உரிய நேரத்தில் தரப்படும். தொடர்புகளுக்கு: 647.938.7750

வீடு/பேஸ்மன்ட் / கொண்டோ
உடனடி வாடகைக்கு
**Morningside/Passmore**
4 பெட்றூம்+ 3 வோஷ்றூம் வீடு
**Steeles/Staines**
4 பெட்றூம்+ 3 வோஷ்றூம் வீடு
**Markham/Sheppard**
1 பெட்றூம் பேஸ்மன்ட்
3 பெட்றூம் வீடு
2 பெட்றூம் கொண்டோ
உடனடி வாடகைக்கு
Jey 416-816-9011

## திருமண சேவை

உங்கள் அன்புக்குரியவர்களின் மணவாழ்க்கையை மனம்போல் அமைத்துத் தர 20 வருடங்களுக்கு மேலாக கனடாவில் திருமண சேவையை திறம்பட செய்து வருபவரை அணுகுங்கள்.
647.556.4114 / 416.992.8782

## மணமகன் தேவை

கனடாவை பிறப்பிடமாகவும் 29.06.1985 இல் பிறந்த (இலக்கினத்தில் செவ்வாய், விசாக நட்சத்திரம்) U of T விஞ்ஞான பட்டப்படிப்பை முடித்து 4 வருடங்களாக நல்ல வேலையில் இருக்கும் தமது ஒரே மகளுக்கு பெற்றோர் தக்க வரனை எதிர்பார்க்கிறார்கள்.
தொடர்புகளுக்கு: 647.973.1613

## திருமண சேவை

உங்கள் பிள்ளைகளின் திருமணத்தை விரைவாக நிறைவேற்றிட எம்முடன் தொடர்பு கொள்ளவும். ஆண், பெண் இருபாலாரினதும் ஜாதகக் குறிப்புக்கள் எம்மிடம் உண்டு. தொடர்புகளுக்கு : தனம் - ***647.918 0027***
***nallai@hotmail.ca***

## மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும், 32 வயதுடைய கனேடிய பல்கலைக்கழக (University) பட்டப்படிப்பு முடித்து வேலை செய்யும் மணமகனுக்கு பெற்றோர் மணமகளைத் தேடுகின்றனர். கனடா, அமெரிக்காவில் இருப்பவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்புகளுக்கு: 647.299.1463

## FOR SALE

Restaurant for sale in Stouffville. Close to all facilities.
தொடர்புகளுக்கு: 647.271.2719

## CAR FOR SALE

2006 Lincoln Town Car for sale. Black Clour.
தொடர்புகளுக்கு: 416.274.5495

## CAR FOR SALE

1997 & 1998 CRV cars for sale. Black colour. 4 Door. Automatic. Good condition.
416.688.8364 / 416.754.2002

## CAR WANTED

Toyota camry 1997 - 2001. 4 Cylinder. Any condition. Any Kilometers.
தொடர்புகளுக்கு: 647.448.2569

## TUITION

## KEY BOARD CLASSES

**MARKHAM & LAWRENCE**

ஆரம்ப, நடுத்தர மற்றும் உயர்தர சகல வகுப்பினர்களுக்குமான key board வகுப்புக்கள் Weekdays & Week ends இல் 3 மாத காலத்தில் தமிழ் மற்றும் ஆங்கில பாடல்கள் வாசிப்பதற்கு கற்றுக்கொடுக்கப்படும்.
416.438.2552 / 647.853.5524

## JOB JOB JOB

Flooring company ஒன்றிற்கு receptionist வேலைக்கு ஒருவர் தேவை. Car ஓடத் தெரிந்திருக்க வேண்டும். ஆங்கிலம் பேசத்தெரிந்திருக்க வேண்டும். Part-time.
www.idealstairs.ca

## JOB JOB JOB

**YONGE & YORK MILLS**

பகுதியில் அமைந்துள்ள Restaurant ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.258.4023

## JOB JOB JOB

**NEILSON & MCLEVIN**

வயோதிபப் பெண்மணி ஒருவரை பராமரிப்பதற்கு பெண் ஒருவர் தேவை.
தொடர்புகளுக்கு: 416.409.5786

## JOB JOB JOB

Basic graphic design, Tamil typing தெரிந்த ஆண் ஒருவர் வேலைக்கு தேவை. Full-time.
தொடர்புகளுக்கு: 416.898.4846

## JOB JOB JOB

Scarborough வில் அமைந்துள்ள தமிழ் Restaurant ஒன்றிற்கு ஆண்கள் /பெண்கள் வேலைக்கு தேவை. Full-time job.
தொடர்புகளுக்கு: 416.419.1497

## KITCHEN HELPER WANTED

**YONGE & LAWRENCE**

இத்தாலிய உணவகம் ஒன்றிற்கு அனுபவமுள்ள சமயலறை உதவியாளர்கள் தேவை.
தொடர்புகளுக்கு: 416.835.2943
10.00am - 11.30am
5.00pm - 6.00pm only

## JOB JOB JOB

**DRIVER'S NEEDED**

Suitable for drivers living in Mississauga & Oakville.
தொடர்புகளுக்கு: 647.405.0115

மேலும் பக்கங்கள் 26, 27

# ROOM FOR RENT

## WARDEN & FINCH

Condo. வில் சகலவசதிகளுடன் கூடிய ஒரு அறை வாடகைக்கு உண்டு. அருகாமையில் பஸ் வசதியும் உண்டு. தனியாளுக்கும் அல்லது மாணவருக்கும் கொடுக்கப்படும்.

**தொடர்புகளுக்கு: 647.402.9490**

# TUTORING - ALL AGES & SUBJECTS

*Including up to P.H.D single or group classes. Specialty with children with learning problems (ADD, ADHD, Aspergers, Autism) Punctuation, grammar, essays, civics, reading, history, science, French & Math special group rates. Also citizenship classes, Guitar classes.*

***Contact: 416.493.6540***

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை இரு நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

# COMMERCIAL UNIT FOR SALE

Main floor corner unit commercial space for sale. 1 Parking included. Available for any retail business or professional office. Very demand location. High traffic area. Easy access. one of the best location in Scarborough.

***Pl. Call: 416.451.0271 / 416.315.9397***

# பேச்சுப் போட்டி - 2013

## பேராசிரியர் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவையொட்டி நடைபெறும் பேச்சுப் போட்டி

போட்டி நடைபெறும் நாள்: யூன் 09, 2013 (ஞாயிற்றுக்கிழமை)
விண்ணப்பம் ஏற்கும் இறுதிநாள்: ஏப்பிரல் 30, 2013
போட்டி நடைபெறும் இடம்: ஸ்காபரோ நகர மண்டபம் (Scarborough Civic Centre)
போட்டி நான்கு பிரிவுகளாக நடைபெறும்.

1. தொடக்கநிலை: 2004, 2005, 2006 இல் பிறந்தோர்
2. கீழ்ப்பிரிவு: 2001, 2002, 2003 இல் பிறந்தோர்
3. இடைநிலைப்பிரிவு:1998, 1999, 2000இல் பிறந்தோர் தொடக்கநிலைப் பிரிவுக்கும்,கீழ்ப்பிரிவுக்கும், இடைநிலைப் பிரிவுக்கும் பதிவின்போது பேச்சிற்குரிய பகுதி கொடுக்கப்படும்.
4) மேற்பிரிவு: 1992, 1993, 1994, 1995, 1996, 1997 இல் பிறந்தோர் "தனிநாயகம் அடிகளின் தணியாத தாகம்" அல்லது "தனிநாயகம் அடிகள்" என்னும் தலைப்பில் ஒளிப்படக் காட்சிப்படுத்தலுடன் கூடிய விளக்கவுரை (Power Point Presentation) வழங்கவேண்டும். இவ்வுரைக்கு ஒருவர் ஏழு மணித்துளிகள் மட்டும் எடுக்கலாம்.

905.479.5375 / 647.856.6326 / 416.267.5255 / 418.219.5113

பதிவு செய்வோர் விண்ணப்பப் பத்திரங்களைப் பெறத் தொடர்புகொள்ள வேண்டிய மின்னஞ்சல். sthaninayakam100@live.com அத்தோடு உங்கள் விணப்பங்களைப் பூர்த்தி செய்து இந்த மின்னஞ்சலில் இணைப்பாக அனுப்ப முடியும். அல்லாதுவிடின் கீழ்வரும் விலாசத்திற்கு தபாலில் அனுப்பமுடியும்.

***Coordinating Committee of***
***Birth Centenary Commemoration of Prof X.S.Thaninayakam Adikal***
***29, Schmirler Terrace, Scarborough, ON M1E 5K6***

# போர்க்கால இலக்கிய படைப்புகள் -அறிமுகம்

## அத்தாங்கு - நாவல்

### எழுத்தாளர்: மெலிஞ்சி முத்தன் (கனடா)

மெலிஞ்சி முத்தனின் இந்த நாவலை நாவல் என்று கூறுவதா அல்லது சுயசரிதை (Autobiography) என்று கூறுவதா என்ற கேள்வி எழுகின்றது. 1911ல் Encyclopedia Britiannica ல் எட்மன் கொசெ எழுதிய கட்டுரையில் 'நாவல் என்ற சொல் இயல்பான உலகநுபவங்களை ஒட்டிச் செல்லும் இலக்கிய வகையைக் குறிக்கும்' என்கின்றார். புதுமைப்பித்தன் 'நாவல் மனிதனை அவனுடைய சிறுமைக் குணங்களுடன் அவனுடைய வீழ்ச்சிகளுடன் அவனுடைய தவறுகளுடன் அப்படியே மனிதனை மனிதனாக எடுத்துக் காட்டுகின்றது' என்றார். அவ்வகையில் இதனையும் ஒரு நாவலாகவே ஏற்றுக் கொள்கின்றேன். இதில் மெலிஞ்சி கதைசொல்லியாக செயல்படுகின்றார். அது ஒரு

**- ரதன் -**

வகை உத்தி என்றே கூறலாம்.

இந்த நாவலை மூன்று பகுதிகளாக பிரிக்கலாம். முதலாவது கதைசொல்லியைப் பற்றிய அறிமுகம். இரண்டாவது இடம் பெயர்வு அதன் மக்கள் வாழ்வு. மூன்றாவது கதைசொல்லி புலம் பெயர்ந்த பின்னர் இடம் பெறும் நிகழ்வு. முதலாவது பகுதியில் ஒரு பாதிரியாராக கதைசொல்லி அறிமுகமாகின்றார். பிரெய்ட்டின் இரு கருத்துக்களை கதைசொல்லி வெளிப்படுத்துகின்றார். முதலாவது சமூகத்தின் தேவைகள் அனைத்தும் தனிமனிதர்களின் ஆசைகளுக்கு எதிராகவே இருக்கும். இரண்டாவது நாகரிக முன்னேற்றத்திற்கு எப்போதும் தனிமனிதர்களின் மகிழ்ச்சி பலிகொடுக்கப்பட வேண்டும். பிரெய்ட் தடையற்ற பாலியல் வெளிப்பாட்டையும் மறுதலித்தார். பாதிரியாரின் வாழ்வு மேலே குறிப்பிட்ட பிரெய்ட்டின் கருத்துக்களை மையமாகக் கொண்டுள்ளன. தனக்குள்ளேயே ஆசைகளை பூட்டி வளர்க்கின்றார். இதற்கு காரணம் இவர் அணிந்துள்ள அங்கிகள். 'பல ஆண்டுகள் படிப்பு இறையியல், மனோதத்துவம் என்ற பலவகையாக அடிப்படையில் நேர்த்தியாய் இல்லாத மனத்தைப் பிணைந்து தட்டையான ஒழுங்கிற்கு கொண்டுவரும் முயற்சிகள். அவை எல்லாவற்றையும் எனக்குள் எழுந்த காமம் வென்று தின்று துப்பியபோதுதான் எனது நிர்வாணத்தை உணர்ந்தேன் பின் நிர்வாணம் ஒன்றும் அவமானம் இல்லை என்று என்னிடமே சொல்லிக் கொண்டு நிமிர்ந்தேன்' பக்கம் 13, என்கின்றார். மிக முக்கியமாக மெலிஞ்சியின் கூற்று 'நான் என்பது எப்போதும் நிர்வாணமானது தான்' என்பது. இதனை ஒரு தடவை சிந்தித்துப் பாருங்கள் இக்கூற்றின் வலிமை தெரியும்.

இவ்விடத்தில் மதம் பற்றிய தனது கருத்தியலையும் மெலிஞ்சி தெளிவாகவே வெளிப்படுத்துகின்றார். மதம் ஒரு போதைப் பொருள் என்ற மார்க்சின் கருத்துடன் மெலிஞ்சி உடன்படாவிடிலும் 'மனிதன் ஒட்டு மொத்தமான தனது சூழலுடன் இணைந்து கொள்வதற்கான வழிமுறையைத் தரும் ஒரு பண்பாட்டுக் கருவியாகவே மனிதர்கள் மதத்தைக் கொள்கின்றனர் என்ற சிவத்தம்பியின் கருத்துடன் உடன்படுகின்றார். மதம் மனிதனுக்குள் ஏற்படுத்தியுள்ள பயம் மனிதனை மதத்தை தொடரவைக்கின்றது என்பதை மெலிஞ்சி இவ்வாறு குறிப்பிடுகின்றார்'. ஆனாலும் நான் இன்று வரை தேவபயத்தை இழந்து விடவில்லை. என் கருத்துக்களுக்கும் அப்பால் ஒரு பயம் என் அகத்தில் எங்கோயோ ஒரு மூலையில் குடியிருக்கின்றது' இது உண்மை தான். விஞ்ஞானிகள் கூட மதநம்பிக்கையுடன் தான் உலாவருகின்றனர். எனக்கு கூர்ப்பு படிப்பித்த ஆசிரியர் திருநீற்றுப் பூச்சுடனே வகுப்புக்கு வருவார். மதத்தின் கூறுகளாக இருக்கும் நம்பிக்கை, சடங்குகள், ஐதீகங்கள் உள்ளன. இந்த மதத்தின் கூறுகள் போர்க்கால வாழ்வில் இயல்பாக எவ்வாறு மக்களிடம் உள்ளன என்பதை இவரது நாவல் வெளிப்படுத்தியுள்ளது.

நாவலுக்கான களமாக எழுத்தாளர் தாங்கள் வாழ்ந்த இடங்கள் அதாவது பிறந்த ஊர், வேலை நிமித்தம் இருக்கும் ஊர், இடம் பெயர்ந்து வாழ்ந்த பிரதேசம், புலம் பெயர் நாடு, அங்கு வாழும் நகரம் போன்றவற்றை கொள்வார்கள். அப்பிரதேசங்களின் சரித்திரக் குறிப்புக்கள். கலாச்சாரக் கூறுகள், பழக்க வழக்கங்கள் போன்றவற்றை வெளிப்படுத்துவர் என கோ.வெ.கீதா நாவல் விமர்சனமொன்றில் எழுதுகின்றார். இங்கும் மெலிஞ்சி முத்தன் கிளாலி பற்றி நகரமுன்னர் தென்மராச்சி பற்றிய வரலாற்றுக் குறிப்புக்களை தெரிவிக்கின்றார். சாவகச்சேரி பற்றி மிக அண்மையில் விளம்பரத்தில் ஒரு கட்டுரையில் குறிப்பிட்டு இருந்தார்கள். ஜாவாவில் இருந்து பெருமளவு மக்கள் இங்கு வந்து வாழ்ந்தமையால் ஜாவகச்சேரி என்ற பெயர் மருவி சாவகச்சேரியாக மாறியதாக தெரிவித்திருந்தார். இதனையொத்த கருத்தை மெலிஞ்சியும் தனது நாவலில் குறிப்பிட்டுள்ளார். பல சுவாரசியமான வரலாற்றுக் குறிப்புக்கள் இந்நூலில் உள்ளன. மக்களுடன் கதைசொல்லியும் இடம் பெயர்கின்றார். இந்த இடம் பெயர்வில் ஏற்பட்டுள்ள அந்நியத் தன்மை அதாவது புதிய சூழலில் ஏற்படும் அந்நியத் தன்மையை மெலிஞ்சி சிறப்பாக வெளிப்படுத்தியுள்ளார். இடம் பெயர்வைப் பற்றிய பல நாவல்கள் வெளிவந்துள்ள போதும் மிகவும் முக்கியமான அக உணர்வான அந்நியத்தன்மை அலசப்படவில்லை. அதன் புறக்காரணிகள் கூட கவனத்திற்கொள்ளப்படவில்லை. புலம் பெயர்ந்து பல வருடங்களாகிவிட்ட போதும் இன்னமும் ஒரு அந்நியத் தன்மையை நாம் கொண்டிருப்பதை மறுக்க முடியாது. நாவலின் சிறப்பம்சங்களுள் ஒன்றாக இதனை குறிப்பிடலாம்.

கதை சொல்லியையும் சூழலையும் இணைக்கும் பாலங்களாக மனிதர்கள் வருகின்றனர். இவர்களும் கதைசொல்லியின் உறவினர்கள், அயலவர்கள், இடம் பெயர்வில் ஏற்பட்ட புதிய அறிமுகங்கள், இந்த அறிமுகங்கள் ஒரு அதிகாரத்தின் பிரதிநிதிகளாகவே வெளிப்படுகின்றனர். பாத்திரத் தேர்வு அதனை வெளிப்படுத்தும் முறை மெலிஞ்சி ஒரு தேர்ந்த கதை சொல்லி என்பதை உறுதிப்படுத்துகின்றது. பண்டிதர் குடியிருப்பும் கிளாலியும் கூட பாத்திரங்களாக மாறியுள்ளன. கதை சொல்லியுடன் உலா வரும் மனிதர்களை பகுப்பாய்வு செய்கின்றார். இதன் மூலம் நாவலாசிரியர் மனிதர்கள் மீது கொண்டுள்ள கருத்து வெளிப்படுகின்றது. மதுரா எலிசா ஆகிய இரு பாத்திரங்களும் முக்கியமானவை. மதுரா ஒரு போராளியாக மாறிய பெண். இறுதிவரை மண்ணைக் காக்க உறுதி பூண்டுள்ள பெண். காயப்பட்ட போதும் தொடர்ந்து போராட விரும்பும் பெண். எலிசா நேர்மறையான செயல்பாடுகளைக் கொண்ட பெண். கதைசொல்லியின் அனுதாபத்தை பெற்றுக்கொண்ட பெண். கணவனின் மரணத்தின் பின் எனது தாலி போய்விட்டது என அழும் இப் பெண். இறுதியில் சவரிக்குட்டியுடன் ஓடிவிட்டதாக முடிக்கின்றார். ஏன் இந்த முரண் நிலை. போராளிப் பெண்களுக்கான ஒரு பரிவான பார்வை சாதாரண பெண்களின் மேல் ஏன் ஏற்படவில்லை. இது பொதுப்புத்தியின் வெளிப்பாடா? இவ் விடயத்தில் இரு கருத்துக்கள் முரண் நிலையில் உள்ளன. தாலிக்குக் கொடுக்கும் அர்த்தம். பெண்கள் எப்போதும் சார்ந்து நிற்றல் என்ற நாவலாசிரியரின் கருத்து நிலை. எலிசாவின் இந்த முடிவுக்கு காரணம் பொருளாதாரமா? அல்லது செக்ஸா? தெளிவில்லை. எலிசாதான் சவரிக்குட்டியுடன் ஓடிவிடுகின்றா? சவரிக்குட்டி அல்ல? இதுவும் ஒரு ஆணாதிக்க வெளிப்பாடே. மேலும் 'ஓடிவிடுதல்' என்ற பதம் கண்டனத்துக்குரியது. அது எலிசாவின் தேர்வு. அச்சுதந்திரத்தை நாங்கள் அங்கீகரிக்க வேண்டும்.

நாவலின் இரண்டாவது பகுதியில் வரும் மற்ற இரண்டு முக்கிய பாத்திரங்கள் சனாதனன், கிறகறி. சனாதனன் ஒரு சமூக சேவையாளன். கிறகறி ஒரு எழுத்தாளன். கிறகறியால் சனாதனன் உளவாளி எனக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்படுகின்றான். இவர்கள் இருவரும் மூன்றாம் பகுதிக்கு கதைசொல்லியுடன் பயணிக்கின்றனர். கடந்த வருடம் திரைப்படவிழாவில் திரையிடப்பட்ட ஒரு படம் நினைவுக்கு வருகின்றது. சதா பிரணவனின் 'போராளிக்கு இட்ட பெயர்'. கடந்த காலங்களில் உளவாளி என்ற பெயரில் பலரை கொன்றுள்ளோம். முஸ்லீம் மக்களின் வெளியேற்றத்திற்கும் உளவாளி என்ற காரணம் காட்டப்படுகின்றது. மெலிஞ்சி மதுராவை வெளிப்படுத்தியவிற்கு சனாதனனை வெளிப்படுத்தவில்லை. இரண்டாம் பகுதியில் சனாதனனும் கிரகறியும் ஒரு கதை நகர்த்திகளாகவே மெலிஞ்சியால் வெளிப்படுத்தப்பட்டுள்ளனர். மூன்றாவது பகுதி கருத்தியல் ரீதியாக பலரை விமர்சிக்கின்றது. விமர்சகர்கள் பற்றிய மெலிஞ்சியின் கருத்துக்கள் எனக்கும் உடன்பாடானவை. திறனாய்வு என்பது கிறிட்டிசிசம் என்ற ஆங்கிலப் பதத்தை ஒத்தது. விமரிசனம் என்பது தத்துவஞானத் தொடர்பில் வந்ததாக கைலாசபதி தனது சமூகவியலும் இலக்கியமும் என்ற நூலில் சுட்டிக்காட்டுகின்றார். மேலும் அவர் பரிமேலழகர் 'அறிவைப் பெறும் வாயில்களையே அளவைகள் பொறுந்து மாறு' எனக் கூறியதாக தெரிவிக்கின்றார். எனவே இங்கு இடம் பெறுபவையெல்லாம் வெறும் திறனாய்வுகளே. விமரிசனம் என்பது அதன் அடுத்தபடியே. இங்கு நாங்கள் செய்வது வெறும் திறனாய்வுகளே விமர்சனங்கள் இல்லை. இங்குள்ள பெரும்பாலான விமர்சகர்கள் படைப்பாளியைத்தான் பார்க்கின்றார்கள், அவர்களது படைப்புக்களை அல்ல. இந்தியாவில் உள்ள சஞ்சிகையில் உங்கள் படைப்புக்கள் பிரசுரமானால் மட்டுமே படைப்பாளிகள் அங்கீகரிக்கப்படுகின்றார்கள். இவர்களது படைப்புக்களையே தங்களது சஞ்சிகையில் பிரசுரிக்கின்றார்கள்.

அடுத்து குறைந்த பட்சம் பொது உடன்பாட்டிற்கு வரமுடியாத சமூகமிது என மெலிஞ்சி சாடுகின்றார். உண்மைதான். பின்னர் ஒழுங்கை சாடுகின்றார். அது புதுமைக்கு தடையாக உள்ளது என்கின்றார். அதுவும் உண்மைதான். ஒழுங்கு இருந்தால் தான் பொது உடன்பாடு சாத்தியம். ஒரு பொதுக் கருத்து என்பது சாத்தியமானதா? இலக்கியவாதிகளும் அரசியல்வாதிகளும் வியாபாரிகள் என்றும் கூறுகின்றீர்கள். அதனையும் ஏற்றுக் கொள்கின்றேன். இந்த அரசியல்வாதிகளும், இலக்கியவாதிகளும் ஏற்படுத்தும் பொதுக்கருத்து உண்மையானதாக நேர்மையானதாக இருக்கும் என்று கருதுகின்றீர்களா? 'குடும்பம் என்ற அமைப்புத்தான் அரசையும் அதன் கருத்தியலையும் பாதுகாக்கின்றது' குடும்பமும் இந்த ஒழுங்கு என்ற கட்டமைப்புக்குள் தான் வருகின்றது. எல்லாருமே குறைந்த பட்சம் பைத்தியங்கள் என்கின்றார். இக் கருத்தை ஒரு கோபத்தின் வெளிப்பாடாகவே பார்க்கின்றேன். ஒரு தர்க்கரீதியான விளக்கத்தை மெலிஞ்சி கூறவில்லை.

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

### ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 178வது பிறந்த தின விழா

ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சரின் 178வது பிறந்த தின விழா மாச் மாதம் 16ம் திகதி (16 March 2013) சனிக்கிழமை காலை 10.00மணிக்கு ஸ்ரீ இராமகிருஷ்ண சபை மண்டபத்தில் (Vedantha Society of Toronto, 120 Emmett Avenue, (Jane & Eglinton) நடைபெற உள்ளது. சுவாமி கிருபமயானந்தாஜி மஹராஜ் அவர்களின் ஆன்மீக உரையும் வைத்திய கலாநிதி இலம்போதரன் அவர்களின் 'தெய்வத் திருமூவா' என்னும் சிறப்புரையும் இடம் பெறுவதுடன் சிறுவர் நிகழ்ச்சிகள், நடனம், நாடகம் என்பன நடைபெறும். அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர். Bus போக்குவரத்து வசதிகட்கு

தொடர்புகட்கு:
செல்வி மணி சின்னத்தம்பி - 416.431.1814
திருமதி கமலா இராமசூரியன் - 416. 431.5997
திருமதி தனம் தர்மலிங்கம் 416.286.1278

# திரை விமர்சனம் - ஹரிதாஸ்

ஹரி என்கிற மனவளர்ச்சி குன்றிய சிறுவன், காவல்துறையின் 'என்கவுண்ட்டர் படை' தலைவரான அவனது தந்தை சிவதாஸ் - இருவரையும் சுற்றி அமைக்கப்பட்ட விறுவிறுப்பான திரைக்கதைதான் 'ஹரி (சிவ)தாஸ்'.

இளைஞனான ஹரி தன் வாழ்க்கையை நம்மிடம் சொல்வதாக படம் துவங்குகிறது. ஹரியின் தந்தை சிவதாஸ் (கிஷோர்) காவல்துறை அதிகாரி என்கவுண்டர் ஸ்பெஷலிஸ்ட். ஆள் கடத்தி பணம் பறிக்கும் ஆதியை என்கவுண்ட்டர் செய்ய அமைக்கப்படும் படைக்கு கிஷோர் தலைவ ராக நியமிக்கப்படுகிறார். கிஷோரின் மனைவி பிரவசத்திலேயே இறந்துபோய்விட மகன் மட்டும் உயிர் பிழைக்கிறான். 'ஆட்டிசம்' குறைபாடுடைய குழந்தையை வளர்க்கும் பொறுப்பை ஊரில் தனது அம்மாவிடம் விட்டுவிட்டு, கிஷோர் சென்னையில் பொறுப்பான காவல்துறை அதிகாரியாக இருக்கிறார். அவ்வப்போது மேலிடத்து உத்தரவுக்கேற்ப என்கவுண்டர் களையும் செய்கிறார். பிரதீப் ராவத்தை என்கவுண்டர் செய்ய எத்தனித்த நேரத்தில் அவர் தப்பிவிட அவரது அடியாள் ஒருவரை மட்டும் என்கவுண்டர் செய்கிறார். இந்த நேரத்தில் கிஷோர் அம்மா இறந்துவிடுகிறார். குழந்தையைக் கவனித்துக்கொள்ள வேறு யாரும் இல்லாததால், மகனை தானே



கவனித்துக்கொள்வது என்று தீர்மானிக்கிறார். என்கவுண்டர் பொறுப்பை நண்பனிடம் ஒப்படைத்து விடுகிறார். மிகவும் பிரயத்தனப்பட்டு பையனை ஒரு அரசு பள்ளியில் சேர்க்கிறார். ஆட்டிசம் குறைபாடுள்ள குழந்தைகளை அரவணைத்து சொல்லிக்கொடுக்கும் ஆசிரியை அமுதவல்லி வகுப்பில் பையன் சேர்த்துக் கொள்ளப்படுகிறான்.

'ஆட்டிசம் ஒரு வியாதி அல்ல, அது ஒரு குறைபாடே. அவர்களது உலகம் வேறே' என்று டாக்டர் அறிவுறுத்த பையனிடம் உள்ள வினோத திறமையை எதேச்சையாக அறிந்துகொள்கிறார் கிஷோர். சிறுவனுக்குள் குதிரை பற்றியும் ஓடுதல் பற்றியும் ஒரு பார்வை இருக்கிறது. கோச் ராஜ்கபூர் பயிற்சியளிக்க மறுக்கிறார். பெரும் பிரயத்தனப்பட்டு பையனை பயிற்சியில் ஈடுபடுத்துகிறார். மரதன் ஓட்டத்தின் மீது சிறுவனுக்குள் ஒரு ஈடுபாடு இருப்பதை கண்டுபிடித்து, அவனுக்கு குருவாக இருந்து பயிற்சி அளிக்கிறார், கிஷோர்.

தொடர்ந்து மரதன் ஓட்டப் பந்தயத்தில் அவனை கலந்துகொள்ள வைக்க பெரும் முயற்சி எடுக்கும் அதே நாளில் பிரதீப் ராவத்தையும் சந்திக்க நேர்கிறது. முடிவில் கிஷோர் நினைத்த மாதிரி மகன் ஓட்டபந்தய வீரன் ஆகிவிடுகிறான். ஆனால், கிஷோர் நிலை? கனத்த மவுனத்தோடு படம் முடிகிறது.

ஹரியாக பிருத்விராஜ்தாஸ் என்ற சிறுவன் நடித்திருக்கிறான். 'ஆட்டிஸம்' குழந்தை, நேருக்கு நேர் விழிகளை பார்க்காது என்ற அடிப்படைகளை கூட அநாயசமாக தன் நடிப்பில் கொண்டு வருகிறான். இந்த படத்தின் கதாநாயகனே இவன்தான். எதுவுமே தெரியாதுபோல் கடைசி வரையிலும் தனது முகத்தைக் காட்டி, சைகைகள் செய்து, அப்பாவியாய் இருந்து,

**- ஃபிலிம்நியூஸ் கிருஷ்ணன் -**

கடைசியில் 'அப்பா' என்று கூப்பிடும் வரையிலும் ஒரு 'ஆட்டிஸம்' சிறுவனை அப்படியே பிரதிபலித்திருக்கிறார்.

**தொடர்ச்சி 32ஆம் பக்கம்**




# திரை விமர்சனம்...

31ஆம் பக்கத்தொடர்ச்சி

காவல்துறை அதிகாரியாக காட்டும் விரைப்பாகட்டும், மகன் என்ன சொல்கிறான் என்று புரியாமல் அவனை கட்டிப் பிடித்து அழுமிடமாகட்டும், அவனுடைய தேவை இதுதான் என்று புரிந்து அதற்காக அவமானப்படும் இடமாகட்டும்' கிஷோர் நிஜமாகவே ஒரு 'ஆட்டிஸம்' சிறுவனின் தந்தையாகவே வாழ்ந்திருக்கிறார். தமிழ் திரையுலகம் இவரை இன்னும் நன்றாக பயன்படுத்தலாம்.

ஜெயிச்சாதான் வெற்றி. இந்த மாதிரி குழந்தைகளை வச்சுருக்கிற எங்களுக்கு இவங்க கலந்துகிட்டாலே வெற்றி' போன்ற வசனங்களில் முத்திரை பதிக்கிறார் வெங்கடேஷ். சிறிய காவலர்கள் குடியிருப்பை காமிராவுக்குள் உள்ளடக்கிய விதம் தொடங்கி பல பாராட்டத்தக்க விஷயங்களை வைத்திருக்கிறார் ரத்னவேலு. இசை விஜய் ஆண்ட்டனி. 'அன்னையின் கருவில்' பாடல் மனம் கலங்க வைத்தாலும், 'போலீஸ்' பாடல் துள்ளவும் வைத்திருக்கிறது..! எடிட்டிங் ராஜா முகமது. இவரது பணியும் பாராட்டப்பட வேண்டியது.



சினேகாதான் அம்சவல்லி ஆசிரியை. என்னவொரு நளினம் சிநேகாவிடம்..! தனது அம்மாவின் எதிர்ப்பையும் மீறி பையனை தன்னுடன் வைத்துக்கொள்ள அவர் செய்யும் முனைப்பும், நான் காலம்பூரா அந்தப் பையனுக்கு அம்மாவா இருக்க விரும்புறேன் என்று சொல்கின்ற இடமும் சினேகாவை மீண்டும் நினைக்க வைக்கிறது..! மனவளர்ச்சி குன்றிய குழந்தையின் மீது தனி அக்கறை எடுத்துக்கொள்கிற மனசு எல்லா ஆசிரியைகளுக்கும் வருவதில்லை. ஆசிரியைகள் ஒரு முறை அம்சவல்லியை பார்த்தால் மாறிவிடுவார்கள். அந்தளவுக்கு சினேகா பாதிப்படைய வைக்கிறார். ஹரியோடு சேர்ந்து அவரது அப்பா கிஷோரும் வகுப்பில் அமர்ந்துகொள்ள, "குள்ள குள்ளனை... குண்டு வயிறனை..." என்று சினேகா குழந்தைகளுக்கு கற்றுகொடுக்க தயங்குகிற காட்சி, அசத்தல்!

நகைச்சுவைக்காக வரும் 'பரோட்டா' சூரி, காதலி ஆசிரியை, ஓமக்குச்சி என்று பெயர் வைத்திருக்கும் குண்டுப் பையன், சிநேகாவின் தங்கை, என்கவுண்டர் அணியில் இருக்கும் காவலர்கள், பிரதீப் ராவத் போன்ற சின்ன சின்னப் பாத்திரங்களுக்கும்கூட பொருத்தமான நடிகர்களை தேர்வு செய்திருக்கிறார்கள். 'பரோட்டா' சூரியின் பகுதிகள்தான் கொஞ்சம் எரிச்சலைத் தருகிறது. அவருடைய பால்ய வயது காதலி-யை ஒரேயொரு பெயரை வைத்தே கண்டுபிடிப்பது போலவும், அதுவும் அதே பள்ளியில் வேலை செய்வது போலவும் அவர் அறியும் காட்சியெல்லாம் இந்தப் படத்துக்கே ஒரு திருஷ்டிப் புள்ளி.

படத்தின் மிகப்பெரிய பலங்களில் ஒன்று வசனம். மற்றொன்று ரத்னவேலுவின் ஒளிப்பதிவு. வெங்கடேஷ் வசனங்கள் சில இடங்களில் அழவும் பல இடங்களில் நம்மையறியாமல் புன்முறுவல் பூக்கவும் வைக்கிறது. 'அவங்களுக்கெல்லாம் மேட்ச்ல

எழுதி, இயக்கியிருப்பவர் ஜி.என்.ஆர்.குமரவேல். 'நினைத்தாலே இனிக்கும்', 'யுவன் யுவதி' ஆகிய படங்களை இயக்கியவர். இந்த இரண்டு முந்தைய படங்களை பார்த்தவர்கள் நிச்சயம் இவரிடமிருந்து இப்படி ஒரு படமா என்று மூக்கின் மேல் விரல் வைப்பார்கள். கொஞ்சம் அசந்தாலும் பிரசாரமாய் போய்விட்டிருக்கக்கூடிய கதையை சுவாரசியமான ஒரு திரைக்கதையாக்கிறார். அழகான ஆசிரியையாக சிநேகா பாத்திரம், ஹரியின் மேல் அவர் வைத்திருக்கும் அன்பு, அன்பினால் எடுக்கும் முடிவுகள் என்பது போன்ற விஷயங்கள் 'ஆட்டிஸம்' போன்ற வலியான வாழ்க்கையை 'ரொமாண்டிசைஸ்' செய்திருப்பது போன்ற தமிழ்த் திரை வழக்கங்கள் உள்ளதுதான். மேலும், சமயம் அப்பட்டமான ஜனநாயக மீறலான என்கவுண்ட்டரை நியாயப்படுத்தியிருப்பது கவலையளிப்பது. "நான் ஹரியோட அம்மாவா இருக்கலாம்னு முடிவு பண்ணியிருக்கேன்" என்று சினேகா படீரென போட்டு உடைக்கும் போது நமக்கும் திக்கென்கிறது. ஆனாலும், 'ஆட்டிசம்' குறைபாடு பற்றிய புரிதலை தருவதுடன், 'ஆட்டிஸம்' பாதிப்புடைய குழந்தைகளுக்கும் அவர்களுடைய பெற்றோர்களுக்கும் ஒரு ஊக்கத்தையும் விழிப்புணர்வையும் இப்படம் உருவாக்கியிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை!

உலகத்தில் பிறக்கும் எண்பத்தெட்டு குழந்தைகளில் ஒரு குழந்தை 'ஆட்டிசம்' குறைபாடோடு பிறக்கின்றது. அவர்களது திறமை அறிந்து நன்றாக வளர்க்கப்பட்டால் அவர்களும் பெரிய மனிதர்களாகலாம் என்ற செய்தியோடு படம் முடிகிறது. பார்க்கலாம்.

# போர்க்கால...

30ஆம் பக்கத்தொடர்ச்சி

இந்த நாவலின் முக்கியமான பகுதி மூன்றாவது பகுதியே. மெலிஞ்சி கூறிய விடயங்கள் கருத்திற்கொள்ளப்படவேண்டும். மெலிஞ்சி ஒரு கதைசொல்லியாக தனது கருத்தியலுடன் விவாதிக்கின்றார். சாதியம், பெண் நிலைகள், தொழில் சார்ந்த பிரச்சினைகள் கதைக்கப்படுகின்றன. உளவாளிபற்றிய நிலைப்பாடுகள், குழுநிலை இயக்கங்கள் கருத்தாடப்படுகின்றன. சில பிற்போக்கான கருத்துக்களையும் வெளிப்படுத்துகின்றார். 'பாவியார் போகும் இடமெல்லாம் பள்ளமும் திட்டியும்' போன்ற உதாரணங்களும் நாவலில் வருகின்றது. காகம் உயர உயரப் பறந்தாலும் பருந்தாகாது என ஆசிரியர் ஒருவர் திட்டிய ஞாபகம் வருகின்றது. கறுத்த மாணவனையும் இவ்வாறு திட்டுவார். புடியாத மாணவனையும் இவ்வாறே திட்டுவார். இதன் பின்னுள்ள வன்மம் கண்டிக்கப்படவேண்டியது. அதனால் குருவைத் தெய்வம் என்று தண்டனையில் இருந்து காப்பாற்றிவிடுகின்றார்கள். பெண்பாத்திரங்கள் மூன்றாம் நிலையாகவே பார்க்கப்டுகின்றன. நாவல் முழுவதும் கதைசொல்லி மோகத்தையும் காமத்தையும் பாத்திரங்களாகவே நகர்த்துகின்றார். பெண்களையும் இவர் பண்டங்களாக நகர்த்துவதாகவே உணர்கின்றேன். பெண்களின் அக நிலை, அவர்களது மனோநிலை பற்றி மெலிஞ்சி சிறிதேனும் உணர்ந்ததாக தெரியவில்லை. இது கவலையளிக்கின்றது.

இதற்கப்பால் இரண்டாவது பகுதி ஒரு துயரமான யதார்தமான போர்க்கால வாழ்வை இடம் பெயர்வை இயல்பாக நேர்மையாக வெளிப்படுத்தியுள்ளார். இப் பகுதியினூடான பயணம் வலிமிக்கது. நாவல் செறிவாக பொதுப் புத்தியூடான போர்க்கால புரிதலின் வெளிப்பாடாக விரிந்து மெல்ல நகருகின்றது. மெலிஞ்சியின் எழுத்தின் வலிமையை வெளிப்படுத்துகின்றது. தர்க்கரீதியாக நாவலை நகர்த்தியுள்ளார். மூன்றாம் பகுதி போர் வாழ்வின் உச்சங்களை தொட்டவரின் ஒரு உக்கிரமான சுய விமர்சனமாக வெளிப்படுகின்றது. இங்கு மெலிஞ்சி தன்னையும் உடைத்துள்ளார். நாங்கள் அவரது கருத்துடன் உடன்படாவிடிலும் எம்மை அங்கு பொருத்திப் பார்ப்பது எம்மை நாமே விமர்சிப்பது போன்றதாகும். மெலிஞ்சியின் இந்த நாவல் ஈழத்து அரசியல் நாவல்களில் ஒரு குறிப்பிடத்தக்க நாவல். இது மெலிஞ்சியின் ஒரு சுயதேடலாக ஒலிக்கின்றது. போர்க்கால வாழ்வில் தனி-மனிதனின் இருத்தலியலுக்கான போராட்டமாகவும் வெளிப்படுகின்றது. பின்னிணைப்பில் உள்ள சொற்பத விளக்கங்கள் தேவையற்றவை. நாவலினூடாக விளங்கிக்கொள்ளக் கூடியதாகவுள்ளது. அடுத்து தென்மராட்சி இடப் பெயர் படமொன்றை இணைத்தால் இப் பிரதேசத்தை அறிந்து கொள்ள உதவும். பண்டிதர் குடியிருப்பு என்ற பெயர் விடுதலைப் புலி கப்ரனின் பெயரால் சூட்டப்பட்டது. விரைவில் பெயர் மாற்றங்கள் ஏற்பட சாத்தியங்கள் உள்ளன. எனவே இவற்றிற்கான பதிவு அவசியம்.

# கோட்டாமல்....

38ஆம் பக்கத்தொடர்ச்சி

நம்மை வந்து அடைகிறது.

நண்பா!

நெஞ்சில் என்னவோ உறுத்துகிறதல்லவா? இட்டமானவர்களை இழந்த துன்பம் போல் இடிக்கிறதல்லவா? கோபித்துக் கொண்டு சாப்பாட்டைத் தூக்கி எறிந்த துரோகம் துளைக்கிறதல்லவா? கோப்பித்துக்கொண்டு சாப்பிடாமல் படுத்த பாதகம் உதைக்கிறதல்லவா? ஒன்றும் அறியாத வயிற்றுக்குக் கொடுத்த தண்டனை நெஞ்சைத் தாக்குகிறதல்லவா? விருந்துகளில், சபைகளில் சாப்பாட்டை மிச்சம் வைத்துவிட்டு அது நாகரிகம் என்று எண்ணுபவர்கள் எத்தனைபேர்? தேநீர் கோப்பையின் அடிப்பாகத்தில் சிறிதளவு தேநீரை மிச்சம் வைக்கும் நாகரிகம் போல் சோற்றுக் கோப்பையிலும் சோற்றை மிச்சம் வைப்பது நாகரிகமாகுமா? உலகில் பலகோடிமக்கள் வயிற்றுக்கு உணவில்லாமல் திண்டாடுகிறார்கள் என்ற செய்தி வெறும் தொலைக்காட்சி நிகழ்ச்சியா? படித்து விட்டுபோகும் பத்திரிகைச் செய்தியா? 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும்' என்ற பாரதியின் வேண்டுகோள் வெறும்பாட்டா? உறுத்தும் உண்மையா? தெரியாமல் செய்கிறார்களா? தெரியாமல் செய்கிறோமா? கொட்டாமல் சாப்பிடுவோம், கொடுத்தும் சாப்பிடுவோம்.

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

# SAINT PATRICK'S DAY




இது ஒரு ஐரிஸ் விடுமுறை நாள் ஆகும். St.Patrick என்ற Saint இன் இறந்த திகதியில் St.Patrick day கொண்டாடப்படுகிறது. St.Patrick அயர்லாந்தில் கிறிஸ்தவ மதத்தை பரப்பினார். அவர் மார்ச் 17 இல் இறந்ததால், இத்திகதியில் St.Patrick day கொண்டாடப்படுகிறது. இது வடஅயர்லாந்தில் ஒரு வங்கி விடுமுறை நாளாகவும், அயர்லாந்து குடியரசில் ஒரு பொது விடுமுறை நாளாகவும் கொண்டாடப்படுகிறது. கனடாவில் இது ஒரு பொது விடுமுறை நாள் அல்ல. ஆயினும், Newfoundland and labrador இல் இது பொது விடுமுறை நாளாகும்.

பொதுவிடுமுறைநாளாக இல்லாவிட்டாலும், கனடாவில் St.Patrick ஊர்வலங்கள் நடைபெறும். ரொறொன்ரோ, மொன்றியல் ஆகிய நகரங்களில் இவை பிரபலமானவை. மொன்றியலில் நடைபெறும் ஊர்வலம் 1824 இல் இருந்து கொண்டாடப்படுகிறது. அயர்லாந்து மக்கள் பொதுவாக இந்நாளில் அயர்லாந்து கலாசார உணவையும் பானத்தையும் அருந்துவார்கள். St.Patrick க்கும் பச்சை நிறத்துக்கும் சம்பந்தம் உண்டு. இதனால் உணவும், உடையும் இந்நாளில் பச்சை நிறமாக இருக்கும். St.Patrick's day உடன் shamrock க்கு தொடர்பு உண்டு. shamrock என்பது பச்சை நிறமான 3 இலைகளை உடைய Clover ஆகும். Shamrock கள் அயர்லாந்தின் ஒரு குறியீடு ஆகும். சிலர் St.Patrick, shamrock ஐ பாவித்து கிறிஸ்தவ சமயத்தை பரப்பினார் என்பர்.

அயர்லாந்தில் St.Patrick's Feast என ஒரு நாள் கொண்டாடப்பட்டு வந்திருந்தது. பின்னர் அது 1903 இல் St.Patrick's day ஆகி அயர்லாந்தில் ஒரு பொது விடுமுறை நாளானது. அமெரிக்காவில் St.Patrick's day ஒரு இடத்திலும் பொது விடுமுறை நாள் அல்ல. ஆனால் இத்தினத்தில் பல கொண்டாட்டங்கள் நடைபெறும். சிக்காகோ ஆறு பச்சை நிற dye இடப்பட்டு பச்சைநிறமாக மாற்றப்படும்.

Toronto Maple Leafs என்ற Hockey team, 1919 - 1927 வரை Toronto St.Patrick என அழைக்கப்பட்டது. 2009 இல் கல்ஹரியில் இருக்கும் Tower இல் St.Patrick's day க்கு பச்சை நிற மின் விளக்குகள் போடப்பட்டன. பலர் கனடாவில் St.Patrick's day ஐ தேசிய விடுமுறை நாளாக்க விரும்புகின்றனர். 2013 இல் இது ஞாயிற்றுக்கிழமையும், 2014 இல் இது திங்கட்கிழமையும் வருகிறது.



**ஞா. ஆரணி**
அகவை 14

## இளையோர் ஆக்கம்

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.




அத்தனை குழம்பும்
அத்தனை ருசி...!
வறுத்த மிளகாய்த் தூள்
CURRY CHILLI POWDER
தரத்திலும் No.1
ஆரோக்கியத்திலும் No.1
இப்போது புதுமையிலும் No.1
Niru BRAND ®
வறுத்த மிளகாயத் தூள்
நா நரம்புகள்
சிலிர்த்திடும் ருசி!
Marketing By Tamil Source
Niru
நிரு பிராண்ட்
40 Minuk Acres, Scarborough, ON M1E 4Y6.
Tel: (416) 750-1976, Fax: (416) 750-8779
E-mail:info@niru.com

# தனது நாட்டையும்...

23ஆம் பக்கத்தொடர்ச்சி

63வீத வாக்குக்களைப் பெற்று மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்டார். இந்த வெற்றிவீரனது நிலை அமெரிக்க ஏகாதிபத்தியத்திற்கு எதிரான ஒருவரின் வெற்றியாக உலகம் முழுவதும் கருதியது. இங்கிலாந்தில் அவர் கென் லிவிங்ஸ்ரன் என்னும் நகர முதல்வரால் வரவேற்றுப் பாராட்டப்பட்டார். ஒக்ரோபர் 7, 2012ல் ஷெவே தனக்கு எதிராகப் போட்டியிட்ட ஹென்றிக் கப்பிறிலெஸ் என்பவரை இலகுவாக 54வீத வாக்குக்களைப்பெற்றுத் தோற்கடித்து மீண்டும் அதிபராகத் தெரிவுசெய்யப்பட்டார். இந்த தேர்தலின்படி அவர் 2019 வரையும் ஆட்சியில் இருப்பதற்காக அதிகாரத்தை வழங்கியுள்ளது. ஆனால் துர் அதிஷ்டவசமாக அவர் கடந்த இரண்டு ஆண்டுகளாக அவதியுற்ற புற்றுநோய் அவரின் 58ஆவது வயதில் உயிரைக் குடித்துவிட்டது என்ற துயரச்செய்தியை 5.03.2013ல் கேட்டு உலகம் அதிர்ச்சியுற்றது.



தனது ஆட்சிக்காலத்தில் பல்வேறு விதமான அச்சுறுத்தல்களுக்கு அவர் முகம்கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. குறிப்பாக வெனிசியுலாவின் எண்ணைக் கிணறுகளை தேசியமயமாக்கி அரசுடமையாக்கியமை அவரது கொள்கைகளை நடைமுறைப்படுத்த வாய்ப்பாக அமைந்திருந்தது. ஆனால் இந்த எண்ணைக் கிணறுகளால் அதிக இலாபம் பெற்றுக்கொண்ட அமெரிக்கா, ஷெவேயை ஆட்சியில் இருந்து இறக்கிவிட அல்லது தொலைத்துத் தள்ளிவிட பகீரதப் பிரயத்தனங்களைச் செய்தது என்பது பகிரங்கமான ஒன்று. அமெரிக்க தொலைக்காட்சியைச் சேர்ந்த எவன்ஜிலிஸ்ற் பற் றொபேட்சன் பகிரங்கமாகவே கூகோ ஷெவே படுகொலை செய்யப்படவேண்டும் என பிரதான தலையங்கம் இட்டுக் குறிப்பிட்டமை அமரிக்காவின் எண்ணத்தைப் பிரதிபலிப்பதாக உள்ளது என அமெரிக்காமீது காரசாரமாக ஷெவே கண்டனம் எழுப்பியதோடு மட்டுமன்றி ஐ.நா.வில் அமெரிக்காவிற்கு எதிராக முறையிடப்போவதாகவும் நடவடிக்கை எடுக்கப்போவதாகவும் அச்சுறுத்தல் விடுத்தார் என்றால் கூகோ ஷெவேயின் தற்றுணிவு எத்தன்மையானது என்பது உள்ளங்கனி நெல்லிக்கனிபோன்றது.

எதிரணியினரால் ஜனநாயகத்தைக் குழிதோண்டிப்புதைப்பதாகவும், பத்திரிகைச் சுதந்திரத்தையும் எதிர்க்கட்சியின் கருத்துக்களையும் நசுக்குவதாகவும் பல்வேறு விதமான விமர்சனங்களை முன்வைத்து வந்தன எனினும் நாட்டு மக்களால் மிகவும் மதிக்கப்படும் ஒரு பிர-பலமான தலைவராகவே அவர் காணப்பட்டார். அவர் தனது இறுத்திக் காலங்களில் தொலைக்காட்சியில் தோன்றுவதும் மக்களுக்கான சோசலிச மற்றும் முதலாளித்துவ எதிர்ப்புக் கருத்துக்களை மணிக்கணக்காக உரையாடி வருவதோடு மிகவும் கவர்ச்சிகரமாகப் பாட்டுக்களையும் பாடிமக்களின் உள்ளங்களில் இடம்பிடித்துக்கொண்டார். 14 ஆண்டுகள் தொடர்ந்து அதிகாரத்தில் இருந்த ஷெவேஸ் 2019ஆம் ஆண்டு வரைக்கும் நாட்டின் அதிபராக இருப்பதற்கும் தெரிவாகியிருந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. ஆஜன்ரீனாவில் பிறந்த அரசியல் வாதியான ஷே குவேய்ராவின் வழியில் நாட்டைக் கட்டியெழுப்பவேண்டும் எனக் கனவு கண்டார். கியூபா நாட்டு அதிபர் பிடல் காஸ்ரோவுடனும் அவருடைய சகோதரர் றாவுல் காஸ்ரோவுடனும் தோழமையுண்டு அவர்களோடு தொடர்பை வைத்திருந்தார். நோய்வாய்ப்பட்டபோது அவர் கியூபாவிற்கு மருத்துவத்திற்காக சென்றிருந்தார் என்பது உலகறிந்த உண்மை.

நோய்வாய்பட்டிருந்த போது அவர் நாளாந்தம் 40 குவளைக்கும் அதிகமான கோப்பியினை அருந்தினார் எனவும் தனது நோயைக் கருத்திற்கொள்ளாமல் தூக்கமின்றி நாட்டின் நலனுக்காக தனது அமைச்சர்களை அழைத்து ஆலோசனைகளை வழங்கினார் எனவும் கூறப்படுகின்றது. தனக்கு வாரிசாக தனக்கு அறுவைச் சிகிச்சை நடைபெறுவதற்கு மூன்று நாட்களுக்குமுன்னர் துணை ஜனாதிபதி மதுரோவைத் தேர்ந்தெடுத்திருந்தார். அவர் தனது இறுகி நாட்களில் நாட்டின் வருங்காலம் பற்றியும் அது சோசலிசப் பாதையில் செல்வதற்கு இன்னும் பல வேலைகளைச் செய்யவேண்டியுள்ளது என்பதனையும் எடுத்துத் தெளிவுபடுத்தியிருந்தார்.

ஏழையாகப் பிறந்து இராணுவத்தில் இணைந்து நாட்டின் தலைவனாக பணியாற்றிய உலகத்தலைவர்களால் வியக்கத்தக்க வகையில் மக்களின் நல்லெண்ணத்தை வென்றெடுக்கும் வகையில் பணிகளை மிகத்துணிகரமாகச் செய்த ஒரு துணிச்சலான தலைவனாக அவரை மக்கள் மதிக்கின்றார்கள். ஏழைப்பிள்ளைகளுக்கு கல்வி வாய்ப்புக்கள், மக்களுக்காக குடியிருப்பு வசதிகள், வேலை வாய்ப்பு என்பனவற்றில் பாரிய முன்னேற்றகரமான செயல்களைச் செய்து காட்டியதோடு நீண்ட தூர நோக்கோடு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும் என்னும் திடசங்கற்பம் பூண்டிருந்த ஒரு தலைவனை நாடு இன்று இழந்து தவிக்கின்றது. ஷெவே நாட்டின் அதிபராகப் பதவியேற்பதற்கு முன்னரே தனது முதல் மனைவியை விவாரத்துச் செய்திருந்தார். அவரின் மூலம் அவருக்கு மூன்று குழந்தைகளும் பின்னர் தனது மனைவியாக பத்திரிகையாளர் மரிசபெல் றொட்டிகஸ் (Marisabel Rodriguez) என்பவரை மணமுடித்து அவரின் வாயிலாக ஒரு குழந்தைக்கும் தந்தையானார்.

நோய்வாய்ப்பட்ட அதிபர் ஷெவேஸ் 2011ல் அவரது அடிவயிற்றுப்பகுதில் ஒரு ரென்னிஸ் பந்தளவான புற்றுநோய்க் கட்டி ஒன்று அகற்றப்பட்டதைத் தொடர்ந்து கட்டி மற்றும் புற்றுநோய்க்கான அறுவை, மற்றும் சிகிச்சைகள் தொடர்ந்த செய்யப்பட்ட தெனினும் அவரது நோய் குணமாகாத நிலையில் இராணுவ மருத்துவ மனையில் காலமானார். அவரது இறுதி அஞ்சலி வைபவத்திற் கலந்துகொள்ள உலகெங்கிருந்தும் அரசியல் தலைவர்கள் வந்து கூடியமை அவரது புகழை உலகறிய வைத்துள்ளது. கனடாவில் இருந்து முன்னைய பிரதம அமைச்சர் ஜேன் கிரேஜ்சியான் தனது துணைவியாருடன் சென்றது போன்று ஈரான் அதிபர் மொகமட் அகமடினஷா, கியூபா அதிபர் றாவுல் காஸ்ரோ, நடிகர் சியேன் பென், அமெரிக்க மனித உரிமைக் கழகத்தின் தலைவர் வணக்கத்துக்குரிய ஜஸ் ஜக்சன், பொலிவியன் அதிபர் ஏவா மோரல்ஸ், பெலாறஸ் அதிபர் அலெக்சாந்தர் லுகாஷென்கோ உட்பட பல்வேறு நாட்டு அரசியல் வாதிகள் இறுதி மரியாதை செலுத்துவதற்காக வெனிசியுலாவில் கூடியுள்ளனர் என்பது ஷெவேஸ் மீது உலக நாட்டுமக்கள் வைத்துள்ள மரியாதையை வெளிப்படுத்துகின்றது எனலாம்.

# கத்தோலிக்க...

24ஆம் பக்கத்தொடர்ச்சி

இரண்டாவது ஜோன் போல் அவர்களால் நியமிக்கப்பட்டார். 2001 ஆம் ஆண்டு வைத்தியசாலைக்கு சென்று அங்கிருந்த எய்ட்ஸ் நோயாளிகளின் கால்களை கழுவி முத்தமிட்டு தனது ஆதரவை தெரிவித்து எல்லோரையும் வியப்பில் ஆழ்த்தினர். கடந்த முறை நடந்த பாப்பரசர் தெரிவில் இவர் பாப்பரசர் பெனடிக்குக்கு அடுத்ததாக வந்ததாக நம்பப்படுகிறது. அவரின் குறைவான வயதே அவர் அப்போது தெரிவு செய்யப்பட்டமைக்கு காரணமாகக் கூறப்படுகிறது.



தெரிவான முதல் இரவே தனது எழிமையையும் நகைச்சுவை தன்மையையும் வெளிக்காட்டி நின்றார். பாப்பரசர் தெரிவு முடிவடைந்ததும் மற்றைய கர்தினால்கள், அவர்களுக்குரிய பஸ்களில் ஏறி சென்று புதிய பாப்பரசரை வரவேற்பதற்காக அப்போஸ்தலிக்க இல்லத்தில் காத்து நின்றார்கள். எல்லோரும் ஆச்சரியப்படும் படியாக, தனது ஆடம்பர வாகனத்தை விட்டு விட்டு கடைசி பஸ்ஸில் சக கர்தினால்களுடன் வந்திறங்கினார். புதனிரவு நிகழ்ந்த இராப்போசன விருந்தில், சக கர்தினால்கள், TOAST கூறி வாழ்த்தியபோது அவர் நகைச்சுவையாக 'ஆண்டவரே என்னைப் பாப்பரசராக தெரிவாக்கிய இவர்களை மன்னிப்பாயாக' என்று கூறியபோது மண்டபமே சிரிப்பொலியால் அதிர்ந்தது.

அது மட்டுமல்லாது காலையில் நேரத்துடன் எழுந்து, நேராக உணவுக்கூடத்துக்கு சென்று பாத்திரங்களை கழுவிக் கொண்டிருந்த சேவகர்களை அதிர்ச்சிக்குள் ஆக்கினார்.

வத்திக்கானில் குவிந்து கிடக்கும் முழு கத்தோலிக்க திருச்சபையின் அதிகாரமும் பரவலாக்கப்பட வேண்டுமென்ற என்ற நீண்ட நாள் கோரிக்கை, எளிமையும், மனித நேயம் கொண்ட புதிய பாப்பரசர் பிரான்சிஸ்ஸினால் நிறைவேற்றப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது,

ஆதாரம்: வீக்கிபீடியா, வீக்கி நியூஸ், டொரோண்டோ ஸ்டார், கத்தோலிக் நியூஸ்

# Education

## Review Tutorials -135

### CHEMISTRY 12 & IB

A voltaic cell is constructed from two half-cells as illustrated below.




(a) Deduce the equation for the spontaneous reaction occurring in this cell.
(b) Calculate the standard potential for this cell. (11)

### CHEMISTRY 12 IB

Draw Lewis structures for each of the following, using formal charges that gives best description of electron description.

(i) $SO_2$ (ii) $H_2SO_3$ (iii) $H_2SO_4$

### CHEMISTRY 11

(A) Draw Lewis structures for each of the following, based on the octet rule.

(i) $NO_3^-$ (ii) $NH_3$ (iii) $CH_3^+$ (iv) $NH_4^+$

(B) Calculate the molarity of the hydrochloric acid solution 12% by mass. (density = 1.05g/mL)

### BIOLOGY 11 &12

Chemical analogues that mimic the structure of nucleotides incorporated into DNA and prevent DNA polymerase from building a complementary strand during DNA replication. Explain why this is an effective method in treating the growth of cancer cells? Explain side effects of this method.

### Physics 11& 12

Two balls are thrown vertically upward, one after the other with a 1.2 s time difference. Balls reach maximum heights at the same instant (these heights are different). If the initial speed of the first ball is 25.0 m/s, determine the initial speed of the second ball.

### Calculus 12

(i) Differentiate, $\cos^2 \frac{1}{x}$

(ii) Find the limits, $\lim_{x\to 0} \frac{\sin 2x + 3x}{2x + \sin 3x}$

## Answer key 134

### BIOLOGY 12, IB and AP

Sucrose glucose 1α→2 fructose

Answer the question giving named example. ( pesticide resistance/ herbicide resistance in agriculture/ health)

**Possible benefits:** Faster than traditional methods, increased productivity, less use of chemicals,

In health; such as may cure genetic diseases, less expensive drug production, human insulin production.

**Harmful effects**; release of GMOs can spread and compete with native species, reduces genetic variability, may potentially harmful to organisms.

### CHEMISTRY 12 & IB

**(11)** Calculate the number of moles of each reactant

$K_2Cr_2O_7$ = 0.9x 20 = 18g; $K_2Cr_2O_7$ = 0.061225mol

Number of moles of HCl = 50/36.46= 1.3714

Limiting reactant is $K_2Cr_2O_7$

**(12)** $FeS + 3NO_3^- + 4H^+ \rightarrow Fe^{3+} + 3NO + SO_4^{2-}$

### PHYSICS

**(11)** First ball (A) Calculate the time required to reach maximum height $V_f = V_i + a\Delta t$

$v_i$ =25.0m/s, $v_f$ = 0m/s, a= -9.8m/s²; $\Delta t = 2.5$ s

For the 2nd ball(B)

$v_i$ =? , $v_f$ = 0m/s, a= -9.8m/s²; $\Delta t$ = ( 2.5-1.2) s

$V_f = V_i + a\Delta t$ ; $V_i$ = 13.3m/s **(ans 13.3 m/s)**

**(11 -12)** Initial velocity = 0 each case. Lets take the final velocities of P and Q are V and 2V and accelerations are $a_p$ and $a_q$ ; use $v_f^2 = v_i^2 + 2a\Delta d$ and find out $a_P$ & $a_Q$

Results $a_P = 4a_Q$ ; FOB for child P,

F net = m $a_P$ = m g sin 32; $a_P$ = g sin 32;

Therefore, $a_q$ = g sin 32/4

FOB for Q results, $F_N = m_g \cos 32$

$\frac{mg\sin 32}{4} = mg\sin 32 - \mu_k . m_g .\cos 32$ ; $\frac{\sin 32}{4} = \sin 32 - \mu_k . \cos 32$

$\mu_k = 0.37$

### MATH 11

Lets take the speed of the bus $x$ km/h

$time = \frac{distance}{speed}$ therefore $\frac{400}{x} - \frac{400}{x+10} = 2$

Solve for $x$ $(x+50)(x-40)=0$; **(speed 40km/h)**

### FUNCTIONS /Adv. FUNCTIONS 11& 12

**(12-A)** leading coefficient =1

(12 B) $f(x) = a(x-1)(x-2)(x-3)^2$

Plug the values $f(x)$ =20 and x = 4, and then find the value "a " and write the equation

### Calculus 12

**Find the limits** $\lim_{x\to 0} \frac{ax^2 + bx + c}{cx^2 + bx + a}$ ( Ans = c/a)

*Answer key 134 - next issue*

Contact: 647 341 3975
Dr. A.Sri Krishnaraj PhD
KEEN TUTORING CENTRE
ask@ keentutoringcentre.com

# பெண்ணுரிமை...

28ஆம் பக்கத்தொடர்ச்சி

உலகமாகி சர்வதேசியமாக விரிவடைந்து உலகம் முழுவதுக்குமான பெண்விடுதலை போராட்டமாகியது. இனம், மதம், மொழிகளைக் கடந்து ஒரே குரலில் இன்று இது அடிக்கடி ஒலிக்கிறது.

இந்த வகையில் இதற்குரிய ஆரம்ப வடிவம் 1910ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ம் திகதி டென்மார்க்கில் கூடிய இரண்டாவது சோசலிச பெண்கள் மகாநாட்டில் கிளாரா ஜெட்சின் என்பவரது தலைமையில் எடுக்கப்பட்ட தீர்மானப்படி 1911ல் மார்ச் 8ம் திகதி முதல் போராட்டம் மகாநாடு கண்டது. ஜேர்மனி, ஆஸ்திரியா, சுவீடன், டென்மார்க், நாடுகளே இதில் முதலில் ஈடுபட்ட நாடுகள். தலைவி ஜேர்மன் சிறையில்




அடைக்கப்பட்டார். எனினும், 1917இல் லெனின் கூட்டிய ஏப்ரல் மகாநாட்டில் பல பெண்கள் உரிமை-கள் வெளிவந்தன. புரட்சிகரமான சிந்தனைகள் இங்கிருந்து பிறந்தன. முதலாளித்துவ பெண்ணிய கருத்து முறியடிக்கப் பட்டது. "மனைவி முதல்வேலைக்காரி அல்ல" பெண்களை நசுக்குகின்ற, கழுத்தை நெரிக்கின்ற, வளர்ச்சியை தடுக்கின்ற, மதிப்பை இழக்கின்ற அனைத்தினையும் இவர் தடுக்க முயன்றார், இதன் அலைகள் உலகில் பரவின. அதன்வடிவம் மார்ச் 8ல் சர்வதேச பெண்கள் தினமாயிற்று. தொடர்ந்தும் விழிப்பு பெறும் விடுதலைக் கீதமாயிற்று.

Woman is the companion of man, gifted with equal mental capacity....If by strength is meant moral power, then woman is immeasurably man's superior....If nonviolence is the law of our being, the future is with women.. - மகாத்மா காந்தி

**March 08 - மகளிர் தினத்தை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகிறது.**

**50**

**PARTY HALL**
**EVENT CENTRE**
**MEETING PLACE**

**AVAILABLE FOR RENT**

***Anniversary, Birthday, Get-together, Office Meeting, School Meeting,*** புத்தக வெளியீடு, கலந்துரையாடல்... போன்றவை நடத்தக்கூடிய இடம் வாடகைக்கு உண்டு. ஏறக்குறைய **50** பேருக்கு போதுமானது. நிறைந்த வாகனத்தரிப்பு வசதிகள் உண்டு.

**GTA Square Mall (FINCH & MIDDLEFIELD**

**தொடர்புகளுக்கு: 416.917.6883**

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு

www.vlambaram.com

www.tamilvanakkam.com

# கடவுள் நம்பிக்கை இல்லாவிடின்

நான் நம்பிக்கை வைப்பவற்றில் தான் என் சக்தியைச் செலவழிப்பதால் நம்பிக்கையின் சக்தியை உணர்ந்து, அனுபவித்து அதை வெளிப்படுத்துகிறேன்.

உலகில் ‘கடவுள் இல்லை’ என நம்புபவர்கள் பலர் இருக்கிறார்கள். Atheist என அழைக்கப்படும் இவர்கள் கடவுள் நம்பிக்கை இல்லாதவர்கள். தாம் தெரிந்து கொள்ள விரும்புவதும் தங்களுக்குத் தெரிந்ததும் தாம் மட்டுமே எனக் கூறும் இவர்கள் தாமே சகலதையும் செய்பவர்கள், சுயநம்பிக்கை மிக்கவர்கள்.

இறைநம்பிக்கை இல்லாவிடினும் இவர்கள் சாதாரணமாக ஆரோக்கியமா கவே வாழ்கின்றார்கள். உலகளாவிய ரீதியில் மிகவும் வெற்றிகரமாகவும் செயற்படுகிறார்கள். தொழில் ரீதியிலும் நிதி நிலைமையிலும் உறுதியுடன் நல்ல வசதியாயிருக்கிறார்கள். நல்ல வாழ்க்கைத் துணையுடன் நல்ல தாய்-தந்தையராகவும் விளங்குகிறார்கள். விசுவாசமுள்ள நம்பிக்கைக்குகந்த நண்பர்களாகவும் திகழ்கிறார்கள். ‘இதென்ன! இப்படி கடவுள் நம்பிக்கையின்றி வாழ்கிறார்களே’ என



எம்மில் சிலர் பழித்தாலும் அவர்கள் நன்றாகவே வாழ்கிறார்கள். உண்மையில் கடவுள் பக்தியில் ஊறித் திளைக்கும் சிலரை விட வெற்றிகரமாகவும் சந்தோஷமாகவும் வாழ்கிறார்கள். ‘உனக்கு வெற்றி நிச்சயம் கிட்டும்’ எனும் நம்பிக்கையுடன், எதில் நீ விசுவாசத்துடன் உனது சக்தியைச் செலவழிக்கிறாயோ அது வெற்றி பெறத்தான் செய்யும். நீ நம்புவதல்ல அல்லது நீ நம்புவது என நினைப்பதல்ல நம்பிக்கை தான் இதில் முக்கிய பிரகிருதி. முதலில் உன்னை நீயே முற்றுமுழுதாய் நம்பி, நீ செய்யும் தீர்மானங்களையும் நம்பி, உனது சக்தியுடன் மனப்பூர்வமாக முயற்சி செய்தால், விரும்பும் எதையும் நிச்சயம் நீ சாதிக்கலாம். இறைசக்தியின் தெய்வீக அன்பு, அருள், கருணை எனும் கோட்பாடுகளை நம்புவது உனது முயற்சியை இலகுவாக்கலாம் தான். இறைவனின் காலநேரம், இறை நியதி, இறைசாந்நித்யம் போன்றவற்றிற்கு உனது குரலையும் கைளையும் உயர்த்தி நன்றி சொல்வது உனக்கு மகிழ்ச்சி தரும் என்பது உண்மைதான். ஆனால் உனக்குக் கடவுள் நம்பிக்கை இல்லாவிட்டால், இவையெல்லாம் அவசியமில்லாதவை என நினைத்தால், நீ இவற்றைச் செய்யத் தேவையில்லை.

கடவுள் ஒருவர் இருக்கிறார் என நம்புவது வெற்றிகரமான ஜீவியத்திற்கு அத்தியாவசியமானது என இன்றுவரை நீ நினைத்திருக்கலாம். இன்று உன்னுடன் சேர்த்து மற்றவரும் தாம் விரும்பியபடி சுதந்திரத்துடன் வாழ அனுமதி அளித்துவிடு. உனது நம்பிக்கையை என்ன பெயரால் அழைக்கிறாய் என்பதை விட உனது நம்பிக்கை எப்படி இருக்கிறது என்பதை இன்று பரிசீலனை செய்துகொள்.

**நான் நம்பிக்கை வைக்கும் விடயங்களிற்கு செலவழிக்கும் எனது சக்தியை நன்கு அலசி ஆராய்ந்து சரி செய்வதில் இன்றுமுதல் விசுவாசத்துடன் ஈடுபடப்போகிறேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 214

மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214



லலிதா புரூடி

# கொட்டாமல் சாப்பிடு!




என் இனிய நண்பர்களே! வாழ்த்துக்கள். நலம்பெறப்பிரார்த்திக்கிறேன். நமது நாட்டில், நமது ஊரில், நம்முடைய வீட்டில் கேட்ட குரல்கள், அதன் ஓசை நயங்கள், உள்அர்த்தங்கள், பயன்பாடுகள் பற்றி என்றைக்காவது நினைவுக்கு வரும்போது மனம் துணுக்குகிறது, துடிக்கிறது. சிலவேளைகளில் அந்தக் குரல்களே நமது காதுகளுக்குள் கேட்கின்றது. இங்கு சில காட்சிகளைக் காண்கிறபோது அன்று கேட்ட குரல் உணர்வில் தட்டுப்பட்டு தடுமாற வைக்கிறது.

நண்பா!
சிறுவயதில் நமது வீட்டில் சாப்பாட்டு நேரத்தில் நம்முடைய ஆச்சியோ, அக்காவோ அல்லது நமது வீட்டு பெரியவரோ சொல்லும் வாக்கியம் ‘கொட்டாமல் சாப்பிடு, கொட்டாமல் சாப்பிடு’ என்பதாகும். நமது சின்னக்கையால் சோற்றையோ, பிட்டையோ அள்ளிச் சாப்பிடும் போது அதில் சிறிய பருக்கையோ, சின்னத்துகளோ கீழே சிந்திச்சிதறும், அது குறித்த எந்த அக்கறையும் இல்லாமல் நாம் தொடர்ந்து தின்று கொண்டேயிருப்போம். கையிலிருந்தும், வாயிலிருந்தும் அவை மீண்டும், மீண்டும் கொட்டுகிற போது ஆச்சி ‘கொட்டாமல் சாப்பிடு’ என்று சொல்லிக் கொண்டு கீழே விழுந்த பருக்கைகளைப் பொறுக்கி தனது சாப்பாட்டுத்தட்டில் போட்டுக்கொண்டு சாப்பிடுவார்கள்.

சிலவேளை நமது வட்டிலிலோ, தட்டிலிலோ போட்டுக் குழைத்து விடுவார்கள். இது நம்மில் கொண்ட அக்கறை மட்டுமா? இல்லை. சாப்பாட்டில் வைத்திருக்கும் மரியாதை. ஒருவகைப்பக்தி. நமது பழசுகள் சாப்பிடும் போது ஒரு கவனத்தைத் திரட்டி கண்ணடிக்குக் கொண்டு போய் கடவுகளை நினைந்து கண்ணை மூடிக் கும்பிட்டு வாய்க்குள் வைத்து மென்று தின்று விழுங்குவது எத்தனை உணர்வு பூர்வமாய்,



பக்திபூர்வமாய், பக்திபூர்வமாய் அமையும்.

திருப்தியாய் சாப்பிடுவது என்பது வயிற்றை நிரப்புவது மட்டுமல்ல. நெஞ்சையும் நினைவுகளையும் திருப்திப் படுத்துவதாகும். பிறர் பசியை போக்குவது என்பதும் ஒரு மனோதிருப்தியே. பிறர் பார்த்திருக்க உண்ணக்கூடாது என்று நமது பெரியவர்கள். ஏன சொன்னார்கள்? அவர் பசியோடிருக்கலாம். பசியாறியும் இருக்கலாம். நாம் சாப்பிடுங்கள் என்று கேட்டால், பசியோடிருப்பவர் மரியாதைக்காக, ‘நான் சாப்பிட்டு விட்டேன், நீங்கள் சாப்பிடுங்கள்’ என்றும் சொல்லலாம். அவர் உண்மையாகவே சாப்பிட்டவராகவும் இருக்கலாம்? எப்படி உண்மையை கண்டுகொள்ள முடியும். இந்தக் குழப்பத்திற்காகவே பிறர் பார்த்திருக்க உண்ணாதே என்றார்கள் போலும்.

நண்பா!
ஒரு நகைச்சுவை நிகழ்ச்சியும் நினைவுக்கு வருகிறது. எங்கள் ஊரில் ஒரு பெரியவர் எல்லா நகர்வுகளிலும் பெருந்தன்மையோடும், பெருங்குணங்களோடும் வாழ்ந்தவர். பிறர் மனம் நோகவோ, மனம் கோணவோ நடக்காத சான்றோர். அவர் சாப்பிடும்போது பிறர் காணாமல் உண்ணும் வழக்கமுடையவர். அவருடைய பெரும் போக்குகளை எல்லாம் தெரிந்திருந்த ஒரு முதாட்டி, அச்சான்றோர் நிறையச் சாப்பிடுவதற்காகவே காணாமல் உண்கிறார். கண்பட்டு விடும் என்ற கவனம் அவருக்கு என்று கதை கட்டிப்பரப்பியும் விட்டார். பாவம் அந்தப் பெரியவர், அவருக்கு பெருந்தீனப் பெரியவர் என்று பட்டமும் சூட்டி விட்டார்கள். சாப்பாட்டு ராமன்களில் அவரையும் ஒருவராய் பலரும் கணித்துக் கொண்டார்கள்.

அவர் சாப்பிட்டது நான்கு பிடி சோறு. நான் இடியப்பம். நான்கு



- புலவர். ஈழத்துச்சிவானந்தன் -
(நிறுவனர் ஆதி அருள்நெறி மன்றம் - கனடா)

தோசை. மூன்று இட்லி தான். நாம் ஒன்று செய்ய பிறர் ஒன்று நினைத்து பேசிக் கொள்வார்கள். இதுதான் உலகம். ஊரவர் தத்தம் மனத்தன பேசுவர் என்ற திருவாசகக் கூற்றில் எத்தனை உளவியல் உண்மைகள் புதைந்து கிடக்கின்றன?

நகைச்சுவைத் தொடர் 264

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்





கோவிலும் சுனையும் கடலுடன் சூழ்ந்த கோணமாமலை அமர்ந்தாரே...
26. திருக்கோணேஸ்வரம் கொடி
ஓர் நாள் வந்ததென்று வாசனை மலர்கள் சொல்வதுண்டு.
19. வசந்தகாலம் ஆரம்பம்.

நடந்ததை எண்ணி கவலைப்பட்டால் அவன் மடையன். போடா வருவது வரட்டும் என்பவனே நல்ல ரசிகன்.



மார்ச் பிறேக் ஒருவாறு முடிஞ்சுது. இனி பெரியவெள்ளி, உயிர்த்த ஞாயிறு, தமிழ் சித்திரைப் புத்தாண்டு விஜய வருடப்பிறப்பு, பங்குனித்திங்கள் என அடுக்கிக்கொண்டே போனா ஆட்டிலறி அன்னம்மா.



வரப்போகும் நல்ல தினங்களை நினைத்து சிலர் மகிழ்ந்து வாழ்கிறார்கள். ஆனால் எப்போதோ நடந்த சம்பவங்களை வெளியிலும் சொல்ல முடியாமல் மறக்கவும் முடியாமல் தீர்க்க முடியாத மனஅழுத்தத்தில் வாழ்கின்றனர்.

அதுமட்டுமல்லாமல் தினமும் மனஅழுத்தம் பற்றியும் தியானம், யோகா, ஆலய வழிபாடு பற்றி கட்டுரை கருத்தரங்குகள் இலவசமாக நடந்தாலும் யார் கலந்துகொள்கிறார்கள்? பஸ்ஸில் பிரயாணம் செய்யப் பழகாத பலருண்டு. தனித்து பக்கத்திலுள்ள மோலுக்கே போகத்தெரியாத பலருண்டு.

இன்று பல நன்மை தீமை செய்திகள் இணையத்தளங்களில் வருவதால் தெரிந்த பலரின் இறப்புச் செய்திகள் கூட பல முதியவர்களுக்கு கிடைப்பதில்லை.

சிவராத்திரிக்கு உலகர் குழாம் புறப்பட செக்கண்ட்புளோர் செல்லம்மா கடைசி நேரத்தில் குளிர் என குழம்பிவிட்டா. பின்னர்தான் உலகருக்குப் புரிந்தது. செக்கண்ட்புளோர் செல்லம்மா தினமும் பார்க்கும் சீரியல் நாடகம் ரி.வி.யில் மிஸ்பண்ண விரும்பவில்லை அதனால் சிவராத்திரி கோயில் புறோகிறாம் கட்




நாங்களும் இத்தாலியிலை இருந்தநாங்கள். வத்திகானுக்கு நெடுகலும் போறநாங்கள். அங்கை அதிலை இதிலை நிக்கிறநாங்கள் என ரி.வி.யில் புதிய பாப்பரசர் தெரிவுசெய்த காட்சிகளைப்பாத்து சொல்லிக் கொண்டிருந்தா செக்கண்ட் புளொர் செல்லம்மா. புதிய புனித பாப்பரசர் சாதாரண வாழ்க்கைதானாம் வாழ்ந்தவர். தனது சாப்பாட்டை தானே சமைத்து சாப்பிடுவார். மக்களோட மக்களாய் பஸ்சில் பிரயாணம் செய்வாராம். தன்னைத்தாழ்த்துபவன் உயர்த்தப்படுவான் என்பதற்கு அவர் நல்ல உதாரணம் என்றா செக்கண்ட் புளோர் செல்லம்மா.

ஆடை அணிகலன் ஆடம்பரங்கள் ஆண்டவன் விரும்புவதில்லை.
தூங்காமல் தூங்கி சுகம் பெறுவதெக்காலம்?
சிவராத்திரியா? ரி.வி.சீரியலா எனப்பட்டிமன்றம் வைத்தால் தான் சில விடயங்களை தெளிவுபடுத்த முடியும்.

லெக்சன் றிசல்ற் பார்ப்பதில் எவ்வளவு விறுவிறுப்போ அதே ஆவாரத்துடன் உலகர் குழாம் இலங்கைப் பிரச்சினையில் ஐ.நா.எடுக்கப்போகும் முடிவை றேடியோ ரி.வி.செய்திகள் முலம் கணித்துக்கொண்டிருந்தனர்.

இதற்கிடையில் ஐ.நா. சபையில் இலங்கைப் பிரச்சினை இன அழிப்பு அநியாயப் படுகொலைகள் கைது செய்து கைகள் கண்கள் கட்டப்பட்ட நிலையில் படுகொலைகள் பக்கம் பக்கமாக ஆவணப்படுத்தப்பட்ட பின்னும் தெளிவுபடுத்தவும் 3 வருடங்கள் கடந்தும் போர் நிவாரணம் சீர்திருத்தமென தெளிவாகக் கணக்குப்பார்த்து பணம் வாங்கும் அரசு பணக்கணக்குப் பார்க்கும் திறமை புதைத்த புதைந்த உயிர்களின் எண்ணிக்கை கணக்கெடுக்க நேரம் கிடைக்கவில்லை.

இதற்கிடையில் பல விடயங்கள் பதிலற்ற கேள்விகளாகவே இருந்தன.
தமிழர் பிரச்சினையில்
கலைஞரின் அதிரடி முடிவு?
அம்மாவின் அமைதி?
விஜயகாந்தின் வினாவுக்கு பதிலென்ன?
எல்லாம் கேள்வியாகவே இருக்கிறது.

எதற்கும் ஒரு காலமுண்டு பொறுத்திருமகனே!
சட்டம் ஏமாந்து போனாலும் போகும். தர்மம் என்றைக்கும் பழிவாங்கித்தீரும்.
ஆசையே துன்பத்திற்கு காரணம்.

நீதியோடு இந்த உலகையே சுற்றிவரலாம். ஆனால் அநீதியோடு உன் வீட்டு வாசலையும் தாண்ட முடியாது -யுக்கிரேனிய பழமொழி

'தன்வினை தன்னைச்சுடும்' -பட்டினத்தார்









மார்ச் 15..31.....

19. வசந்தகாலம் ஆரம்பம்.
20. சேர். ஐசாக் நியூட்டன் நினைவுதினம்.
(வீழ்ந்த அப்பிளில் விடாமுயற்சி ஆராய்ச்சி)
23. 1752ல் கனடாவின் முதலாவது பத்திரிகை 'கலிபாக்ஸ் கசெட்' பத்திரிகை வெளியிடப்பட்டது.
23. யாழ். சித்தர் யோகசுவாமிகள் நினைவு தினம் (1872 - 1964)
(என்னை யெனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்)
24. டாக்டர். சீர்காழி கோவிந்தராஜன் நினைவுதினம்.
24. முதலாவது எலிசபேத் மகாராணி நினைவு தினம்.
26. திருக்கோணேஸ்வரம் கொடி
29. மானிப்பாய் மருதடி விநாயகர் கொடி
29. பெரிய வெள்ளி (good Friday)
31. உயிர்த்த ஞாயிறு (Easter Sunday)
1. ஏப்பிரல் மறக்கமுடியுமா?

"நானொரு முட்டாளுங்க, நல்லாப்படித்தவங்க நாலுபேரு சொன்னாங்க" –சந்திரபாபு.











# கொட்டாமல்....

## 37ஆம் பக்கத்தொடர்ச்சி

நண்பா!

கொட்டாமல் சாப்பிடும் பழக்கம் நம்மில் தொடர்கிறதா? என்ற கேள்விக்குரிய பதில் பலவகையாக விரிகிறது. திருவள்ளுவர் கொட்டாமல் சாப்பிடும் பழக்கம் உள்ளவராம். சாப்பிடும் போது தற்செயலாக சோற்றில் ஒரு பருக்கை தவறி இலையைவிட்டு விலகி விழுந்தால் அதை எடுப்பதற்காக அவர் மனைவி வாசுகி சாப்பாட்டு இலைக்குப் பக்கத்தில் ஒரு ஊசியையும் வைத்து விடுவாராம். இச்செய்தியை வெளிப்படுத்தியவர்கள் கொட்டாமல் சாப்பிடும் பழக்கத்தை நம்மிடையே உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில் தான் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும். பசித்தவனுக்கு உணவே கடவுள் என்றார் சுவாமி விவேகானந்தர். உணவு கடவுளுக்குச் சமம். இதனாலேயே நமது மூதாதையர் சாப்பாட்டைப் பரிமாறியதற்குப் பின்பு 'அன்னம் பாலிக்கும் தில்லைச் சிற்றம்பலம்' என்ற தேவாரத்தைப் பாடியபின்பே சாப்பிட்டார்கள். இன்றைய காலச் சூழலில் நெருக்கடிகளும், நேரமின்மையும் உள்ள பொழுதுகளில் ஒரு பிடியையோ அல்லது ஒரு துண்டையோ எடுத்துக் கண்ணில் ஒற்றி கடவுளை நினைந்து சாப்பிடலாம்.



சாப்பாடு கிடைப்பது கடவுளைக் காண்பது போன்ற உணர்வினை உண்டாக்க வேண்டும்.

நமது கையில் கிடைத்திருக்கும் சோற்று உருண்டையில் உள்ள ஒரு அவிளை அல்லது பருக்கையை, ஒரு சோற்று உருவத்தைப் பற்றி நிதானமாகச் சிந்திந்தால் எத்தனையோ உண்மைகள் புரியவருகிறது. இந்தப் பருக்கை நெல்லாக விளைந்து அரிசியாக மாறி சோறாகச் சமைத்து நம் கைக்கு வந்திருக்கிறது. நமது வாய்மூலம் நம்முடைய வயிற்றுக்குள் போகும் இந்தப் பருக்கை பற்றி எழுத்தாளர் எஸ். ராமகிருஷ்ணன் என்றோ எழுதியது என் எண்ணத்தில் எழுகின்றது.

'இந்தப் பருக்கை வயலில் நெல்லாக முளைத்த போது உதிர்ந்து போயிருக்க லாம். ஆனால் அப்படிப் போகவில்லை. களத்தில் கதிர் அடிக்கும் போது காற்றில் பறந்து போயிருக்கலாம். அப்படியும் நடக்கவில்லை. நெல் அவிக்கும் போது தீய்ந்து போயிருக்கலாம். அங்கும் தப்பிவிட்டது. அரிசியாகத் தீட்டும் போது கூட உடைந்திருக்கலாம். அதிலும் கடந்து வந்து விட்டது. யாரோ ஒரு வீட்டிற்கு உணவாகச் சென்றிருக்கலாம். அப்படியும் போகவில்லை. நமது வீட்டிலே சமைக்கும் போது குழைந்து போயிருக்கலாம். அதிலும் தப்பி நம் உதட்டில் வந்து சேர்ந்திருக்கிறதென்றால் அது உனக்கு மட்டுமே ஆனது என்று அர்த்தம். அதை விரையம் செய்யாதே' சோற்றின் ஒரு பருக்கையே இவ்வளவு பயணம் செய்துதான்

தொடர்ச்சி 32ஆம் பக்கம்

# நியூ ரங்கனாஸ் நகைமாடம்

## NEW RANGANAS JEWEL HOUSE

உங்கள் பழைய தங்க நகைகள் கூடுதல் விலைக்கு வாங்கும்
ஒரே இடம். அடகு வைத்த நகைகள் மீட்பதற்கு
பணவசதி செய்து கொடுக்கப்படும்.
ஒரு முறை தொடர்பு கொள்ள வித்தியாசம் புரியும்.







## சேமிப்பு !

புதிய தங்க நகை சீட்டு ஆரம்பம். பதிவு செய்யும் ஒவ்வொரு
வாடிக்கையாளர்களும் தங்கநாணயம் ஒன்றை
இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். தங்க பிஸ்கட்டுகள்
அல்லாவிட்டால் பணமாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**Rangan: 647.947.2864 / 647.702.2159**

*Inside GTA Square Mall (MIDDLEFIELD & FINCH)*

*5215 Finch Ave E. Unit #164, Toronto, ON M1S 0C2*






## Siva Mailvaganam

Direct: 416 230 2991

Fax: 416 298 4664 Email: Rajah.Siva@yahoo.ca

80 Nashdene Rd Unit B 25-26 Ontario M1V 5E4

**Build An Investment & Protection For Your Loved Ones**



**BONUS: Arrange The Best Auto & Home Insurance Rates In The GTA**

| AGE | FEMALE | | MALE | | TAX FREE MONEY |
|---|---|---|---|---|---|
| | PER MONTH | MAX COST | PER MONTH | MAX COST | |
| 25 | $125.55 | $30,091 | $153.29 | $36,789 | $250,000 ++ |
| 30 | $170.68 | $40,992 | $193.71 | $46,470 | |
| 25 | $198.55 | $47,652 | $271.26 | $65,102 | $500,000 ++ |
| 30 | $288.61 | $69,266 | $350.50 | $84,127 | |

20 YRS PAY OUT PLAN

- Super Visa (100% REFUNDABLE)
- RRSP (SAVE 40%)
- RESP (SAVE UP TO $9200)
- Critical Illness Insurance (100% CASH BACK)
- Life Insurance
- Non-Medical Insurance
- Disability Insurance
- Mortgage Insurance
- Travel Insurance

**We're Hiring!**
Telemarketer, one who can speak Tamil & English.
Please contact **416 230 2991**

உங்களுக்கு ஒளிமயமான வீடு எதிர்காலத்தில் அமைந்திட என்னை அழையுங்கள்

SASI CHELVARATNAM
Sales Representative
Direct: 416.725.1125 / 416.858.4828
Bus : 416.321.6969
HomeLife / GTA Realty Inc., Real Estate Brokerage*
5215 Finch Ave. E, #201 Scarborough ON M1S 0C2
*Independently Owned & Operated



Every Story has a different Rate
What's Your's
Solution for every Mortgages
BonaFide
· New Mortagages · Refinance · First & Second Mortgages
New to Canada, Mortgage Switch, Self Employed
Pre-approvals, Residential & Commercial
Thayalan Gobalakrishnan
Mortgage Agent (GTA) Lic No:M12001612
Cell: 416.575.3211 / Fax:1.888.545.0462
E-Mail: thaya.gobal@gmail.com
தயாளன் கோபாலகிருஷ்ணன்
Call me for any Mortgage Financing Questions?



MORTGAGE NEEDS....
Subo Thevarajah, AMP
Mortgage Agent
License# M08002859
416.627.2222
subo@bmsic.com
BonaFide
Mortgage Solutions Inc.
MCAP



"Let me help you make the right choice"
SchurenSriskandarajah B.A.
Sales Representative
HomeLife/Future Realty Inc., Brokerage*
7 Eastvale Drive, Markham Ontario L3S 4N8
SCHUREN.CA • 416.333.9393





Low Mortgage Rates
TD Canada Trust
Supen Subramaniyam (Manager, Residential Mortgage)
416-844-8692 1-888-809-9154
supenthiran.subramaniam@td.com
ADVICE WHEREVER WHENEVER
Banking can be this comfortable
கனடாவின் முதன்மை வணிக நிறுவனமான TD Canada Trust வங்கியில் அனுபவ முதிர்ச்சியுடன் அடைமானக் கடன் வசதிகள் பெற்றுக் கொள்வதற்கும் அனைத்து நிதி தேவைகளுக்கான ஆலோசனைகளையும் உதவிகளையும் பெற்றுக் கொள்வதற்கும் அழையுங்கள்
Buying Home Home Equity Line of Credit
Consolitation Existing Debts Refinancing
Switching your mortgage From another financial institute

RealEstate / Mortgage / Investments

KENNEDY LAWRENCE



Bedrooms: 5 + 1
Washrooms: 3
3 Seperate units
$649,995

MAJOR MAC MARKHAM



Bedrooms: 4
Washrooms: 4
$829,000

9TH LINE & REEVES WAY



Bedrooms: 4
Washrooms: 3
$649,000

MIDLAND & STEELES



Bakery For sale
$59,00

MCCOWAN HWY 401



Bedrooms : 2
Washrooms: 2
$224,900

9TH LINE 14TH AVE



Bedrooms : 4+1
Washrooms: 6
$569,900



RE/MAX
Vision Realty Inc. Brokerage.
A. Anton Jeeva B.Eng
Real Estate / Principal Mortgage Broker
416.575.5055
*Independently owned and operated
Office: 416.321.2228
E-mail: anton.jeeva@gmail.com, Web: Antonjeeva.com
2210 Markham Rd., #1, Toronto, ON M1B 5V6

Free Real Estate Class - Call: 416.321.6969

"கனவு உங்களுடையது பொறுப்பு என்னுடையது"
REAL ESTATE List Buy Sell
TOP 5%
SALES REPRESENTATIVES IN CANADA
CHAIRMAN'S CLUB AWARD WINNER 2012
HomeLife
GTA Realty Inc., Brokerage
Raj Paramasamy Sales Representative
416-587-1619
raj.paramasamy@hotmail.com
Guaranteed Result



விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com www.tamilvanakkam.com

PRASANNA
MONEY TRANSFER - MONEY CHANGER
துரித பணமாற்றுச் சேவை
நாணய மாற்றுனர்
கொழும்பில் பிரபல்யமான
பிரசன்னா Money Change - Money Transfer
இப்பொழுது
3341 Markham Road, Suite 106
Scarborough, ON M1X 0A5
Contact: 416.293.1700